விலை ரூபா 2-00 ★ 18 பக்கங்கள்

# ஈழநாடு

வாரமலர் THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர்: 25 கார்த்திகை 11 ஸபர் 21 இதழ் 286 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 27-11-83

## சர்வகட்சி மகாநாட்டில் கூட்டணி கோரிக்கை!

(புதுடில்லி)

வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரு மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கை சர்வகட்சி மகாநாட்டில் விவாதிக்கப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படவுள்ளதாக டில்லியிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ஜயவர்த்தன நாடு திரும்பியதும் இந்த சர்வ கட்சிமகாநாடு கூட்டப்படும் என்று அறியப்படுகிறது.

ஒருமைப்பாட்டுக்குக் கட்டுப்பட்டு பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது

கூட்டணி கோரிக்கை பற்றி அமைச்சரவையில் ஜே. ஆர். ஆராயவுள்ளதாக அமைச்சர் திரு. தொண்டமான் முன்னதாகக் குறிப்பிட்டார்.

# உமாவின் இரகசிய வானொலி ஒலிபரப்பு

(கொழும்பு)

வடபகுதி தீவிரவாதஇயக்கத்தினர் வடக்கிலும் கிழக்கிலும் இரகசியமாக நடத்திவரும் இரண்டு வானொலி ஒலிபரப்புக்கள் பற்றி இரகசியப் பொலிசாருக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது.

இவ்வாறான செய்தியொன்றை 'திவயின' பத்திரிகை தனது நேற்றைய பதிப்பில் முதல் பக்கத் தலைப்புச் செய்தியொன்றை வெளியிட்டிருக்கின்றது.

'புலி' ஒலிபரப்பில் செய்தி கூறப்படுகிறது' என்று தலைப்பிடப்பட்டுள்ள அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

''புலி...புலி...புலி... என்று கூறிக் கொண்டே போய் படபடபடவென யந்திரத் துப்பாக்கிச் சத்தம் தொடர்ச்சியாக ஒலிக்கப்பட்டபின்னர்,

''நீங்கள் கேட்பது வடபகுதி தீவிரவாத இயக்கத்தின் குரலாகும்'' என்று அறிவிக்கப்படுகிறது. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள பலம்வாய்ந்த யந்திரசாதனங்களைக்கொண்டு இந்த ஒலிபரப்பு நடத்தப்படுவதாக இரகசியப் பொலிசார் தகவல் அறிந்துள்ளனர். இந்த ஒலிபரப்பு நிலையம் எங்கே அமைந்துள்ளது என்று கண்டுபிடிக்கமுடியாமல் இருந்தபோதிலும் வடக்கிலும் கிழக்கிலும் இந்த இரகசிய வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருப்பதை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

(18-ம் பக்கம் பார்க்க)

# பார்த்தசாரதி யோசனைகளை தமிழர் கூட்டணி நிபந்தனையின்றி ஏற்கவேண்டும்!'

## தொண்டமான் கூறுகிறார்

(சென்னை)

''இலங்கைத் தமிழர் பிரச்னையில் தீர்வுக்கு இந்திராவின் சிறப்புப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி தெரிவிக்கும் யோசனைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நிபந்தனையின்றி ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று அமைச்சர் திரு எஸ். தொண்டமான் நேற்று சென்னையில் கூறினார்.

புதுடில்லிப் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் வழியில் சென்னையில் தற்போது தங்கியுள்ள அமைச்சர், நம்பிக்கையூட்டும் தகவல்களை சென்னையில் வைத்து இப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

சர்வஜன வாக்கெடுப்புநடத்தப்படமாட்டாதென்றும், வடக்கு, கிழக்கை இணைத்து தனிமாநிலம் உருவாக்கவேண்டும் என்ற கூட்டணியின் கோரிக்கையை அமைச்சரவை ஆராயுமென்றும், அவர் புதிய தகவல்களை வெளியிட்டார்

இலங்கைத் தமிழர் பிரச்னை தீர்வில் தன்னையும் முக்கியமான ஒருவராக ஆக்கிக் கொண்டுவிட்ட அமைச்சர் தொண்டமான் இப்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கையில் ஒருமைப்பாட்டினை பாதுகாக்கும் அதே சமயப் பிராந்திய சுதந்திரத்தினை வலியுறுத்தும் வகையிலேயே இப்போதைய பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன இலங்கையில் தமிழர்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும்; தன்னுதிக்க உரிமையுடன் சிங்கள மக்களுடன் சரி

(18-ம் பக்கத்தொடர்ச்சி)

## "இலங்கைமீது இந்திரா போர் தொடுக்கலாம்!"

### பல்கலைக்கழக பேராசிரியர் மகஜர்

நியுயோர்க், நவ. 26

''அடுத்தாண்டு இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் அரசியல் ஆதரவு திரட்டுவதற்காக இந்தியப்பிரதர் இலங்கைமீது போர் தொடுக்கக்கூடும். இதிலிருந்து இலங்கையைப் பாதுகாக்க அமெரிக்கா இலங்கைக்கு இராணுவ உதவி அளிக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் முக்கிய மகஜரொன்றை பென்சில்வேனிய பல்கலைக்கழக பேராசிரியர் திரு. ரெயினோல்ட் ராஜபக்ஸ டாக்டர் டென்சிஸ் பெர்னாண்டோ ஆகியோர் தலைமையிலான தூதுக்குழு அமெரிக்க பாராளுமன்றத்தின் மனித உரிமைகள் பற்றிய துணைக்கமிட்டியின் தலைவர் திரு. காஸ்யாத்ரோனிடம் கையளித்துள்ளார்.

அம்மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

''தமிழ்நாட்டில் தி. மு. கழகத்தின் ஆதரவைப் பெற இந்திரா முயற்சிக்கிறார். எனவே தி மு க. ஆதரவைப் பெற இந்திராகாந்தி இலங்கை மீது போர் தொடுக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமுள்ளன. இலங்கையிலுள்ள பிரிவினைவாதிகளுக்காக பிரதமர் இந்திரா இலங்கை மீது ராணுவ ரீதியில் தலையிட வேண்டுமென தி. மு. க. வற்புறுத்தி வருகின்றது. அடுத்த பொதுத்தேர்தலில் பிரதமர் இந்திராவின் வெற்றிக்கு தி. மு. க வின் ஆதரவு முக்கியமானது.

''இலங்கை போன்ற ஜனநாயக தத்துவங்களில் நம்பிக்கை கொண்டுள்ள சிறிய நாடுகள் வெளிநாடுகளின்

[18ம்பக்கம் பார்க்க]

## வர்த்தக ஒலிபரப்பின் முன்னோடி எஸ். பி. மயில்வாகனம் லண்டனில் காலமானர்

[கொழும்பு]

இலங்கை வானொலில் வர்த்தக ஒலிபரப்பின் சிரேஷ்ட அறிவிப்பாளராக இருந்துஒய்வு பெற்றவரான எஸ். பி. மயில்வாகனம் லண்டனில் காலமானர்.

திரு. மயில்வாகனம் அண்மையில் இடம்பெற்ற கலவரங்களையடுத்து இங்கிலாந்துக்குச் சென்று தமது புதல்வருடன் தங்கியிருந்தார்.

இவரது புதல்வர்களில் ஒருவர் இங்கிலாந்திலும் மற்றவர் ஜப்பானிலும் இருக்கின்றனர். மகள் நைஜீரியாவில் இருக்கிறார்.

இருதய நோயினால் மரணமான திரு மயில்வாகனத்துக்கு 58 வயது.

1954ம் ஆண்டு தொடக்கம் 1974ம் ஆண்டுவரை இலங்கை வானொலியில் வர்த்தக ஒலிபரப்பில் சிரேஷ்ட அறிவிப்பாளராகக் கடமையாற்றினர். இலங்கை வானொலியில் இவர் சேரும்போது அரை நேரம் மாத்திரமே தமிழில் வர்த்தக ஒலிபரப்பு நடைபெற்று வந்தது. இவர் ஒய்வு பெறுகையில் 12 மணி நேரம் வர்த்தக ஒலிபரப்பு இடம் பெறும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தது.

இலங்கையில் மாத்திரமின்றி இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் தமிழ் ஒலிபரப்பு நேயர்கள் மத்தியில் அவர் பிரபல்யம் பெற்றவராய் இருந்தார்

திரு மயில்வாகனத்தின் இறுதிச் சடங்குகள் லண்டனில் நடைபெறும் என்று தெரிய வருகின்றது.

இவரது மனைவி திருமதி செந்தில்மணி மயில்வாகனமும் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராக இருந்து ஒய்வு பெற்றவர்.

## இடம்பெயர்ந்த ஆசிரியர் பிரச்னை:

# இடையூறுகளை விளக்கினல் உடன் நடவடிக்கை!

(ஏ. வி. மாணிக்கம்)

''ஜூலை வன்செயல்களால் பாதிக்கப்பட்டுஇடம்பெயர்ந்த ஆசிரியர்கள் வேலைக்குத் திரும்பிய பின்னர் அவர்களுக்கு ஏற்படும் இடையூறுகளை நேரில் விளக்கினால் உடன் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஈ. எல். விஜேமன்ன தம்மிடம் தெரிவித்திருப்பதாக இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. க. சிவஞானம் அறிக்கையொன்றில் குறிட்பிட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியர் காங்கிரஸின் தலைவர் திரு. எம். எஸ். செல்லச்சாமியும், பொதுச் செயலாளர் திரு. சிவஞானமும் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து பாதிக்கப்பட்ட ஆசிரியர் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினர். அதன் பின்னரே பின் வரும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டதாக ஆசிரியர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஆண் ஆசிரியர்கள் கட்டாயம் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும், வேலைக்கு திரும்புபவர்களுக்கு 750/- ரூபா தற்பொழுது வசிக்கும் கல்விப் பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் முற்பணமாக வழங்குவார். அந்த முற்பணம் வேலைக்குத் திரும்பிய பின் சம்பளத்தில் கழித்துக்கொள்ளப்படும். வேலைக்கு திரும்பியவுடன்

(18-ம்பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

I atsun Sunny B 310 12 Sri குளிரூட்டியுடன் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு சிவபதி' பொற்பதி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 10138

தெல்லிப்பழையில்மகாஜனா, யூனியன் கல்லூரிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள 8 வீடு கட்டக்கூடிய சதுரக் காணி விற்பனைக்குண்டு மின் சாரவசதியுமுண்டு. க. இளைய தம்பி. ''தனவாசா'', D. R. O. கந்தோர் ஒழுங்கை, தெல்லிப்பழை 10018

திருநெல்வேலியில் நாலு அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 10/7, சிவன்கோவில் வீதி. திருநெல்வேலி. 10047

இறக்குமதி செய்யப்பட்ட இரண்டு வயலின்கள் ½, ¾அளவுகளில் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. திருமதி அரசசிங்கம் 332 (பழைய இல) நாவலர் றோட், நல்லூர் தெற்கு. 10088

நல்ல நிலையிலுள்ள மூன்று ஆசனங்கள்கொண்ட 'பேஜோ 404 ஸ்ரேசன் வகன்' 9 ஸ்ரீ தொடர் இலக்க கார் உடன் விற்பனைக்குண்டு, தொடர்பு: மே/பா. திருமதி ஆர். பி. வில்லியம்ஸ், 'சிறம்பான் ஹொட்டேஜ்' 19. சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 10126

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி வீதி, 91/14A இலக்க ஒரு பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு அ. அருளப்புவுடன் நேரில் உடன் தொடர்பு கொள்ளவும். 10125

பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதி பூங்காவனச் சந்தி (6 பரப்பு) ¼ ஏக்கர் றோட்டு முகப்பு, குடியிருப்பு. நெற்களஞ்சியம் அமைப்பதற்கும், நெல் கொள்வனவு, சந்தைப்படுத்துவதற்கும் கேந்திரஸ்தானம் க. சுப்பையா: பிரதான வீதி, தெல்லிப்பளை. 9902

நஷனல் வீடியோ டெக் 8610 - 135 பதிவு செய்யப்பட்ட கசெற், 26 அங்குல T. V. கலர் மற்றும் ஒன்றரை லோ வாட் டீசல் லைற் என்ஜின் விற்பனைக்கு உண்டு. நியூ ரேய்ஸ், கந்தசாமி கோவிலடி, கிளிநொச்சி. 10079

சுழிபுரம் பறுளாய் விநாயகர் கோயிலுக்கு அண்மையில் வீடுகட்டக்கூடிய 6½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு க. சிவலோகம், குட்டியாண்டி வளவு, ஐயனார் வீதி, கன்னாகம். 10113

3 பரப்பு காணி கட்டப்பிராய், கோப்பாய் தெற்கில் பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தைக்கு அண்மையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ''ஷப்ரு'' 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி. இல: 22073. (10086)

கரவெட்டி கரணவாய் வடக்கு நவிண்டிலில் உடுப்பிட்டி—பருத்தித்துறை றோட் ஓரமாக மன்னன் தோட்டம் எனப்படும் (8) பரப்பு காணி விற்பனைக்குண்டு பிரதானமானவர்கள் மட்டும் விலை குறிப்பிட்டு எழுதவும் இல: 2, 40வது லேன், வெள்ளவத்தை. 10119

யாழ் நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா (9916)

## விற்பனைக்கு

C-90 ஹொண்டா 84 ஸ்ரீ தொடர்பிலக்கம் புதியது. கலர்; சிகப்பு. 1வருடம் பாவித்தது. 98% நல்ல நிலைமையில் உண்டு. வீடியோ டெக் மாற்றியும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு; 4, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். காலை 9.00 மணிக்கு முன் பார்வையிடலாம். 10164

சுதுமலை மத்தியில் தாவடி-மானிப்பாய் பிரதான வீதியில் பாடசாலை, தபாற்கந்தோருக்கு அருகாமையில் தென்னை, மாமரங்களுடன் கூடிய குடியிருப்புக்காணி 1½ பரப்பு விற்பனைக்குண்டு, உடன் தொடர்பு கொள்ளவும். ஆ. தர்மலிங்கம், சுதுமலைமத்தி, மானிப்பாய். 10166

கோண்டாவில் கிழக்கில் பலாலி றோட்டிற்கு அண்மையில் 3பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 76, சேர். பி. இராமநாதன் றோட், யாழ்ப்பாணம். 10171

யாழ். பெரிய கடை 15நிமிட நடை தூரத்தில் நாவலர்வீதிக் கப்பாலுள்ள கடைச்சாமிவீதியில் 4 பரப்புக் காணிவரை விற்பனவுக்குண்டு. பிரித்தும் கொடுக்கலாம். 19, கடைச்சாமி வீதி, நீராவியடி. 10170

கோண்டாவில் பலாலி வீதி. C. T. B. டிப்போவுக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி T. E. பாலசுந்தரம், பாமினி கிறஷர், கோண்டாவில் 10168

''பண்ணையில் வளர்த்த பன்றிகளின் இறைச்சி Pork) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: வறணி பாம், 145. நியு மார்க்கட், யாழ்ப்பாணம் 10154

''நல்ல இனப் பன்றிக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அண்ணா பாம், இணுவில்.'' 10155

இருபாலை பஸ் றோட்டில் ஐந்து ஆறு பரப்புத் துண்டுக் காணிகள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- ஜோர்ஜ் ஜோசேப் ஸ்ரேசன் றோட், கோண்டாவில். 10150

பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு அருகாமையில் பிரதான வீதியிலிருந்து 100 யார் தூரத்தில் கந்தஉடையார் வீதியில் 5 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன்கூடிய மாடி வீடு (8 படுக்கை அறைகளுடன்) விற்பனைக்குண்டு கே. குமாரசாமி(மாணிக்கம்) ''அன்ரனி வாசா'' மெயின் வீதி, புலோலி மேற்கு, பருத்தித்துறை 10153

வேலணை, வங்களாவடி புங்குடுதீவு றோட்டில் இரண்டு கடைகள், பேக்கறி, வேப்பு, பனைகளுட்பட 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்) விபரங்கட்கு க காங்கேசு 10/5 சிவன்கோவில் வீதி திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 10145

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி கில்னர் ஒழுங்கையில் நாற்புறமும் மதிலும், கட்டுக் கிணறு, புதிய மலசல கூடமு கொண்ட இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தாசன் மரச்சாலை, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். 10144

## விற்பனைக்கு

ஆறுகால் மடத்தடிக்கு அண்மையில் மானிப்பாய் றோட்டில் யாழ். மாநகர எல்லைக்குள் ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குண்டு நேரில் சந்திக்கவும். 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10160

மாவிட்டபுரம், காங்கேசன்துறை வீதியில், கந்தசாமி கோவிலுக்குச் சமீபத்தில் 4 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: S. அரியரத்தினம், K. K S. வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 10157

15 ஆசன ELF, Hiace மினி வான்களுக்குப் பொருந்தக்கூடிய ஆசனங்கள் Seats) புதிய நிலையில் விற்பனைக்குண்டு இல 3. கோவில் வீதி, வேதக் கோவில் அருகில்), நுணுவில் மேற்கு, நுணுவில், சாவகச்சேரி. 10159

தனங்கிளப்பு உப தபாற்கந்தோருக்கு ஒருமைல் தூரத்தில் கேரதீவு றோட்டில் வீடுகட்டுவதற்கேற்ற 4 பரப்புக்காணியும் அத்துடன் அடுத்து 74 பரப்பு தென்னை முந்திரிகை செய்யக்கூடிய தோட்டக் காணியும் (தொழிற்சாலை அமைக்கவும் ஏற்றகாணி) விற்பனைக்குண்டு. விபரங்கட்கு K. D S. ஆனந்தம், மகிளடி ஒழுங்கை, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி 10116

ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி, செம்பியன் ஒழுங்கை அருகில் மூன்று காணிகள் பக்கம் பக்கமாக விற்பனைக்குண்டு பிரித்தும் கொடுக்கப்படும். 57, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். 10149

மானிப்பாய் தெற்கு மெதேஸ் லேனில் 2½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு, N. பத்மராஜா 40/1, 2வது கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 10148

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையில் 95/12 இலக்க வீட்டுடன் கூடிய காணிஉடன் விற்பனைக்குண்டு. மு இராஜகோபால்(Post Master) No-103, ஐயனார் கோவிலடி யாழ்ப்பாணம். 10174

## தேவை

யாழ். நகரில் இருந்து மூன்று மைல் தூரத்தில் காங்கேசன்துறை வீதியோரத்தில் அமைந்துள்ள பிரபல ரெடிமேற் காமன்சில் வேலை செய்ய அனுபவஸ்தர்கள் தேவை. பதவிகள்: நிர்வாக இயக்குநர் (ஆண்), சுட்டெழுத்தாளரும் கணக்கு லிகிதரும், பிரசியர் கட்டர், லேடீஸ் எல்லாஉடுப்பு வகைகட்கும் கட்டர் சிமோக்கிங், எம்பிரோடிங் தெரிந்தவர்களும் சகல உடுப்புகளும் தைக்கக் கூடியவர்களும். தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். தகுதியுள்ளவர்கள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்குக: விண்ணப்பங்களில் பெயர்-முகவரி-முன்னர் வேலை செய்த ஸ்தாபனம் - செய்த வேலை-பெற்ற சம்பளம் - விலகிய காரணம்-பெற விரும்பும் சம்பளம், (விவாக நிலைமை, குடும்ப நிலைமை என்பவற்றை குறிப்பிடவேண்டும்) வெளி மாகாணங்களில் வேலைசெய்து, அனுபவத்துடன் வன்செயலில் இடம் பெயர்ந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். முகவரி: வசந்தா பேபி காமன்ஸ், C/o A. S. பொன்னம்பலம், திருப்பதி, கே.கே.எஸ். றோட், இணுவில். 10028

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி. யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 10120

## வகுப்புக்கள்

Piano வும், Accordian னும் சனி, ஞாயிறு உட்பட திருமதி தோமஸ், கதிரை மாதா கோவிலின் வாயிற்புற வீதி, சில்லாலை. (மகளிர் மட்டும்) 8914

## WANTED

"Wanted small house or Annexe on monthly rent or lease for a small family in Jaffna town or anywhere within the peninsula." Apply Advt No:- 10172, C/o Eelanadu, Jaffna. 10172

## காணவில்லை

கடந்த 6 மாதங்களாக நடராஜா என்ற 13வயதுடைய எனது மகனைக் காணவில்லை. உயரம் 3½அடி. வலது கை சிறிது வளைந்திருக்கும் சிவந்த நிறம், கண்டவர்கள் தயவு செய்து தகவல் தரும்படி மிகவருந்திக் கேட்டுக்கொள்கிறேன். ஜெ. முருகேசு, முல்லைத்தீவு றோட், மாங்குளம். 10158

## சேவை

சகலவித நில அளவைக்கும் தொடர்பு கொள்க: ஆ. தம்பிராசா A. Thambirajah உதவி அளவை நாயகம் Asst. Surveyor General (Retd.) அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 9920

வர்த்தக ஸ்தாபனங்கள், நிதி நிறுவனங்கள் என்பனவற்றுக்கு கணக்கு பரிசோதனைக்கு உகந்த முறையில் கணக்கு புத்தகங்கள் எழுதி Trial Balance, Bank Reconcilition, Blance Sheet என்பன தயாரித்து கொடுக்கப்படும். வருமானவரி சம்பந்தமான ஆலோசனையும் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10075 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10075

## தேவை

கேற், கிறில் செய்வதில்அனுபவமுள்ள வெல்டர்களும் கமமாலை வேலையில் அனுபவமுள்ளவர்களும் தேவை. நேரில் வரவும் நியு டுர்க்கா அயன் வேக்ஸ், சண்டிலிப்பாய் மத்தி. 10156

ஊதுபத்தி உருட்டுவதில் அனுபவமுள்ளவர்களும், பயிலுனர்களும் தேவை. நியாயமான வேதனம் வழங்கப்படும். T. N. K. ராஜா 14. குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 10175

## வாடகைக்கு

வியாபாரத்திற்குஏற்றகடைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். நேரில் சந்திக்கவும். 68, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10162

## FOR SALE

Two Computers new unused Commodore 64 and Commodore Super Pet with CBM8050 DiskDrive and Printer. Offers also accepted separately for each item Advt. No: 10094, Eelanadu, Jaffna. 10094

## பயிற்சி

தையல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு காலை 9-00முதல் 11-00வரை கிழமை நாட்களில் பி. பகல் 2-00 முதல் 4-00 வரை விபரங்கள் நேரில். ஆசிரியை ஜெயமணி 616/3 கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 10106

தையல் பயிற்சி நிலையம் கொழும்புத்துறையில் விபுலானந்த வீதியில் முழுமையான மூன்று தையல் பயிற்சி வகுப்புகள் 1-1-84 முதல் ஆரம்பிக்கப்பட உள்ளன. 15-12-83க்கு முன்பாக விரும்புகின்றவர்கள் தமது பெயர்களை கீழ்க்காணும் முகவரியில் பதிவு செய்து கொள்ளவும். Officer-in-Charge 145, Main street, Jaffna. 10169

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

### சமையற்காரர் தேவை

கூட்டுறவுச் சைவ சிற்றுண்டிச்சாலைக்கு பலகாரங்கள், சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும், தேநீர் தயாரிப்பதற்கும் திறமைவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது 05-12-83 க்கு முன் நேரிலோ, கடிதமூலமோ நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி-நெல்லியடி,
ப. நோ. கூ சங்கம்.
கரவெட்டி. 10140

### கலண்டர்கள் 1984

ஐந்து விதமான வகைகளில் உங்கள் விளம்பரங்களுடன் கூடிய அன்பளிப்புக் கலண்டர்கள், வர்ணப்படங்களுடன் நவீன முறையில் அச்சிட்டு வழங்கப்படும்.

ஏசியன் அச்சகம்
28, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
10173

பொலித்தீன், செலோபின், சொப்பிங் பேக் வகைகள், பேப்பர் பேக்குகள், பேப்பர் வகைகளை சிறந்த முறையில் பிரிண்ட் செய்துகொள்ளலாம்.

**New S. K. PRINTING WORKS**
7, மின்சார நிலைய வீதி 2-வது ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(10115)

**External - Studies Open - University** என்பவற்றில்

பதிவு செய்த / செய்யவுள்ளவர்க்கான (Bio - Science) பிரத்தியேக வகுப்புகள் 84 ஜனவரியில் ஆரம்பமாகவுள்ளன. அனுமதிக்கு சுயவிலாச முத்திரையிட்ட உறையுடன் 10 - 12 - 83 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**J. M. இரவீந்திரன்**
22, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்.நக
10129

# வார மலர்

ஈழநாடு

EELANADU VARAMALAR


# இலங்கையில் தமிழர் பீதி: புதுடில்லி நீக்க வேண்டும்

உலக நாடுகளின் கவனத்தை இன்று ஈர்த்திருக்கிறது புதுடில்லி!

இன்று போல் பெருந்தொகையான உலகத்தலைவர் ஒன்று கூடியிருப்பது அண்மைக்கால வரலாற்றில் இதுவே முதற்தடவை என்று கூறப்படுகிறது:

பெருந்தொகையான தலைவர்கள் கூடி உலகின் பல்வேறு பிரச்னைகள் குறித்து விவாதித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் புதுடில்லி உட்பட இந்தியப் பத்திரிகைகளெல்லாம் இதுபற்றி அதிக அக்கறை காட்டாது அயல்நாடு ஒன்றின் பிரச்னைமீதே கவனத்தைச் செலுத்தி வருகின்றன. இதில் அர்த்தம் உள்ளது. நியாயமும் உள்ளது.

எண்ண முடியாது. எனவே இத்தருணத்தைத் தக்கவிதத்தில் பயன்படுத்த ஜனதிபதி தவறமாட்டார் என்றே பரவலாக நம்பப்படுகிறது.

**குஹநாதன்.**


''உலகம் இன்றிருக்கும் நிலையில் புத்தபெருமானும் அண்ணல் மகாத்மாவும் போதித்த சாத்வீக முறையினல்தான் எந்தவொரு பிரச்னையிலிருந்தும் மீள முடியும். ஆயுதப் போராட்டங்களால் இரத்தக் களரியை ஏற்படுத்த முடியுமே தவிர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது'' என்று 'காமன்வெல்த்' தலைவர்கள்

## 'பழைய கதை' தொடர்வது நாட்டுக்கு நல்லதல்ல

சிக்கல்மிக்கதும் உலகின் இதயத்தைத் தொட்டுள்ளதுமான இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு புதுடில்லி தீர்வு காணுமா என்பதே இன்று எல்லார் மனதிலும் எழுந்துள்ள கேள்வி.

ஜூலை கலவரங்கள்பற்றி அப்போது ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கருத்துத் தெரிவித்தபோது, நாகரிகத்தில் இலங்கை பல ஆண்டுகள் பின்தள்ளிப் போய்விட்டதாகச் சொன்னர். இப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாவிட்டால் மேலும் பல ஆண்டுகள் நாட்டின் நாகரிகமும் முன்னேற்றமும் பின்தள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கும் என்ற உண்மையை ஜனதிபதி உணராதிருக்கமாட்டார்.

இந்தப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இது போன்றதொரு சந்தர்ப்பம் இனிமேல் ஏற்படுமென்று



மத்தியில் ஜனதிபதி ஜெயவர்த்தன ஆற்றிய உரை, இத்தகைய ஒரு தலைவரின் நாட்டிலா இத்தனை அனர்த்தங்கள் நிகழ்ந்தன என்ற ஒருவித ஆச்சரியத்தை சபையில் பலருக்கும் அளித்திருக்கும் என்பது உண்மையே.

இரத்தக்களரியை அவர் விரும்பாதவர்தான். ஆனல் அவராலும் அதனைத் தடுக்க முடியவில்லை என்று முன்பெல்லாம் அவரே வாய்விட்டுச் சொல்லியிருப்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினது கொள்கையும் அகிம்சையே என்று திரும்பத்திரும்ப அவர்கள் கூறியிருக்கின்றனர். தமது இலக்கை அடைவதற்குத் தம்மையும் மிஞ்சியே இளைஞர்கள் செயல்படுகின்றனர் என்றுதான் கூட்டணியும் கூறுகிறது. இக்கூற்றுக்களிலிருந்து இலங்கை அரசினதும் தமிழர் தலைவர்களினது இக்கட்டான நிலைமையை நாம் அறிய முடிகிறது. ஆனல் அரசும் கூட்டணியும் சேர்ந்து இந்த இக்கட்டான நிலைமையை எப்போதோ தவிர்த்திருக்கலாமென்றே அவதானிகள் கருதுகின்றனர். இதிலும் நிறைய உண்மை உண்டென்றே கூறத் தோன்றுகிறது. 77ல் ஐ. தே. கட்சி ஏகப் பெரும்பான்மை ஆதரவுடன் பதவிக்கு வந்தவுடன் தமிழர் பிரச்னைக்கு நிச்சயம் நல்ல தீர்வு கண்டிருக்கலாம். வயதிலும் அறிவிலும் முதிர்ச்சிபெற்றவரான திரு. ஜெயவர்த்தன அதனைச் செய்வாரென்றே பலரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனல் போகப்போக அவரது நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு ஏமாற்றத்தையும் அதிருப்தியையுமே வளர்த்தன.

பொறுமை இழந்த தமிழ் இளைஞர்கள் தீவிரவாதச் செயல்களில் இறங்கினர்கள். ஆத்திரம் கொண்ட அரசு பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் முதலான நடவடிக்கைகள் மூலம் இளைஞர்களை உஷார் படுத்தியதே தவிர அவர்கள் வேட்கையைத் தணிக்கவில்லை. இதெல்லாம் பழைய கதை.

இனிமேலும் பழையகதை தொடர்வது நாட்டுக்கு எவ்விதத்திலும் நல்லதல்ல. ஆனலும் கூட்டணித் தலைவர்களை புதுடில்லியில் சந்திக்க ஜனதிபதி மறுத்தது இங்குள்ள நல்லெண்ணத்தைக் கொண்ட அனைவருக்கும் பலத்த சந்தேகத்தையும் பீதியையும்கிளப்பியுள்ளது. இந்தச் சந்தேகத்தையும் பீதியையும் புதுடில்லியே தீர்த்துவைக்க வேண்டுமென்று பிரார்த்திப்போம்.

### வறுமையும் கல்வியும்

''கல்வியில் தகைமை பெற்றவர்களாயிருந்தும் கூட வறுமையின் காரணமாகப் பலருக்குக் கல்வி எட்டாக் கனியாக உள்ளது. இதனல் இவர்களின் ஆற்றல்களைச் சமூகம் இழக்கவேண்டியுள்ளது. இந்த இழப்பை சமூகத்தால் தாங்க முடியாது.''

—அறிஞர்
ஏ. எம். ஏ. அஸீஸ்.

# புலவர் நாவில் பொருந்திய இராமநாத வள்ளல்



புகழ் பூத்த பொன். இராமநாதனை உருவாக்கிய பெருமை முப்பெருந்துறைகளில் முறையே நிபுணராயிருந்த மூவரைச் சாரும் என்பர் அவரது தாய் மாமனராய சேர் முத்துக்குமாரசாமி வழிகாட்டியாயும் அரசியற் குருவுமாயிருந்தவர். அவரின் அடிச்சுவட்டிலே இராமநாதன் அணி நடை நடத்தல் வேண்டும் என்று வழிப்படுத்திய பெருமை ஆறுமுகநாவலரவர்களுக்கே உரியது. தமிழ், தமிழ்க் கலாசாரம் முதலிய துறைகளை இராமநாதன் நன்கறிந்து முறுக்கேறுவதற்கு மூலகாரணராயிருந்தவர் தமிழ் தந்த தாதா சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களாவர். பிள்ளையவர்கள் சென்னை இராசாங்கக் கல்லூரியை அலங்கரித்த காலத்திலே இராமநாதன் அங்கே மாணுக்கனுய் உருவாகினர்.

இலங்கைக்கு மீண்ட இராமநாதன் சட்டத்துறையில் நாட்டங்கொண்ட காலத்தில், பறங்கியருள் பறங்கியர் என்று பெரும் புகழ் பூத்திருந்த றிச்சார்ட் மோகன் என்னும் நிபுணர் இராமநாதனுக்குச் சட்டத்துறையில் பயிற்சியளித்து ஆளாக்கிவிட்டார்.

பொன்னம்பலத்தருமவான் என்று இலங்கையெங்கும் புகழ் பெற்ற பெரியார், இராமேஸ்வரத்தில் வழிபாடு செய்து பெற்ற தம் மைந்தனுக்கு அத்தலத்தின் தெய்வமாய இராமநாதன் என்று பெயரிட்டார். இராமநாதப் பெருமானின் திருவருள் இராமநாதப் பெரியாருக்கு நிறையக் கிடைத்தது.

திருவருள் பெற்ற மேம்பாட்டினலே பெரியவராய இராமநாதன் இலங்கைச் சட்டசபையில் 1879ம் ஆண்டு முதல் 1930ம் ஆண்டுவரை நியமன அங்கத்தவராயும், உத்தியோக அங்கத்தவராயும், உத்தியோகப்பற்ற அங்கத்தவராயும் தெரியப் பெற்ற அங்கத்தவராயும் வீற்றிருந்து சபையை அலங்கரித்தார். அவர் 1910ம் ஆண்டுமுதல் 1920ம் ஆண்டுவரை இலங்கைவாழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக இருமுறை நடந்த தேர்தல்களில் பெருவெற்றிபெறும் பேறு பெற்றிருந்தார்.

(18ம் பக்கம் பார்க்க)

**க. சி. குலரத்தினம்**


## பவர்ஸ் உரம்

இணையற்றது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11. கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (B)

### ரியூட்டறி ஒரு பெரும் பிரச்னை

# 'சனல் பிராக்டிஸ்' முறையை பாடசாலை ஆசிரியர்களுக்கும் கொடுத்தால் என்ன?

**பல** ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு விடு முறையில் வந்தபொழுது வழக்கம் போல யாழ்ப்பாணம் வந்திருந்தேன். அப்பொழுது என்னைக்காண்பதற்கு ஓர் ஆசிரியர் வந்திருந்தார். உரையாடிக் கொண்டிருக்கும் பெழுது சமீபத்தில் கல்வி அதிகாரியிடமிருந்து ஒரு சுற்றறிக்கைவந்திருந்ததென்றும் அதில் ஆசிரியர்கள் ரியூட்டறிகளில் (Tutories) படிப்பிக்கப்படாதென்றும், ரியூட்டறிகளில் படிப்பது உசிதமில்லையென்று பாடசாலைமாணவர்களிடம் கூறுமாறும் மகாவித்தியாலய அதிபர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக அந்த ஆசிரியர் என்னிடம் கூறினுர். ஆனுல் சுற்றறிக்கை அனுப்பிய கல்வி அதிகாரியே ஒவ்வொருநாளும் தனதுமகளை மோட்டார் வண்டியில் தானே வண்டியைச் செலுத்திக் கொண்டு ரியூட்டறியில் விடுபவர். இதுதான் தற்போதைய ஊர் நடப்பு என்று கூறினுர் ஆசிரியர். வழிகாட்ட வேண்டிய மனிதனேமுரணை கருமத்தைச் செய்தால் மற்றத்தாய் தந்தையர் பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

ஏதோ பாடசாலைப்படிப்பில் குறையிருப்பதால் தான் இவர் போன்ருேர் இம்மாதிரி நடக்கிருர்கள் என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. பாடசாலைப் படிப்பில் குறையிருந்தால் ஒன்றில் பாடசாலைக் குறையை நிவர்த்தி செய்யவேண்டும் அல்லது ரியூட்டறி போன்றவிடங்களில் தஞ்சமடையவேண்டும். நான் விசாரித்தளவில் முக்கியமான பட்டினங்களில் உயர்தர க. பொ. த மாணவர்கள் பாடசாலைப் படிப்புடன் ஒன்றில் ரியூட்டறியில் படிக்கிருர்கள். அல்லது (private tuition) தனிப்பட்டபாடம் கேட்கிருர்கள். இதனுல் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. பாடசாலைப் படிப்புடன் பரீட்சைக்குச் சென்ருல் கூடிய சித்திக்கு வாய்ப்பில்லை. இங்கே சித்தியென்று குறிப்பிடும் பொழுது மறு பரீட்சைகளில் சித்தியடைவது மாதிரியல்ல. இங்கே, பல்கலைக்கழக அனுமதியும் சேர்ந்திருக்கிறது. ஒரு விதமாகப் பார்க்குமிடத்து, பாடசாலைகள் சாதாரண சித்திக்குப் படிப்பிக்கிருர்கள் என்றும் ரியூட்டறிகள் பல்கலைக்கழக அனுமதித் தராதரத்திற்குப் படிப்பிக்கிருர்கள் என்றும் தோன்றுகிறது. இப்படியானுல், இதை ஏற்றுக் கொண்டு பாடசாலையில் க. பொ. த. உயர்தர வகுப்புகளில் முக்கிய விடயங்களைமாத்திரம் கற்பித்துவிட்டு மிகுதியை ரியூட்டறியில் கற்கவிட்டால் என்ன? அவ்வாருனுல் இந்த முறை சீர்படுத்தப்பட வழி பிறக்கும்; இரு படிப்பையும் ஒன்றிணைக்கலாம். இது சிந்தனைக்குரிய விஷயம்.

இந்த ஒன்றிணைப்பினுல் எவ்வளவோ நன்மைகளுண்டு. ஒரே பாடத்தை இரண்டிடத்தில் கேட்கக் கெட்டிக்காரப் பிள்ளைகளுக்குச் சலித்துப் போகும். ஒரு பாடத்தைப் பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட திகதியில் படிப்பித்தால் அதே பாடத்தின் நுணுக்கத்தை ஒரு சில தினங்களுக்குப்பின் ரியூட்டறியில் படிப்பிக்கலாம். பாடசாலை வகுப்புகள் காலையிலென்ருல், ரியூட்டறி வகுப்புகளைப் பின்னேரம் வைக்கலாம். இப்போது என்ன நடக்கிறதென்ருல் காலை நாலு ஐந்து மணி தொடக்கம் இரவு ஒன்பது பத்து மணிவரையும் மாணவர்கள் அங்குமிங்குமாய் அலைகிருர்கள்.

### பாடசாலைப் போதனை பாதிக்கப்படும்

ரியூட்டறி ஆசிரியர்கள் விசேட திறமையுள்ளவர்களாயிருப்பார்களென்ற கருத்துடனேயே இதனைத் தெரிவித்தேன். அதாவ்து, இவர்கள் சிறப்புப் பட்டம்அல்லது அதிக அனுபவமுள்ளவர்களாயிருப்பார்கள். அல்லது இளைப்பாறிய தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் என்றே கருதினேன். ஆனுல் பல ரியூட்டறிகளில் பாடசாலையில் படிப்பிக்கும் அதே ஆசிரியர் அதே பாடத்தைப் படிப்பிப்பதென்ருல் அது வரவேற்கத்தக்கதல்ல. ஒருவர் ஒருவித வேலையை இரட்டிப்பாகச் செய்வது கஷ்டம். பாடசாலையில் எப்படிப் படிப்பித்தாலும் மாதாந்தச் சம்பளம் கிடைக்கும். ஆனுல் ரியூட்டறியில் தரம் குறைந்தால் மாணவர்கள் வருகை குறைந்துவிடும். இதனுல் வருவாய் குறையும். ஆகையால் ஆசிரியர் தமது திறனை ரியூட்டறியில் தான் கூடக் காட்டுவார். இதனுல் பாடசாலையில் இவர் கல்வி புகட்டுதல் குன்றும்.

### ஒருமாற்று முறை காண்போமா?

இப்படியான சூழ் நிலையில் என்ன செய்யலாம்? ரியூட்டறிக்குக் கொடுக்கும் பணத்தை ஏதாவது ஒரு முறை வகுத்து ஆசிரியர்களுக்குக் கொடுத்து மாணவர்களை அங்கும் இங்கும் அலையவிடாமல் ஒரே இடத்தில் அதாவது பாடசாலையில் கல்வி புகட்டலாம். அரசாங்க வைத்யருக்கு கொடுத்திருக்கும் வசதியை (channel practice) போல ஆசிரியர்களுக்கும் கொடுத்தால் என்ன? இதைக்கல்வி அதிகாரிகளால் செயற்படுத்த முடியுமோவென்று கூறமுடியவில்லை.

பாடசாலை உயர்தர மாணவர்களுக்கு நடக்கும் பயிற்சி பற்றியே மேலே கூறினேன். ஆனுல் இப்பொழுது நடந்து கொண்டிருப்பது நடக்கத்தான் வேண்டுமா? என்ற கேள்வியை எழுப்பவேண்டும். ஒரு வேளை பல்கலைக்கழக அனுமதி முறையாலே இம்மாதிரிக் கல்வி கற்க வேண்டியிருக்கிறது என்று நாம் வாதாடலாம். இல்லாவிட்டால் ரியூட்டறிகளே தேவையில்லை எனலாம். ரியூட்டறிகள் மூலம் பரீட்சையில் சித்தியடையலாம். ஆனுல் மாணவர்கள் சிந்தனை வல்லமையை ஓரளவு இழந்துவிடுவார்கள். பல்கலைக்கழகங்களில் சில பரீட்சை முறைகளால் சிந்தனை வல்லமை குறைவதானுல் ரியூட்டறியின் முறையைப்பற்றி என் சொல்வது? இந்த உதாரணத்தைப் பாருங்கள்: கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு முறையை மாற்றவேண்டி நேரிட்டது. விசேஷ கணித பி. ஏ. பட்டத்தில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தால் 'ருங்லர்' (Wrangler) என்ருெரு சிறப்புப் பட்டம் கிடைக்கும். இரண்டு நூற்ருண்டுகளாக வருடாந்தப் பட்ட விழாவில் கணிதப் பட்டதாரிகளில் முதலாம்) முதலாவதாக சித்தியடைந்தவரை சிரேஷ்ட 'ருங்லர்' (Senior wrangler) என்று அழைத்தார்கள். இது கணிதம் படிப்போர் அடையவிரும்பிய பெரியபட்டம். இந்நூற்ருண்டு தொடக்கத்தில் இந்த முறையைப்பற்றி ஆழ்ந்து யோசித்தார்கள். இதைப்பற்றி யோசித்தவிடத்து மிகவும் சிறந்த ஆராய்ச்சியாளராகத்திகழ்ந்தவர்கள் சிரேட்ட ருங்லர்கள் அல்ல என்றும் இரண்டாம், மூன்ரும் ருங்லர்களே சிறந்த கணித மேதாவிகள் என்றும் தெரியவந்தது. சிரேட்ட ருங்லர்கள் மிகத்திறமைசாலிகளாயிருந்தாலும்அவர்கள்பரீட்சை முறையில் முழுமனதைவிட்டாலும் நுணுகிய ஆராய்ச்சி சிந்தனையில் மனதை ஈடுபடுத்தாதானும் பிற்காலத்தில் அவ்வளவு பெரிய மேதாவிகளாகவில்லை. இதன் விளைவாக சிரேட்டருங்லர் பட்டம் கொடுப்பதை நிறுத்திவிட்டார்கள். இதுபோல் நாங்களும் இப்பொழுது இருக்கும் முறைகள் சரியில்லையென்ருல் மாற்றவேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)

### நா. மாணிக்க இடைக்காடர்

## புகையா? ஐயோ பகை!

''புகை பிடிப்பதால் புற்று நோய் நுரையீரல் நோய், இருதய நோய்கள் வரும். இது கர்ப்பத்தின்போது சிக்கலை ஏற்படுத்தும். இத்தீய பழக்கம் நம்மை அடிமையாக்கிக் கொண்டுவிடும்.''

1984ம் ஆண்டு முதல் அமெரிக்காவில் சிகரெட் பெட்டிகளில் இப்படி எச்சரிக்கை போடுகின்ருர்கள்.


## நவீன உல்லாசக் குடிசைகள்
### எல்லாம் உங்களுக்காகவே

- 60 ROOMS BUILT CHALET STYLE WITH A/C OR FANS WITH ALL MODERN AMENITIES.
  60 அறைகள் உப்பரிகை விதமாக கட்டப்பட்டவை குளிரூட்டப்பட்ட அல்லது மின்விசிறிகள் பொருத்தப்பட்ட எல்லாவித வசதிகளுடன் நிறைந்ததாய் அமையப்பெற்றது.
- VAST BANQUET HALL FOR WEDDINGS RECEPTIONS AND OTHER FUNCTIONS.
  கலியாணம், விருந்துபசாரம் அல்லது பொதுக்கூடல் நிகழ்ச்சியினைக் கொண்டாட வசதியாய் அமைந்த களியாட்டு மண்டபமுண்டு
- THE MAIN RESTAURANT SERVES SOME OF THE FINEST FOOD YOU'VE EVER TASTED.
  பிரதான சிற்றுண்டிச் சாலையில் எப்பொழுதும் பெற்றிராத இன்சுவைப் பதார்த்தங்களை பரிமாறிக்கொள்ளலாம்.
- BUFFET LUNCH - EVERY SATURDAY AND SUNDAY - Rs. 35/- PER HEAD.
- TWO WELL STOCKED BARS WITH YOUR FAVOURITE DRINKS.
  நீங்கள் நன்றே நயக்கும் நல்லினப் பானங்களை என்றும் குறையாது வழங்கும் இரு மதுபான சாலைகளுண்டு.
- SOON BOAT RIDES FROM PRIVATE HOTEL PIER.
  மிகு விரைவில் எமது ஹோட்டலின் பிரத்தியேக இறங்குதுறையிலிருந்து படகுச் சவாரிகள்.
- DISCOTHEQUE - EVERY SATURDAY EVENING KIDDIES 2 P. M. TO 5 P. M. - NO COVER CHARGE ADULTS 5 P. M. ONWARDS Rs. 15/- PER HEAD.
- CHILDRENS CHRISTMAS PARTY - 17th DECEMBER PL, POST CHEQUE/MO FOR Rs 60 - PER CHILD GIVING NAME, ADDRESS AND AGE OF CHILD ON OR BEFORE 11th DECEMBER.
  THE CHILD SHOULD BE BELOW 12 YEARS AND CHEQUES/MO SHOULD BE DRAWN IN FAVOUR OF HARBOUR VIEW HOTEL.
- It's quite and experience!
  Special rates for Sri Lankas and Foreign Residents in Sri Lanka.

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD.
Lioyds Building, Sir Baron Jayatilake Mawatha
Colombo 1 Tel: 27861 - 8, 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone ; 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

## ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH



வடமராட்சியில் — முதன்முதலாக

## ASTAN INSTITUTE - Jaffna

IN COLLABORATION WITH

## SCIENCE CENTRE

(POINT PEDRO)

விசேட ஆங்கில வகுப்புகள்
இருநிலையில்

## INTEGRATED ENGLISH

COURSE
LOWER AND HIGHER LEVEL
ஆரம்பம் 2 - 12 - 83

இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்தசேவை
திரு T. N. பஞ்சாட்சரம் — திரு. K. சபாநாயகம்

பாடத்தொகுதி :-
1. ஆங்கில உரையாடல் பயிற்சி
2. இலக்கணமும் பாவனையும்
3. சொல்லியல் விருத்தி
4. வாசிக்க எழுதப் பயிற்சி

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN
C/o SCIENCE CENTRE
Ponnuchamy Koddam Point Pedro
Head Office: ASTAN INSTITUTE
166/1, Hospital Road, — Jaffna



# புதியபகல் விடிகிறது

## கோகிலா மகேந்திரன்.

**எமது சிறுகதை**

பூகங்களை இனங்காண முடியாத அளவிற்கு இருள் சூழ்ந்துவிட்ட வேளையில் அவன் காங்கேசன்துறை பஸ் தரிப்பில் நின்று கொண்டிருந்தான். சிறுவர் பூங்காப் பக்கமாக எரிந்து கொண்டிருந்தது ஒரே ஒரு மின் விளக்கு. அந்த விளக்கின் ஒளியில் அவனது நிழலும் கூட அவனைப் போலவே சோகம் கொண்டு விழுந்துகிடப்பது போல அவனுக்குத் தோன்றியது' சே...? என்ன உலகம்' என்ன மனிதர்கள்? நீதி...?

குற்றவாளி தண்டனை பெறுவான் என்று பெரும்நம்பிக்கையோடு எதிர்பார்திருந்தவனுக்கு... அதுவும் பொய்த்துப் போன பின்னர்... எல்லாமே ச்சப்பாகத் தோன்றின.

கடலிலே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த துறைமுகத்தில் பதித்திருந்த கண்களை விலக்கி அவன் தெற்கேபார்த்தான். அங்கே அவன் எதிர்பார்த்து காத்திருந்த பறவைக் காவடிவந்து கொண்டிருப்பதன் அடையாளமாய்க் கூட்டம் தென்படத் தொடங்கியது. இந்தக்காவடியை அவன் ஏன் எதிர்பார்த்துக் காத்திருக்கவேண்டும்? அந்தக் கேள்வியின் விடையும் அவனுக்குத் தெளிவாகவில்லை.

ஊசிக்குத்தல் போன்ற ஒரு பெருமூச்சுடன் சிவபாலன் கீழே மணலில் அமர்ந்து கொண்டான். வானத்து முகில்களுக்கிடையில் எட்டிப்பார்க்கும் மூளிச்சந்திரனை அவன் அடிக்கடி நிமிர்ந்து பார்த்துக் கொண்ட செயலானது இறந்துவிட்டதன் சகோதரன் விஜயபாலனை வானத்தில் தேடுவது போலவே தோன்றியது. விஜயபாலன் 'ஆவி' உருவில் நின்று இந்தக்காவடியைப் பார்த்துக் கொண்டிருப்பானா?

அவனை நெருங்கிவந்து கொண்டிருக்கும் காவடிக்கு முன்னால்பதினைந்து கூட்டம் மேளம்! அளவெட்டியிலும் இணுவிலிலும் பெயர் பெற்ற மேளகாரர் எல்லாம் வரிசையாக நிற்கும் இந்தக்காட்சியை வேறு எங்கேயும் பார்க்கமுடியாது என்பது உண்மைதான். ஆயினும் அந்த இசையை ரசிக்க முடியாதபடி அவனது மனதில் புயல் வீசிக்கொண்டிருந்தது.

மனதிற்குள்ளே பல முறை பேசிக் கொண்டவார்த்தைகள் நாவிலும் வெடித்து இப்போது மெல்லிய புலம்பலைப் போல வெளிப்பட்டுக் கொண்டிருந்தன.

''தம்பி! விஜயபாலா...! இந்தக்கடலுக்குள்ளை கல்லைப் போட்டுப் போட்டு நிரப்பித் துறைமுகப் பாதை கட்டிறது போலை..! நீ உன்ரை மனதுக்குள்ளை எத்தினை கனவுகளைப் போட்டுப் போட்டு நிரப்பித் திட்டங்களாய்க் கட்டிவைச்சாய்... அதெல்லாம் நிறைவேறியிருந்தா... இ.ண்டைக்கு எங்கடை கிராமம் என்ன மாதிரிமுன்னேறியிருக்கும்... சீ. அறுவாங்கள் ... ஆத்திரத்திலை உன்னைத்தான் வெட்டினங்கள் எண்டால்.. அந்தத் திட்டங்களும் அதோடைசேந்து வெட்டுப்பட்டுப் போச்சேடா...''

அவனது அடிவயிற்றில் சுருண்டவேதனையே மார்பில் புரையேறிப் புலம்பலாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த நிலையில் அவனைப்பார்க்கும் யாரும் அவன் பைத்தியக்காரன் என்றுதான் சொல்வார்கள்.

காவடி இப்போது அவனை அண்மித்துவிட்டது. காவடியில் கிடையாகத் தூங்கிப்பறந்து கொண்டிந்த விதானையார் மகனை அவன் ஒருமுறை நிமிர்ந்துபார்த்தான். முதுகுத் தசைகளில் கொழுவித் தூக்கப்பட்டதனால் ஏற்பட்ட ஒரு மெல்லியவேதனை அவன் முகத்தில் தெரிவதுபோல இவனுக்குத் தேன்றியது. அந்த அவனது வேதனையை மழுங்க அடிப்பதற்காகவே அரோகராச் சத்தங்களும், உடுக்கடிகளும், சந்தப் பாடல்களும், மேளவார்த்தியங்களும் முழங்கிக் கொண்டிருப்பதாய் அவன் நினைத்தான். தெருவில் இருந்துபூங்காவை நோக்கி வரும் புழுதியோடிய பாதை முகப்பில் நின்ற இரு உருவங்கள் தமக்குள் கதைத்துக் கொள்வது ஜெயபாலனுக்குத் துல்லியமாய்க் கேட்டது,

''உதென்ன காணும்.. பறவைக் காவடி சந்நதிக்குப் போகுது போலகிடக்குது... ஆர் எடுக்கிறது?''

''ஓம் தம்பி... காவடி மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்லையிருந்து சந்நதிக்குப் போகுது... எங்கடை விதானையாற்றை மேன் தான் எடுக்கிறான்...''

''ஆர்.. அந்த விஜயபாலனை வெட்டுவிச்ச...''

''ஓமோம்... அவைதான்.. அதுதான் அந்த வழக்குத்தள்ளுப்பட்டுப்போச் செல்லே... அதுதான் காவடி எடுக்கினம்...''

அவர்கள் பேசிக்கொண்டே இவனைக்கடந்து சென்றார்கள்.

தன்னைத்தாண்டி கிழக்கு நோக்கித் தொண்டமானாறு செல்லும் காவடியை இவன் மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டான். கற்பூரச் சட்டிகளின் நெருப்பைத் தன்னையே எரிக்கவருவதுபோலவும் உடுக்கு ஒலிகள் தன் இதய அடிப்பை நிறுத்திவிட்டு தாம் அதிர்வது போலவும் இவனுக்குள்ளே ஒரு சிரிப்பு ஏற்பட்டது.

'இறைவன் அநீதிகளின் காவலனா?'

விதானையார் மகன் ஏன் காவடி எடுக்கிறான்? தானே குற்றவாளி என்றும் தனக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்றும் அவனுடைய மனச்சாட்சி உள்ளுக்குள் உறுத்துவதாலேயே அவன் தன்னை வருத்தி இக்காவடி எடுக்கிறான் என்று சிவபாலன் நினைத்துக்கொண்டான்.

கழுத்துப்பக்கத்தில் இரத்தம் வழிய... பனை வடலிகளுக்கிடையில் விஜயபாலன் விழுந்து கிடந்தகாட்சி நேற்று நடந்தது போலவே இன்னும் பசுமையாக அவனுக்குநினைவிருக்கிறது. ஆனால் காலம் மூன்று வருடக்கறகளைத் தாண்டி வேகமாக ஓடிவிட்டதே!

உயிர் பிரியப்போகும் தருணத்தில் தூண்டிலில் சிக்கிய மீனைப்போல வாயைத்திறந்து திறந்து மூடி அவன் அவதிப்பட்டதும்,

''என்னை வெட்டிப்போட்டாங்கள் அண்ணை.. ஆனால் எங்கடைகிராமத்தை... இந்த அமிர்தபுரத்தை அவர்கள் அழிச்சுப் போடாமல் நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேணும்...'' என்று கூறியதும்,

இவை மூன்றுவருடங்களுக்கு முன்னால் நடந்த பழைய நிகழ்ச்சிகள் போலவா தெரிகின்றன?

கூட்டுறவு முறையிலான விவசாயம் பண்ணை வளர்ப்பு, இரவுநேர முதியோர் கல்வி வகுப்புகள், தையல்-நெசவு நிலையம் வீட்டில் இருக்கும் பெண்களுக்குக் குடிசைக் கைத்தொழில்களில் புத்தூக்க வகுப்புக்கள்... என விஜயபாலன் தொடங்கி நடத்திக் கொண்டிருந்த பல கிராம அபிவிருத்தித் திட்டங்களினால் இன்னும் மூன்று நாலு வருடங்களில் அந்த அமிர்தபுரம் ஒரு மாதிரிக் கிராமத்தையும் விடச் சிறப்பாக முன்னேறிவிடும் என்பது எல்லாருக்கும் துல்லியமாகத் தெரியத் தொடங்கியிருந்த காலத்திலேதான் விதானையார் மகன் இவனை ஒழித்துவிடும் திட்டத்தைத் தீட்டினான்.

கிராமோதய சபைகள் என்ற திட்டம் வந்தபோது அதன் தலைமைப் பதவி பரம்பரை பரம்பரையாக அக்கிராமத்தை நாட்டாண்மைப்படுத்திவந்த தமது குடும்பத்திற்கே இயல்பாக வரவேண்டும் என்று விதானையார் மகன் விரும்பினார். ஆனால் இளைஞர் சனசமூக நிலையத்தின் தலைவனான விஜயபாலன் கிராமோதய சபைத் தலைவனாக வரயோசிக்கிறான் என்பதையும் அவனுக்குப் பலத்த ஆதரவு இருக்கிறது என்பதையும் அறிந்த போது அவரால் நிதானமாக இருக்க முடியவில்லை.

''சாதியிலை என்னை விடக் குறைஞ்ச ஒரு பெடியன்......

''வயதிலையும் என்னைவிடக் குறைஞ்ச ஒரு பெடியன்..... கிராமோதய சபைத் தலைவராவாறதோ? அவனுக்கு நாங்கள் பணிஞ்சு நடக்கிறதோ....

(12ம் பக்கம் பார்க்க)

# மூட்டைப் பூச்சி

எங்களை உறிஞ்சி வாழும்
ரத்தத்தின் ரத்த மான
தங்கமே மூட்டை யாரே
தலையணை மெத்தை பாய்கள்
இங்குள்ள கதிரை மேசை
இருக்கின்ற வாங்கு யாவும்
தங்கியே வாழ்வை யோட்டும்
தம்பியே! சொல்லக் கேளாய்,

முன்பெல்லாம் உன்னைப் பற்றி
முறையாக அறிய வில்லை
பின்புதான் ஆய்ந்து ணர்ந்து
பெரியதோர் உண்மை கண்டேன்
கன்மனம் படைத்தோய் என்றும்
கயவனாய் இருப்பாய் என்றும்
சொன்னவர் பலபேர், ஆனால்
துளியுமே உண்மை இல்லை.

நெல்லுடன் சப்பி சேர்த்து
நிறையவே உழைக்கின் றோரும்
கல்லினை அரிசி யோடு
கலந்து காசாக்கு வோரும்
மல்லியிற் புல்லுக் கொட்டை
மறைத்துமே விற்கின் றோரும்
நல்லவ ரென்றால் நீயோ
நாயகம் என்று சொல்வேன்.

கடமையைச் செய்தி டாது
கைக்கூலி வாங்கு வோரும்
உடைமைகள் சேர்ப்ப தற்காய்
ஊரினை உறிஞ்சு வோரும்
கடவுளின் பெயரி னாலே
காலத்தைத் தள்ளு வோரும்
நடமாடும் பெரியோ ரென்றால்
நானுன்னைப் பெரியோ னென்பேன்.

சேர்ந்துமே தொழில் புரிந்து
சிலநாளால் கழுத்த றுப்போர்
சேர்ந்துமே உண்டு டுத்துத்
தீமைகள் செய்கின் றோரும்
சேர்ந்துமே புத்தி சொல்லிச்
சிக்கலில் மாட்டு வோரும்
நேர்மைய ரென்று சொன்னால்
நீயென்ன துரோ கியாமோ?

வனத்திலே வேட்டை யாடி
வதைப்பது தர்ம மென்றால்
புனத்திலே பறவை கொன்று
புசிப்பது ஞாய மென்றால்
இனத்தையே அழித்துச் சொத்தை
எடுப்பது நீதி யென்றால்
மனிதரை உறிஞ்சும் உன்னை
மறிப்பது தர்ம மாமோ?

- காரை. செ. சுந்தரம்பிள்ளை


## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ். நகர்
T. P 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி,
ஹைதிராமணி ஆர்காட்,
கோட்டை.

★ உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பகரமான ஸ்தாபனம். இடத்திற்கு முந்திக் கொள்ளுங்கள்.
★ பிராக் பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்
★ பெல்ஜியம் விசா இருவழிப்பாதையுடன் 21000/-
★ பேர்லின் ஒருவழிப்பாதை 9600/-
★ அதிகப்படியான டிக்கட்டுகளுக்கு ஒரு டிக்கட் இலவசம்.
★ குறைந்த கொமிசனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.
★ அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுகளுக்கு 13% கழிவு தரப்படும்.

# நவரசம்



சச்சி

## நமது ஆண்கள் நல்லவர்கள்

இத்தாலி தேசத்தில் புருஷர்கள் தம்மனைவிமார்களைக் கோபித்து அடிக்கவில்லையாளுல், புருஷர்களை ஸ்திரீகள் மதிப்பதில்லை. அடிக்கத் தெரியாத கணவன் மார்களை அவர்கள் மடையர்கள் என எண்ணுகிருர்கள். இவ்விடயம் குறித்து ஓய்வுபெற்றலண்டன் நீதிபதி வில்ஸன், கணவன் மார்கள் தம்மனைவிமாரர்களை அடிக்கும் விஷயமாகயாருக்காவது சந்தேகமிருந்தால் ஒரு சனிக்கிழமை மாலை ஆஸ்பத்திரிக்குப்போய் பாருங்கள் எனக் கூறியுள்ளார்: அமெரிக்காவில் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்றின்படி இதுஉறுதியாகியுள்ளளது. வருடமொன்றுக்கு அமெரிக்காவில் 60 லட்சம் மனைவிமார்கள் கணவன் மாரிடம் அடி, உதை வாங்குகிருர்கள். அமெரிக்கப் பொலிசார், தமதுகடமைநேரத்தில் மூன்றில் ஒருபகுதி நேரத்தை கணவன் மாரினுல் அடி உதை படும் மனைவிமார் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கச் செலவுசெய்கின்றனர். பெண்களுக்குவிபத்து. கற்பழிப்பு, வழிப்பறி ஆகியவற்ருல் வரும் காயங்களை விட இதனுல் வரும் காயங்களே அதிகம். நமது ஆண்களுக்கு சபாஷ். பெண்கள் வாழ்க

## ஹிந்தி நடிகை ரேகா குடியைத் துறந்தார்

பம்பாய் சினிமா உலகு பற்றியாரும் பெரிதாகக் கூறிக் கொள்வதில்லை. இந்தியாவின் ''ஹொலிவூட்'' என வர்ணிக்கப்படும் பம்பாய் சினிமா உலகில் எதுவும் எந்நேரமும் நிகழலாம். அங்கிருந்து புதுத் தகவலொன்று கிடைத்துள்ளது.

கவர்ச்சிக்கன்னி 'ரேகா' தாம் இப்போது குடிப்பதில்லையென்று தெரிவித்துள்ளார். நிறைய தேகப்பயிற்சி செய்வதால், மதுவை முற்ருகமறந்து விட்டாராம்.

## ஜனுதிபதி றேகனுக்கு குடும்பப்பிரச்னை உண்டு

நாட்டை யாள்பவர்கள் சொகுசான வாழ்க்கை வாழ்வதாகச்சிலர் எண்ணுகிருர்கள். அரசனுனுலும் ஆண்டியானுலும் எல்லாருக்குமே பிரச்சனைகள் இல்லாமலில்லை. என்பதையாரும் நினைப்பதில்லை. ஜனுதிபதி றேகனுக்கு உலகப்பிரச்சனைகளைப் போல, குடும்பப் பிரச்னைகளுண்டு. இவருடைய மூத்த மகளான பட்டி, தன் விருப்பப்படி டேவிஸ் என்ற இளைஞரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாராம். இந்தக் கலியாணம், தாயாருக்கு இன்று வரை பிடிப்பில்லை. இதனுல், வீட்டில் சில சமயங்களில் குடும்பப் பிரச்சினை உருவாகிறதாம்.

## கவாஸ்கர் பிறந்த சில நேரத்தில் மாற்றுப்பட்டார்

இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர், பிறந்த சில மணித்தியாலத்தில் ஆஸ்பத்திரியில் வைத்து மாறிவிட்டாராம். கவாஸ்கர் பிறந்தபோது அவரது மாமனுர், கவாஸ்கரின் காதில் இருந்த ஒரு சிறு துளையை அவதானித்ததால், ஆஸ்பத்திரி நர்சுகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டி தட்டிக் கேட்டு, கவாஸ்கரை மீட்க முடிந்ததாம். கவாஸ்கர் பிறந்ததும் குளிப்பாட்டக்கொண்டு போன நர்சுகள் ஒரு மீனவப் பெண்ணுடைய குழந்தையைக் கவாஸ்கரின் தாயாருக்கும், மீனவப் பெண்ணுக்கு கவாஸ்கர் குழந்தையையும் தவறுதலாக மாற்றிவிட்டார்கள். வெளியில் நின்ற மாமனுர், தனது சகோதரியின் குழந்தையின் காதில் இருந்த துளையைக் காணுததால், குழந்தை மாறிவிட்டதெனப் போட்ட கூக்குரலினுல் விஷயம் அம்பலமாயதாம்.

## ஆரம்பத்தில் அச்சுக்கோத்தவர் சீர்காழி

குரல்வளத்தால் லட்சோப லட்சம் மக்களைக் கவர்ந்து நிலையான புகழுடன் வாழ்பவர் சீர்காழி கோவிந்தராஜன். இவரது ஆரம்பகால வாழ்க்கை விசித்திரமானது. சிறு வயதில், இவரது மாமனுர் நடத்திய 'திரை உலகம்' சஞ்சிகைக்கு அச்சுக்கோத்து அச்சிட உதவியவர் சீர்காழி. ஓய்வு நேரங்களில் இசைக் கல்லூரியில் கல்வி கற்றதாலேயே இன்று சிறந்த பாடகராகத் திகழ்கின்ருர்!

சாயி ரெலி ரேப்

புதிய யுக்திகளுடன்
புதுமையான (STEREO) படப்பிடிப்பு
புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள்
வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ
படப்பிடிப்புச் செய்பவர்கள்.

சாயி ரெலி ரேப்

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகு வைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்
இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில்
எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில்
வீடியோ படப்பிடிப்புச் செய்து கொள்ள
சாயி ரெலி ரேப் தொலைபேசி: 2 3 7 5 9

விபரங்களுக்கு:
ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்
141, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2 2 6 6 0

குறிப்பு: கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# இப்படி எழுதலாமா?

**13-11-83** ஈழநாடு 'இலக்கிய உலகு'வில் அர்த்தமற்ற கூப்பாடு இடம்பெற்றமை வருத்தத்திற்குரியது.

இலங்கை முற்போக்குஎழுத்தாளர் சங்கத்தை - அதன் கோட்பாட்டை - அது சார்ந்த இலக்கியகர்த்தாக்களை எதிர்த்தவர்கள், விரோதித்தவர்கள், வெறுத்தவர்கள், கேலிபண்ணியவர்கள் உண்டு. ஆனுல் வெற்றி கொண்டவர்கள் கிடையாது. ஈழத்து இலக்கிய உலகில் இது உண்மை வரலாறு.

இ. மு. எ. ச. செயலாளர் பிரேம்ஜி மற்றும் 'சிலர்'பற்றிய இலக்கிய உலகு அங்கலாய்ப்பு இவை:

''... ஆண்டாண்டு காலம் அறிக்கைகள் விட்டு, வாய்ச்சது அறுதி என்ற தோரணையில் நாட்டைவிட்டு ஓட மூட்டைகட்டியுள்ளனர்...

''தமிழ்நாட்டு இலக்கிய சஞ்சிகைகள், ஈழத்து இலக்கிய சஞ்சிகைகள் மரித்துவிடுகின்றனவென்று மரணஅறிவித்தல் கொடுத்து மாய்மாலம் கொட்டியவர்கள், அதே தமிழகத்தில் தஞ்சமடைந்திருப்பதற்குக் காரணம்...

''தமது பிள்ளைகளைத் தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் கரையேற்றிவிடும் சேய்ப்பாசம்...

''முற்போக்கு இலக்கிய நிழலின்கீழ் ஒதுங்கி 'ஞான'வான்களாகத் தம்மைக் காட்டி வந்த ஞானசூனியங்கள்...

''ஆக்க இலக்கியப் பயிற்சியோ முயற்சியோ இல்லாமலேயே அனைத்து எழுத்தாளர்களைக் கட்டியாள முயன்ற பிரேம்கள்...''

இவ்வாறு இன்னும் சில அளப்புகள்.

கருத்துப் பரிமாறல்களைப் விடுத்துத் தனிநபர் வசைபாடும் கொச்சைத்தனத்துக்கு நாம் பதிலளிப்பது யோக்கியமான செயல் அல்ல. 'சிலர்' பற்றியுமிருப்பதால் சிறு குறிப்பு மட்டும் கொடுக்கிறேன்.

ஆண்டாண்டுகாலம் அறிக்கைவிடும் அளவிற்கு இ. மு. எ. ச. எத்தகைய சக்திவாய்ந்த கட்டுக்கோப்பாக இயங்கி வருகிறது என்பது கூருமலே புரியும். 'இ. மு. எ. ச. அறிக்கை' என்பது அதன் இயக்க வடிவ வெளிப்பாடே இ. மு. எ. ச.வைவிட ஈழத்துஇலக்கிய உலகில் வேறு எந்த எழுத்தாளர் சங்கம் முறையாக இயங்குகிறதென்பதைத் தக்க ஆதாரங்களுடன் வெளிப்படுத்த முடியுமா?

தமிழ்நாட்டு இலக்கிய சஞ்சிகைகளின் வருகையை இ. மு. எ. ஈ. எதிர்த்ததே கிடையாது 'இலக்கிய சஞ்சிகைகள்' என்ற போர்வையில் வந்துகுவியும் நச்சு - ஆபாச - வணிக சஞ்சிகைகளையே எதிர்த்தது - எதிர்க்கிறது.

பிரேம்ஜி முற்போக்கு இலக்கிய நிழலில் ஒதுங்கியவர் அல்ல. அவரே அதன் ஓர் அச்சாணி. அச்சொட்டான - மிகக் காத்திரமான - இயக்க இலக்கியவாதி. அவர் கட்டுக்கோப்பாகக் கட்டி வளர்த்த முற்போக்கு இலக்கிய விருட்ச நிழலில் சில சந்தர்ப்பவாதிகள் தாம் ஒதுங்கினுர்கள் - ஆயினும், பிரேம்ஜி என்ற இயக்கவியல் இலக்கியவாதியை அவர்களால் வெல்ல முடியவில்லை.

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை எழுதுகிறவர்கள்தாம்

(13ம் பக்கம் பார்க்க)

## பாலியலும் அரசியலும்

பிரிட்டனில் நடைபெற்ற கடைசித் தேர்தலில் மாகரற் தட்சரின் மகத்தான வெற்றியின் பின்னணியில் முக்கியஸ்தராகத் திகழ்ந்தவரும், அனுபவம் மிக்க அரசியல்வாதியும் பொருளாதார நிபுணருமான பார்க்கின்ஸன் தமது முக்கிய பதவிகளிலிருந்து நிர்ப்பந்தத்தின் பேரில் ராஜினுமாச் செய்துள்ளார்!

இந்நிர்ப்பந்த நிலைக்கான காரணம்?

விடுகின்றன!

பார்க்கின்ஸன் விவகாரம் ஏற்படுத்தியுள்ள புயலில், பக்கிங்ஹாம் மாளிகையையே அதிர வைத்த இளவரசர் அன்ட்ரூ- கூஸ்டாக் சமாச்சாரம் கூட அடிபட்டுப் போய் விட்டது போலத் தெரிகின்றது.

'ஒவ்வொரு ஆணினது வெற்றியின் பின்னுல் ஒரு பெண் இருக்கவே செய்வாள்' எனப் பெண்ணுற்றலை வியந்து போற்றத் தெரிந்தபலர், தமக்கு அரசியல் லாபம் தரும் என்றநம்பிக்கையில் இத்தகைய பெண் தொடர்புகளுக்குக் கண், காது, மூக்கு என இன்னபிற வெல்லாம் வைத்து எப்படித் தான் பெரும் பரபரப்பை ஏற்

## புறேபியூமா முதல் பார்க்கின்ஸன் வரை

பத்தாண்டுகளுக்கும் மேலாகத்தமது அந்தரங்கச் செயலாளராகவிருந்த பெண்ணுடனுன அவரது கள்ளக் காதல் தொடர்புஅம்பலமாகியமையே அவரை இப்பரிதாப நிலைக்குத் தள்ளி விட்டது.

கிறிஸ்டீன் கீலர் என்ற விலைமாதுடன் முன்னுள் அமைச்சர் புறேஃபியூமா கொண்டிருந்தகள்ளத் தொடர்பு அம்பலமாகியபோது. பிரிட்டிஷ் அரசியல் பரப்பில் வீசிய புயலை ஒத்தபுதியதொரு புயல் பார்க்கின்ஸன் விவகாரம் தொடர்பாக இன்று உருவாகியுள்ளது.

ஒருவரது தனிப்பட்ட விஷயங்கள்என நாகரிகமாக ஒதுக்கிவிடக் கூடியவை கூட, அந்த நபர் ஒரு 'பெரும்புள்ளி' யாக இருக்கின்றபட்சத்தில் தேசியக் கரிசனைமிக்க சேதிகளாகி படுத்தி விடுகிருர்கள்!

அமெரிக்க ஜனுதிபதி ஜோன் கென்னடி உயிருடன் இருந்த காலத்தில், அவருக்கு இருந்ததாகக் கூறப்படும் கள்ளப் பெண்- தொடர்புகள் பற்றிச் சாடைமாடையாகக் கூடப் பேசத்தயங்கியவர்கள், கென்னடி கொலைசெய்யப்பட்டபின்னர், மீதமாயிருந்த கென்னடி குடுப்பத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்த மேற்படி தொடர்புகளைப் பயன்படுத்தியவிதம் இருக்கிறதே - அது எவ்வளவுபரபரப்பானது!பயங்கரமானது!!கென்னடியின் 'கள்ளப்பெண்டிர்' ஜாபிதாவில் இடம் பெற்ற மன்றோக்களும் மான்ஸ்ஃபீல்டுகளும் எத்தனை பேர்! இந்த 'பெண்-தொடுப்பு' அந்தரங்கங்கள் அரங்கேறியதால் உருவான 'பழிப்பட

(12ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

# கிடுகு வேலி

## செங்கை ஆழியான்

### 4

குவைத் நாட்டின் கோடைகாலக் கடும் வெப்பத்தையும், மாரிகாலக் கடுங் குளிரையும் அவன் அனுபவித்திருக்கிறான். இரண்டும் மிக்க கடூரமானவை. உடலைப்பிழிகின்ற வெப்பத்தையும் உடலை உறையவைக்கும் குளிரையும் அவன் ஐந்து ஆண்டுகளாக அனுபவித்திருக்கிறான். அவை அவனுக்குப் பழக்கப்பட்ட கால நிலைமைகளாக மாறும் வேளையில் அவற்றிலிருந்து விடுபட்டு தாய்நாட்டிற்கு வந்திருக்கிறான்.

அங்கு காலநிலைமைகள் தான் கடூரமானவையாகவிருந்தன. இங்குகுடும்ப நிலைமைகள், உறவுகள் விரிசல் கண்டனவாக மிக்க இடர் தருவனவாக இருக்கின்றன. நிர்மலா ஆத்திரத்தோடு கேட்ட கேள்வியின் தாக்கம் குவைத்தின் ஒருவருடச் சுவாத்தியத்தின் திரண்ட தாக்கமாக அவனில் இறங்கியது.

''இனியாவது என்ரை புருஷனை என்னுடன் வாழவிடுகிறியளா?

அந்த வார்த்தைகளின் தாக்கத்தில் அந்தக்குடும்பமே சில கணங்கள் நிலைகுலைந்து போயின. அம்மா விக்கித்துப் போய் நின்றாள். ஐயா அப்படியே வாசலில் அமர்ந்து கொண்டார். தங்கைகள் பரிதாபமாக நிர்மலாவைப் பார்த்தார்கள். செல்லப்பர் மனதுக்கு அக்காட்சி மிக்க இதமாக இருந்தது.

அவனால் அவ்வார்த்தைகளை சில நிமிடங்கள் கிரகிக்கவே முடியவில்லை. வாழத்துடிக்கின்ற ஒரு பெண்ணின் ஆதங்கமா? அல்லது என் கணவனைக் கொண்டு உழைப்பித்து வாழ்கிறீர்களே என்ற ஆத்திரமா? கண்கள் கலங்கிய நிலையில் நிர்மலாவைப் பார்த்ததும் அவன் கலங்கிப்போனான்.

முதலில் எழுந்த ஆத்திரம் மனதுள் சமாதியாகியது. பாவம், நிர்மலா. ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் கணவனைக் காண எவ்வளவு துடித்திருப்பாள்? அவன் அவளிடம் அல்லவா முதலில் ஓடிச்சென்றிருக்க வேண்டும்?

அவன் தன் கடமைகளை எண்ணிக் கொண்டான். பெற்றோரைப் பேணல், தங்கைகளுக்கு நல்வாழ்வமைத்துக் கொடுத்தல் என்பன எவ்வளவு முக்கியமான கடமைகளோ, அதைப்போல அவனை நம்பி வந்த மனைவியை மகிழ்வாக வைத்திருத்தலும் அவன் கடமைதான்.

அம்மா தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். எழுந்து நிர்மலாவிடம் சென்றாள்.

- உள்ளே வா, மோனை...

நிர்மலா நின்ற இடத்திலிருந்து அசையவில்லை.

- நான் வரமாட்டன்... அவரை என்னுடன் அனுப்பிவிடுங்கோ... அவரை இங்க வைச்சிருக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது...?

- உனக்கில்லாத உரிமை எங்களுக்கில்லை, மோனை. அவன் உன்ரை புரிசன். என்ர பிள்ளை. மோனை, எங்கட நன்மை தீமையிலே உனக்குப் பங்கில்லையா?...

- கலியாணம் கட்டிக் கொடுத்த பிறகும் அவரைக் கொண்டு உளைச்சுத் தின்னப் பார்க்கிறியள். இது எப்ப வந்த வீடு? எப்ப வந்த பவர்? அவர் உழைச்சு அனுப்ப நீங்கள் நல்லாச் சோக்குப்பண்ணுங்கோ. நானும் பிள்ளையும் அவள் ஓவென்று அழுதாள்.

- நிர்மலா... வாயைப் பொத்தடி... என்று சண்முகம் கத்தினான். கதிரையை விட்டு விருட்டென்று எழுந்தான். கிளி ஓடிவந்து அவன் கரத்தைப்பற்றித் தடுத்தாள். அம்மா சண்முகத்திடம் ஓடிவந்தாள்.

- தம்பி... நீ அவளுடன் போயிடு... அவளில் பிழையில்ல.

- அம்மா...

- முதலில போட்டு வாடா சண்முகம்... கூட்டிக்கொண்டு போ...

சண்முகம் நிர்மலாவைப் பார்த்தான். அவள் கண்ணீர் அவன் இதயத்தைப் பிழிந்தது. இது பாசப் போராட்டம். உரிமைப் போராட்டம். சில சூட்கேசுகளையும் பெட்டிகளையும் எடுத்துக் காரில் வைத்தான். காரில் ஏறிக் கொண்டான்.

நிர்மலாவும் வந்து ஏறிக் கொண்டாள். இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அவள் அவன் அருகில் மௌனமாக அமர்ந்திருந்தாள். அவன் காரில் ஏறியதும் தன் மடியில் விழுந்து அழுவாள். விம்மி விம்மி அழுவாள் 'என்னை மன்னிச்சிடுங்கோ' என்று இரப்பாள். அவளைத் தேற்றி அவள் கூந்தலை வருடிவிடலாம் என்றெல்லாம் அவன் எதிர் பார்த்தான்.

அவள் அப்படிச் செய்திருந்தால், விமானத்தில் இறங்கியதிலிருந்து அவன் இதயத்தை அழுத்துகின்ற சுமை பறந்திருக்கும். அவனிலும் தவறிருக்கத்தான் செய்கிறது. மூன்றும் மாதம் அவளைப் பிரிந்து சென்றவன், ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் வருகிறான். அந்தப் பிரிவின் வேதனையில் அந்த இளம் பெண் எவ்வளவு நரக வேதனைப்பட்டிருப்பாள் என்பதை உணரத் தவறிவிட்டான். அந்த வேதனையில் அவள் அவ்வாறு நடந்து கொண்டதில் தவறு காணமுடியாது.

வீடு நெருங்கியபோது அந்த மௌனச் சுவரை அவனே தகர்த்தான்.

- ரமணன் எப்படி இருக்கிறான், நிர்மலா? ஏன் அவனைக் கொண்டுவரவில்லை..

- நிர்மலா அவனைத் திரும்பிப் பார்த்தாள். அப்பார்வையில் தொனித்தது எதுவென இருளில் தெரியவில்லை.

- மகனின்ர நினைவும் இருக்குது........சந்தோஷம் நான் உங்களுக்குக் கழுத்தை நீட்டியவள். நீங்கள் வராவிட்டாலும் வந்தன். அவன் ஏன் வரவேண்டும்? விதைத்துவிட்டு அறுவடையைக் கூடப் பார்க்காமல் ஓடிப்போன அப்பனைப் பார்க்க ஏன் அவன் வரவேண்டும்?......

அவன் துடித்துப்போனான். இவளை என்ன பிடித்திருக்கின்றது?

- நிர்மலா...... ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறாய்...

அவள் அவன் சொன்னதைப் பரவாய் பண்ணாமல் கூறினாள்:

- உங்களை யார் என்றே அவனுக்குத் தெரியாது...

- என் படங்களைக் கூடவா அவன் பார்க்கவில்லை, நிர்மலா?

- படங்களைக் காட்டி இதுதான் உன் அப்பா என்று அவனுக்கு அறிமுகப்படுத்த நான் விரும்பவில்லை. ஐந்து வருஷமாக நான்தான் அவனுக்கு அப்பாவும் அம்மாவும்...

சண்முகம் இடிந்து போனவனாக அப்படியே காரின் சீற்றில் சாய்ந்துகொண்டான். எவ்வளவு பெரும் இழப்புக்கள்? பெற்ற மகனே தகப்பனை அடையாளம் காண முடியாத நிலை. நிர்மலாமீது அவனுக்குக் கோபம் தியாகச் சுடரிட்டது. இப்படியும் ஒரு தாயா? தகப்பன் யார் என்று அறிமுகப்படுத்தாத கொடிய தாய். யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் பிறந்த ஒரு பெண் இப்படி இருக்க முடியுமா?

இந்த நாட்டின் தமிழ்ப் பாரம்பரியங்கள் சிதைவடைவதன் பிரதிபலிப்பாக இவள் நடந்துகொள்கிறாளோ?

வீட்டின்முன் கார் நின்றது. கதவைத் திறந்துகொண்டு அவன் இறங்கினான். அவன் வீட்டிலும் மாற்றங்கள் தெரிந்தன. முன்பு விறுந்தையாக இருந்த முன்பக்கத்தில் இப்போது புதிதாகக் கட்டப்பட்ட ஒரு அறையும் ஹோலும் இடங்கொண்டிருந்தன. ஹோலில் அவன் மாமி அமர்ந்திருந்தாள். அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, தான் படித்துக்கொண்டிருந்த பேப்பரில் கவனம் செலுத்தினாள். மாமாவைக் காணவில்லை.

ஹோலின் ஒரு பக்கத்தில் மூன்று சில்லுச் சயிக்கில் ஒன்றில் ஒரு சிறுவன் அமர்ந்திருந்தான். அவனைச் சண்முகத்தால் அடையாளம் காண முடிந்தது. அவன் மகன். அவன் இரத்தத்தில் உதித்த மகன். உடலெல்லாம் பாசவெள்ளம் அலையாகப் பொங்க, அவனை ஆவலுடன் நெருங்கினான்.

- ரமணா... என்றபடி அவனைத் தூக்க முயன்றான்.

- ரமணன் வீரிட்டுக் கத்தினான்.

- அம்மா... ஆ...

ஆவலுடன் மகனைத் தூக்க முயன்ற கரங்கள் பின்வாங்கின. அழுதபடி ஓடிவந்த மகனை நிர்மலா தூக்கி அணைத்துக்கொண்டாள். அவனை துயர மேகங்கள் முற்றாக மூடிக் கவிந்தன.

- ஏன் குழந்தையைப் பயமுறுத்திறியள்?.. அவன் உங்களுடன் சேரமாட்டான். இந்த வீட்டில் இருக்கிறவையைத் தவிர வேறு எவருடனும் அவன் சேர்ந்து பழக்கமில்லை.

சண்முகம் நிர்மலாவையும் குழந்தையையும் ஏக்கத்தோடு பார்த்தான். ரமணன் பயத்தோடு அந்நியனைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தான்.

அவன் அறைக்குள் புகுந்து கட்டிலில் துயருடன் சரிந்தான். அதே அறை. கலியாணமாகி அவனும் அவளும் மூன்று மாதங்கள் இனிமையாக வாழ்ந்த அறை. அதே கட்டில்......இழந்துபோன காலங்களின் இழப்புகள், கறந்த பாலே.

நிர்மலா, கையில் கோப்பியுடன் அறைக்குள் வந்தான்.

அவன் ஆவலுடன் நிமிர்ந்து பார்த்தான்.

- குழந்தை எங்கே?...

- அவன் அம்மாவுடன் ஹோலில். இந்தாங்க கோப்பி...

- ஏன் இப்படி என்னை சித்திரவதை செய்கிறாய் நிர்மலா?...

- நானா? உங்களையா?...

அவள் கட்டிலில் அமர்ந்தாள். அவள் அன்றும் இப்படித்தான் வந்தாள். அமர்ந்தாள். அதே நிர்மலா. முன்னரிலும் அழகாக இருக்கிறாள்.

அவன் கோப்பிக் கிளாசை வாங்கி, மேசையில் வைத்துவிட்டு, - நிர்மலா என்று அன்போடு அழைத்தபடி அவள் கரங்களைப் பற்றினான். அவள் தீ சுட்டதுபோலக் கரங்களை இழுத்துக் கொண்டாள்.

- நிர்மலா...

- இந்தாங்க முதலில் இதைக் குடியுங்க...

அவன் வாங்கிக் குடித்தான்.

- நீங்க குவைத்திற்குப் போன நாளிலிருந்து இந்த அறையில் நான் படுக்கவில்லை. என்னால் முடியவில்லை. அடுத்த அறையில்தான் படுத்தேன். இன்றுதான் இந்த அறையைத் திறந்து துப்பரவு செய்தேன்...

நிர்மலா அவனை ஏக்கத்

(12ம் பக்கம் பார்க்க)

## புலவர்களுக்கு ஒரு வேண்டுதல்

பாதாதி கேசமாய்ப்
பெண்ணைப் புகழ்ந்து
பாடியது போதும்
கவிஞர்காள்!
பனையைப் புகழ்ந்து
பாடுவீர்!
இதோ நான் பாடுகிறேன்:
வடக்கின் செல்வப் பனையே
வானோக்கி வளரும் பனையே
உன்னுச்சிப் பச்சோலை
வாழ்வின் பச்சைக் கொடியோ?
ஏற்றிப் போற்றிடுவீர்
எங்கள் உபகாரி
தறித்துப் பனையைத்
தறிகெட்டுப் போகாதீர்!
பனையை நம்பும் காலம்
விரைவில் வந்து விடும்
பனை நடுவீர் பயன் பெற்றுப்
பல்லாண்டு வாழ்வீர்.

## ஒட்டகங்கள்

மண் எண்ணெ
விளக்கில் படித்த நாங்கள்
பெற்றோல் நாட்டில்
வேலை பார்க்கும்
ஒட்டகங்கள்.

## தாய் தள்ளலாமா?

தாயின் கருப்பையில்
உருவான மனிதன்
பிறந்த மண் தாயகம்
தாயின் அரவணைப்பில்
தன்னை மறக்கின்றான்
தாயகத்தின் பெருமைக்குத்
தன்னைக் கொடுக்கின்றான்
தாயோ தாயகமோ
தள்ளி வைத்தால்
தரணியில் துணையேது?

## குருடர்கள்

சிவப்பு விளக்குக்காரரே
உங்கள் கண்களுக்கு
ஒளி விளக்குத் தெரியாது
நீங்கள்
கண்ணிருந்தும்
குருடானவர்கள்

## தீபாவளித் திருநாள்

இலை குழை போட்டுத்
தடவித் தடவி
வளர்த்த ஆடு
தீபாவளிக்கு
அறுக்கப்பட்டது!

## விடியாத இரவுக்குள் விழுத்திவிடாதீர்

குடிக் கணக்கைத் தீர்க்கக்
கொடியை விற்று
விடியாத இரவுக்குள்
விழுத்தி விடாதீர்
மனைவியை.

- கேசரி

வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154




[3]

ஈவி ரக்கம் சிறிது மிலாதவன்
இன்சொல் என்பது யாதெனத் தேர்கிலான்
பாவி யர்க்குளே பாவியும் ஆகுவான்
பண்பி லர்க்கவன் நண்பனும் ஆகுவான்
மேவி நின்ற உடன்பிறப் பொன்றையும்
வீணில் வாடிடச் செய்வதில் வல்லவன்
ஓவியன் சென்ற ஓர்சிறு நேரத்தில்
உரத்த பேரொலி செய்தவண் வந்தனன்

''யாரி திங்கொரு ஸ்கூட்டரை விட்டது?
யானறிந் திடல் வேண்டு'' மென்றே அவன்
பேரிடி நிகர் சத்தத்திற் கேட்டலும்
பேதை யாய முதுமகள் சொல்லுவாள்
''யாரோ வந்தனன் ஸ்கூட்டர் பழுதென்றுன்
நாளை வந்தே எடுத்திடு வேனென்றுன்
பாரில் எங்கும் நடப்பது தான்இதிற்
பாய்ந்து கொள்ளுதற் கேதுள தென்றனள்.

வாதம் என்றிடு நோயிற் கிடந்தவள்
வாதம் தன்னிற் கொடியதோர் நோய்வந்தே
வாதம் செய்தலும் கண்கள் கலங்கியே
மறுபு றத்திற் திரும்பிச் சுவரினில்
தீதி லாத்தன் துணைவன் படத்தினை
நோக்கிக் கண்களின் நீரைச் சொரிந்தனள்
நீதி என்பது சற்றும் இலாதவன்
நின்ற திக்கையும் நோக்க மறுத்தனள்.

நோயிற் கால்கள் வழங்குதல் அற்றதும்
நுவலும் அன்புத் துணைவன் மறைந்ததும்
நேயம் வைத்திட வேண்டிய தம்பியே
நித்தம் நித்தம் குடித்திடர் செய்வதும்
''மாய மோ?விதியோ?'' என எண்ணியே
மயங்கி ஏங்கிடும் அந்தமூ தாட்டியை
பேயை ஒத்த உடன்பிறப் பானது
பெருங் குரலினில் எங்குன்சேய் என்றதே!

''என்னை மாமன் என்றே உன்றன் புத்திரி
என்று மேமதிக் கின்றனள் இல்லையே
இன்னும் தேநீரை ஏன்கொண்டு வந்திலள்''
என்றுமே அவன் கர்ச்சிக்கும் வேளையில்
சின்ன வண்ணக் கயல்விழி மெல்லவே
தேநீர் கொண்டு கொடுத்தனள் தெய்வமே!
என்ன செய்குவம் பெரிதும் இப்பாரிலே
இழந்தோர் செய்கையால் நல்லவர் மாய்கிறுர்.

''கல்லு டைத்த உழைப்பினில் நாளைக்குக்
காலை யில்ஒரு பத்தினைத் தந்திடு
தெல்லி யூர்வரை உன்னலற் காகவே
சென்று நான்வர வேண்டியும் உள்ளதே''
தொல்லை செய்திடும் மாமன் உரைத்தலும்
தோகை போன்ற கயல்விழி தானுமே
இல்லை யென்றும் ஓமென்றும்சொல் லாமலே
இடத்தை விட்டுமே மெல்லவே சென்றிட்டாள்

''உன்ம கட்கு மணத்தினைச் செய்திட
ஊரெல்லாம் அலை கின்றனன் நானுமே
இன்னுமோர் வரன் வந்திலன் நல்லனுய்
என்ன செய்குவேன் சொல்லுவாய்'' என்றுமே
தன்தமக் கையைக் கேட்ட குடியனை
தலை நிமிர்த்தியே பார்த்த மூதாட்டியும்
''உன்றனுக் கதில் அக்கறை உண்டெனில்
உலகி லேஅது தாமத மாகுமோ?''

என்றி யம்பியே மேலுமே சொல்லு வாள்
என்னுடன் பிறப்பாக இருந்தும் நீ
என்தன் சேயினில் அன்பினைக் கொண்டிலை
ஏதும் செய்ததாய்க் காண்கிலன் அப்பனே
இன்றும் அந்தக் குழந்தை உழைத்திட
இருந்து நீயுமே என்னுடன் உண்கிறுய்
நன்று தான்இது வென்றுநீ நெஞ்சினில்
நானிலத் திடை எண்ணிய துண்டுகொல்?

இவ்வி தம்அவள் மெல்ல உரைத்தலும்
இடியெனும் குரல் தன்னில் கழறுவான்
''எவ்வினை ப்பயனே? எவர்தேர் வரோ?
எங்கு தேடியும் நல்வரன் இல்லையே
செவ்விதிற் கற்ற ஆசிரியர் களோ?
செகத்தில் ஓர்லட்சம் சீதனம் கேட்கிறுர்
எவ்விடமும் மதிக்கும் மருத்துவர்
இரண்டு லட்சங்கள் சீதனம் கேட்கிறுர்

''மன்னு சங்கக் கடையின் மனேஜரும்
மற்றும் ஆயிரம் பற்பல கேட்கிறுர்
இன்னும் பஸ்ஸின் நடத்துநர் தாமுமே
இதற்கு மேற்படச் சீதனம் கேட்கிறுர்
என்ன செய்குவம் சீதனம் இன்றியே
ஏந்திழை மணம் எய்துதல் ஐயமே''
என்றவன் சொல மூதாட்டி கண்களே
இரண்டும் நீரைப் பெருக்கிடல் ஆயின.

(வளரும்)

## நம் நாட்டில் 56ம் ஆண்டுவரை

# சிங்களத்துடன் தமிழ்மொழி சமஉரிமை பெற்றிருந்தது

(முன் தொடர்ச்சி)

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவினின்று வரத பண்டிதர் என்ற கவிஞரும் கூழங்கைத் தம்பிரான் என்ற சிறந்த புலவரும் யாழ்ப்பாணத்துக்கு வந்தனர். வரத பண்டிதர் திருச்செந்தூர்ப் புராணம் முதலிய சிவ புராணங்களை இயற்றினுர். கூழங்கைத் தம்பிரானிடம் கல்வி பயின்ற சேனுதிராய முதலியார் பெரும் புலவராக விளங்கினுர். இவர் இயற்றிய நல்லையந்தாதி, நல்லைக் குறவஞ்சி முதலிய பிரபந்தங்கள் சுவைமிக்கவையாகும். இவர் வழியாக யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற ஒரு வித்துவ பரம்பரை தோன்றுவதாயிற்று.

### தமிழ்ப் புலமைக்கு உறைவிடம்

19-ம் நூற்றுண்டில் ஆங்கிலேயரின் ஆட்சி இலங்கையில் நிலை பெற்றது. இக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சி உச்ச நிலை அடைந்தது. தமிழ்ப் புலமைக்கு உறைவிடமாக அது விளங்கியது. சேனுதிராய முதலியாரின் வழி வந்த வித்துவப் பரம்பரை தழைத்தோங்கியது.

### நாவலரின் அரிய சேவை

சேனுதிராய முதலியாரிடம் கல்வி கற்ற ஆறுமுகநாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் அரிய சேவை புரிந்து யாழ்ப்பாணத்தின் புகழ் சுடர்விட்டு

**சு. நடேசபிள்ளை**

ஒளிரச் செய்தார். இவர் திருக்குறள், திருக்கோவையார், நன்னூல், பெரியபுராணம், கந்தபுராணம் முதலிய நூல்களைத் திருத்தமான முறையில் அச்சிட்டு உதவினுர். பாலபாடம், பெரியபுராணச் சுருக்கம், திருவிளையாடற்புராணச் சுருக்கம் முதலிய உரை நூல்களை எழுதி வெளியிட்டார்.

### தமிழ் உரை நடைத் தந்தை

இவருடைய உணர்ச்சி மிக்க பிரசங்கங்களும் தெளிவும் பொருட்செறிவும் வாய்ந்த இவரது உரை நடையும் தமிழில் ஒரு புதிய இயக்க முறையை உண்டாக்கின. தற்காலத்துத் தமிழ் உரை நடைக்கு இவர் தந்தை என்று சொல்வது மிகவும் பொர்ருத்த மாகும். இவரது உரை நடையின் வீறுமிக்க ஆற்றலை இவருடைய பெரியபுராணப் பதிப்பிற் சேர்க்கப்பட்ட ஆசனக் கட்டுரைகள் நன்கு புலப்படுத்துகின்றன

இவர் தமிழ் நூல்களை வெளியிட்ட முறையைப் பின்பற்றி சி. வை. தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் முழுவதையும் கலித்தொகை, சூளாமணி, வீரசோழியம் முதலிய அரிய நூல்களையும் ஏடுகளினின்று பரிசோதித்துப் பதிப்பித்தார்.

(12ம் பக்கம் பார்க்க)

**ஈழத்தில் சிறப்பெய்திய கடல்கடந்த தமிழ்**


# விவசாயிகளே!

BAYER

**உங்கள் நெல்வயல்களில் காணப்படும்**

**சந்துக்குத்தி, கபிலநிற தண்டுத்தத்தி, இலைத்தத்தி கொப்புழா, திரிப்ஸ் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதுடன்.**

**நிலக்கடலை, காய்கறிவகைகள், உருளைக்கிழங்கு, புகையிலை**

ஆகியவற்றைத் தாக்கும்

**வேர்மணிப் புழுக்கள், வெட்டுப்புழுக்கள், துளைப்புழுக்கள்** ஆகியவற்றைக் கட்டுப்படுத்த சிக்கனத்துடன் கூடிய அதி சிறந்த

# குரேட்டர் 3% மணிகள்

பாவித்து அதிக பலன் பெறுங்கள்.

விலை: 500 கி.—18 ரூபா, 2 கி. கி.—65 ரூபா, 15 கி. கி.—475 ரூபா

**உங்கள் தயாரிப்பாளர்கள்:-**

# ஹேகெம் லிமிட்டெட்,

400, யூனியன் வீதி, கொழும்பு - 10,

தொலைபேசி: 91181, 93138.

# செயற்கை மழைபற்றிய சிந்தனை எப்போது உதயமானது?

## சிந்தித்தவர் ஒருவர்

## ஆய்வு நடத்தியவர் பலர்

## வெற்றிகண்டவர் வேறொருவர்!

அறிவுக் கெட்டிய வரலாற்றுக் காலந் தொட்டு மனிதன் வானிலைகளில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ள முயன்றிருக்கிறான். மழையையும் கடுங்காற்றையும் புவி நடுக்கத்தையும் கண்டு மனிதன் பயந்துஒளித்த காலம் இருந்தது. ஆனால் இன்று மனிதன் வானிலையைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயல்கிறான். இயற்கையை மனிதனால் கட்டுப்படுத்த முடியாவிடினும், இயற்கையைத் தனக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள அவனால் முடியும். அவ்வகையில் வறட்சி நிலவும் காலவேளைகளில், மழையைச் செயற்கையாகப் பெய்விக்கும் முயற்சிகள் இன்று உலகின் பலபகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

**அ. நடராசன்**

அமெரிக்காவைச் சேர்ந்த எட்வேட்பவர்ஸ் என்ற அறிஞர், 1871இல் போரும் வானிலையும் என்ற நூலை எழுதினார். பெரும் போர்காலங்களில் பரவலாக வெடிக்கப்படும் வெடிகள் மிகுந்த மழையைப் பொழியச் செய்தன என்று கருதினார். அதனால் நமக்கு மழை தேவையான போது நிறைய வெடிமருந்தை வெடித்தால் மழை பெய்யும் என்பது இவரது கருத்தாகும். இத்தத்துவத்தைப்பற்றி அமெரிக்க நாட்டுப்பொதுமன்றத்தில் பேசி, 1891ஆம்ஆண்டு கோடை காலத்தில் இதனைச் சோதித்துப் பார்ப்பதற்காக அவர் 900 டொலர்களைப் பெற்றார். திட்டப்படி பரிசோதனை நடந்தது. ஆனால் மழை தான் பெய்யவில்லை.

சென்ற நூற்றாண்டின்இடையில் அமெரிக்காவில் வாழ்ந்த எஸ்ப்பை என்ற வானிலை அறிஞர் தீயைப் பெரிதாக மூட்டினால் வெப்பக்காற்று மேலெழுந்துசென்று மழையை பொழிவிக்கும்; மேகங்களை உண்டாக்கும் என்று உறுதியாக நம்பினார். ஆனால் பரிசோதித்துப் பார்த்ததில் முடிவுகள் நேர்மாறாகவிருந்தன.

லூயிஸ்காத்மன் என்பவர் சிக்காக்கோவைச் சேர்ந்தவர். இவர் சுமார் 1890இல் நூற்றுக் கணக்கான அடி உயரத்தில் ஒரு பலூனிலிருந்து திரவ வடிவமான காபர்ன்-டை- ஒக்சட்டைக் காற்று மண்டலத்தில் வேகமாகச் செலுத்துவதன் மூலம் நிர்மலமான வானத்தில் இருந்து மழையைப் பொழியச் செய்யமுடியும் என்று கூறினார். ஆனால் பரிசோதித்துப் பார்த்ததில் பயன் கிட்டவில்லை.

விமானங்கள் மேன்மேலும் வளர்ச்சியடைந்து வந்தபோது செயற்கை மழைத்திட்டங்கள் பல உருவாகின. மின்னூட்டம் பெற்ற மணலும் சோப்புச் சீவல்களும் சிற்சில இரசாயனப் பொருட்களும் விமானங்களிலிருந்து போடப்பட்டன. ஆனால் செயற்கை மழை பொழியவில்லை. ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆகஸ்ட் வெராட் என்பவர் 1930இல் கோடைகாலத்தில் ஒரு விமானத்திலிருந்து பனிக்கட்டித் துண்டுகளை (இவை திடப்பொருள் வடிவமான காபன்-டை ஒக்சைட்) மேகத்தில் இட்டு, அதன் மூலம்செயற்கை மழையினைப் பொழிய வைத்ததாக அறிவித்தார். ஆனால் அவர் கூறியதை டச்சு நாட்டு (ஒல்லாந்துப்) பெரியவர்களும் விஞ்ஞானிகளும் எதிர்த்து ஏளனம் செய்தனர். இப்பரிசோதனையைத் தொடர்ந்துநடாத்தித் தமது கூற்றை மெய்ப்பிப்பதற்குத் தேவையான பொருள் வசதி அப்போது அவரிடம் இருக்கவில்லை.

டாக்டர் வின்சென்ட் ஷாப்பெர், டாக்டர்எர்விஸ் லாங்ம்யூ என்ற இரு அறிவியல் ஆய்வாளர்கள் 1946இல் ஒரு ஆய்வினை மேற்கொண்டனர். அவர்கள் ஒரு சாதாரண குளிர்சாதனப் பெட்டியில் ஆய்வுகளை நடத்திக்கொண்டிருந்தனர். அவர்களின் மூச்சு அந்தப்பெட்டிக்குள் சென்றபோது சிறிய அளவில் அங்கு செயற்கைமேகங்கள் உருவாகக்கண்டனர். இந்தமேகங்கள் நீரின் உறை நிலையைக்காட்டிலும் குளிர்ந்திருந்தன. ஆனால் இவற்றில் காணப்பட்ட நீர்த்துளிகள் மட்டும் உறையவில்லை. இல்வாறு உண்மையான மேகங்களில் காணப்படும் மிகு குளிர் நிலை இந்த மேகங்களில் ஏற்பட்டது. ஷாப்பெர் இந்த மேகத்திற்குள் உலர்ந்த பனிக்கட்டித் துண்டுகளைப் போட்டார். அப்போது பளபளப்பான பனிக்கட்டிப்படிகங்கள் உண்டாவதைக் கண்டு அவர் திகைப்படைந்தார். இவ்வாறு செயற்கைப்பனிமழை உண்டாக்கப்பட்டது. வெளிப்புறக் காற்றிலும் இயற்கையான மேகங்களிலும் இந்த ஆய்வுகளைப் பெருந்திட்டத்தில் நடத்தமுடியுமா என்பதே பிரச்சினையாகவிருந்தது.

1946ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள், ஷாப்பெர் மேற்கு மகாசூசெட் பகுதியில் ஒரு விமானத்திலிருந்து சில உலர்ந்த பனிக்கட்டித் துண்டுகளை ஒரு மேகத்தில் போட்டார். அப்போது அந்த மேகத்தில் மிகுதியாகக் குளிர்ந்திருந்த நீர்த்துளிகள் பனிக் கட்டிப்படிங்களாக மாறியதைக்கண்டார். சில நிமிடங்களில் இந்தப்படிகங்களில் சில பெரிதாக வளர்ந்து பனியாகப் பெய்தன. இவ்வியத்தகு பரிசோதனைக்குப்பிறகு இதே துறையில் பல ஆய்வுகள் நடைபெற்றன. நடைமுறையில் பயன்படும் வகையில் 'மேகவிதைப்பு' எவ்வாறு இருக்க வேண்டும் என்பதே கண்டு பிடிக்கப்படவேண்டிய ஆய்வாக இருந்தது. அதன்படி 1958இல் அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், வானிலை மாற்

(12ம் பக்கம் பார்க்க)

---

● உலக அழிவு:

# விஞ்ஞானிகள் கூற்று பலிதமாகுமா?

**13-11-83 - இல்** வெளிவந்த 'ஈழநாடு' வார இதழில் கி - பி 2026 நவம்பர் 13-ம் திகதி உலகம் அழியும் என்ற தலைப்பில் (எட்டாம் பக்கத்தில்) ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டிருந்தது.


இத்தகைய கட்டுரைகளை வெளியிட்டு மக்களுடைய மனதில் அச்சத்தையும் வீண் பரபரப்பையும் ஏற்படுத்தவேண்டுமா? ஒரு குறித்த ஆண்டில் அல்லது ஒரு குறித்த திகதியில் உலகம் அழியும் எனத் திடமாக யாராவது முன்னதாகக் கூற முடியுமா? கூறியபடி நடக்குமா? உலகில் பல இடங்களில் பல்வேறு முறைகளில், அளவுகளில் புவி நடுக்கம், வெள்ளப் பெருக்கு, புயல், வறட்சி, கொள்ளை நோய் போன்றவற்றால் ஏற்பட்டு வரும் அழிவுகளை முன்கூட்டியே சரியாகக் கூற முடியாத நிலையில் இப்போதைய உலகியல் அறிஞர்கள் இருக்கும் போது உலகம் முழுவதும் ஒரு குறித்த ஆண்டில் அல்லது திகதியில் அழியும் எனக் கூறுதல் சாத்தியமானதா?

மூன்றுவது உலகப்போர் ஏற்படுமானால் தற்போது பெரும் வல்லரசுகள்வசம் இருக்கும் பயங்கர நவீன ஆயுதங்கள் எமது பூமியில் வசிக்கும் உயிரினங்கள் அனைத்தையும் சில நிமிட நேரத்தில் அழித்து உலகம் முழுவதையும் 'பிணக்காடு' ஆக்கக் கூடிய சக்திமிக்கவையாயுள்ளன. இவ்வாறு வல்லரசுகள் நினைத்தால் ஒரு சில நிமிடங்களில் உலகினை அழித்தல் சாத்தியமானது. ஆனால் இவ்வாறு தமது நாட்டினையும் பிறநாடுகளையும் நிர்மூலமாக்குவதற்கு எந்த நாடு துணிந்து எத்தனிக்கும்? ''நானும் இல்லை, நீயும் இல்லை, உலகமும் இல்லை'' என்று நினைத்து எந்த நாடாவது துணிந்து இக்கொடிய செயலில் குதிக்குமா?

இவை ஒரு புறமிருக்க, ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக வானியல்துறைப் பேராசிரியர் கலாநிதி கெய்ஸர் (Dr. Gay-Zer) என்பவர் 1995இல் அதாவது இன்னும் சுமார் 12 ஆண்டுகள் சென்றதும் அண்டவெளியில் அலைந்துகொண்டிருக்கும் ஒரு கோள் (கிரகம்) பூமிமீது மோதுவதன் மூலம் உலகம் அழியும் என்று கூறியுள்ளார். கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஞாயிறு ஒப்சேவர்' 2-10-1983 இதழில் 24 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட கலாநிதி

(10ம் பக்கம் பார்க்க)

**வ. மகாதேவன்**




செற்றிகள் ரூபா 4700/- முதல் - அலுமாரிகள் 3500/- முதல் - கபினற்றுகள் 950/- முதல்




## மொழிச் சிறப்பு பாரீர்

ஃ ஆங்கிலம் வணிகத்தின் மொழி
ஃ லத்தீன் சட்டத்தின் மொழி
ஃ கிரேக்கம் இசையின் மொழி
ஃ ஜேர்மன் தத்துவத்தின் மொழி
ஃ பிரெஞ்சு தூதின் மொழி
ஃ இத்தாலியன் காதலின் மொழி
ஃ ரஷ்யன் அரசியலின் மொழி
ஃ தமிழ் இரக்கத்தின் மொழி

**வி. வனிதா**

## விஞ்ஞானிகள்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

டப்ளியு. ஏ. பி. அமரசிங்க எழுதிய கட்டுரையில் இதுபற்றிய விபரங்கள் அடங்கியுள்ளன.

பேராசிரியர் கெய்ஸர் இத்தகைய ஒரு மோதல் சுமார் 5 கோடி (50 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் கூறுகிறார். இத்தகைய ஒரு மோதல் 1995 இல் நிகழுமானால் அதன் இறுதியான விளைவுகள் எவ்வாறு அமையலாம் என்பதைக் கலாநிதி கெய்ஸரோ வேறு எந்த விஞ்ஞான நிபுணரோ இன்னும் கூறவில்லை. 5 கோடி ஆண்டுகளுக்கு முன் இத்தகையதொரு 'இரு கிரக மோதல்' எவ்விதம் நிகழ்ந்தது என்பதையும் அதனால் மனிதனுக்கு ஏற்பட்ட விளைவுகளையும் இதுவரை காலமும் எவரும் விளக்கித் தெளிவுபடுத்தவில்லை.

1955இல் இத்தகைய மோதலொன்று நிகழக்கூடுமானால் மனிதகுலம் எத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளாகும்? பூமிக்கு எத்தகைய அழிவுகள் ஏற்படும்? இவற்றின் இறுதியான விளைவுகள் எவ்வாறு அமையும்? சுமார் 5 கோடி ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இத்தகைய மோதலுக்குக் காரணங்கள் யாவை? அந்த மோதலினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

1995இல் ஏற்படக்கூடிய அழிவுகள், மாற்றங்கள் அக்கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளன.

''மோதல் ஏற்படும்போது மின்கதிர்கள் தொடர்ந்து பாயும்; கருமுகில் படலங்கள் பூமியைச் சூழும். சூரியன் இருளுக்கூடாக 'செந்நிறப்பந்து' போல் தோற்றமளிக்கும். வானிலையும், வெப்பநிலையும் மாற்றமடையும்; பயிரினங்களும் வேறு உணவுவகையும் அழியும்; மனிதரும் மிருகங்களும் உணவின்றி அல்லற்பட வேண்டியேற்படும்; பெரும் கடற்பெருக்கினால் நிலப்பரப்புகள் நீரினுள் மூழ்கும். புவி நடுக்கங்கள் நிகழும்; புதிய மலைகள் உருவாகும்; காற்றின் வேகம் அதிகரிக்கும்; மின்னலும் இடிமுழக்கமும் மனிதர்களை நடுங்க வைக்கும்!

''மனிதவர்க்கத்தில் சுமார் முற்காற்பங்கினர் மரணமடைவர். எஞ்சியுள்ள சுமார் காற்பங்கினர் புவிநடுக்கத்திற்கும் புயற்காற்றுகளுக்கும்இடையே வசிப்பிடம் தேடி அலைந்து திரிவர். வெளிமண்டலத்திலிருந்து தொடர்ச்சியாக மின்னலைகள் பாய்ந்தவண்ணம் இருக்கும்.

சக்திமிக்க மனிதர்கள் (Super humans) உணவுப் பொட்டலங்களைப் புவியில் தப்பியுள்ள மக்களும் வானத்திலிருந்து வீசுவர். புவியும் சூரியனை வலம், வரும் பாதையை (புவியொழுக்கு) மாற்றியமைக்கல... ...கள் தமது குறைகளையும் வேற்றுமைகளையும் மறந்து ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ விரும்புவர். கி. பி. 2005 அளவில் ஒரு புதுயுகம் எமது பூமியில் ஆரம்பமாகும்.''

இவை யாவும் கற்பனையா? உண்மையாக நிகழக்கூடியனவா? காலம்தான் பதில் கூற வேண்டும்.

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

உங்கள் நடவடிக்கைகளில் தனிச் சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார். குறுக்குவழி உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். பகைவர் மூட்டம் பனிமூட்டம்போல் தென்படும். திருமண நோக்கம் மேலிடும்.

## ரிஷபம்

இடப்பிரிவு இதமாக இருக்கும். பெரியோரின் பாராட்டிற்கும் இடமுண்டு. எண்ணிய விடயங்களில் தடைகள் ஏற்படும். மறைமுகமாக நடத்திய விடயம் அம்பலத்திற்கு வரலாம். குடும்பப் பிணைப்பு குதூகலமாக இருக்கும்.

## மிதுனம்

உண்மை வழி நின்று உயர்வடைவீர். போதுமென்ற மனம். பொன்னான வாரம். புதிய தொழில் குறித்துத் திட்டங்கள் தலைதூக்கும். பக்கத்தில் இருப்பவரே பாதையை மாற்றப்பார்ப்பர். படுகுழி பக்கத்தில்.

## கடகம்

ஏமாற்றத்தின் தாக்கம் உங்களுக்குச் சோர்வைத் தரும். தனிவழிப் பயணத்தை தவிர்த்துக்கொள்ளவும். குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும். கல்வி விடயத்தில் அபிவிருத்தி தென்படும். இடப்பிரிவுகளும் உண்டு.

## சிம்மம்

ஏமாற்று வேலைகள் இடம்பெறும். வியாபாரங்களில் புதிய முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். பணம் பறிபோவதற்கு இடமுண்டு. கவனம் திடீர் வரவு திருப்தியைத் தரும். முக்கிய பயணம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

## கன்னி

போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் மேலிடும். குமுறும் நெஞ்சத்துடன் நாட்களைக் கடத்துவீர். எதிலும் அவசர முடிவைத் தவிர்த்துக்கொள்ளவும். பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும். மூலதன விடயங்களில் அவதானம் நன்று.

## துலாம்

சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. எதிர்பார்த்த வரவுகள் தடைப்படும். நீண்டநாள் பூமிப்பிணக்கும் நிவர்த்தியடையலாம். தொழில் புரியும் இடத்தில் வேற்றுமைகள் தலைதூக்கும். சிறு விபத்துக்களும் இடம்பெறலாம். நிதானம் நன்று.

## விருச்சிகம்

தாய்வழி மூலம் நற்செய்திகளுக்கு இடமுண்டு. எதிர்பாராத விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு. எதிலும் அவசரகோலம் தென்படும். அமைதியுடன் செயல்படவும். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்தவும். பிரயாணங்களைத் தவிர்ப்பின் நன்று.

## தனுசு


மற்றவர்களின் இன்னல் கண்டு இரக்கம் காட்டுவீர்.

(13ம் பக்கம் பார்க்க)

**திருமதி. க. வேலுப்பிள்ளை**


# உங்கள் பணத்திற்கு....

# 28% வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

| காலம் | ரூபா 500/- — ரூபா 99,999/- | | ரூபா 100,000/- அதற்கு மேல் | |
|---|---|---|---|---|
| | மாதாந்தம் | கால முதிர்வு | மாதம் | கால முதிர்வு |
| 3 மாதம் | — | 16% | — | 17% |
| 6 மாதம் | — | 17% | — | 19% |
| 12 மாதம் | 19% | 22% | 20% | 23% |
| 18 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 24 மாதம் | 21% | 25% | 22% | 26% |
| 30 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 36 மாதம் | 23% | 27% | 24% | 28% |

themaharajaorganaisation

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்
122. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாவுக்கு அதிகமான தொகைக்கு கால முதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | [illegible] | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 350,000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,015 | [illegible] |
| வைப்பு மூலதனம் | 3 579,820 | [illegible] | [illegible] |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | [illegible] | [illegible] | [illegible] |
| நிகரலாபம் (வரிகட்டிய பின்) | 163,916 | 453,777 | [illegible] |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

இயக்குனர்கள்
1. திரு. ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என். குமாரசாமி, F.C.A (Eng. & Wales) ATII (Eng.) M. Inst. A. M (Eng.), AMBIM (Eng.), F.C.A. (Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons. A  B (Lond) சட்டத்தரணி
6. திரு. பு. ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A. A.C.M.A
7. திரு. டபிளியு. பண்டாரநாயக்கா MBIM (Eng.)
8. திரு. எ. குணசேகரா

வியாபார நோக்கங்கள்
- முதலீட்டு வைப்பு
- கைத்தொழிலாளர்களுக்கு இயந்திரங்கள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
- காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2
காரியாலயம்: [illegible] பாங்ஷால் வீதி கொழும்பு.


## சிறுவர் நாம்

### ஹி..ஹி..

ஆசிரியர்: (மாணவனிடம்) 50 பலாப்பழங்களை 5 பேர் பகிர்ந்து சாப்பிட்டால் ஒவ்வொருவருக்கும் என்ன வரும்?

மாணவன்; வயிற்று வலி வரும் சார்.

கா. யோ. கிரிதரன்

## ஓ, குழந்தைகளே!

நல்ல குழந்தைகளால் — அன்றோ
நாடு(ம்) நலம் தாங்கும்?
செல்வம், புகழ் வென்றே — வீடும்
சிறந்து சிறந் தோங்கும்!

வாருங்கள் குழந்தைகளே — உங்களால்
வையகம் விடிவைப் — பெறும்!
வாருங்கள்! வளருங்கள்! — ஆம்ஆம்
வருங்காலம் நீங்கள்!

நீங்கள் நினையுங்கள்! — இங்குள்ள
நிலைமைகள் நன்றாகும்
தூங்கும் ''தெய்வீகம்'' — விழிக்கும்
தூய்மைகள் வந்தாளும்

வரம்போல் வரும் யாக்கை — வாழ்க்கை
வளர்ச்சிகளின் சேர்க்கை!
திறவுகோல் அறிவே! — அதன்வழி
சென்றடைதல் ''வாகை''

இனிமைகள் வர வருக! — எங்கும்
எழுச்சியைத் தரவருக!
மனிதநலம் உய்ய — வருக!
மகிழ்ச்சி மழை தருக!

- சகோ. பிர. பாலகிருஷ்ணன்

## விளையாட்டு இலங்கையில் உதைபந்தாட்டம்

கடந்த வாரம், இலங்கைத் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் சிங்கப்பூர் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் சிநேகபூர்வமான முறையில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியது.

இப்போட்டியை நான்நேரில் சென்று பார்க்க ஆசைதான். ஆனல் மனதில் என்னை அறியாமல் ஒருவிதபயம். தொலைக்காட்சியில்தான் இப்போட்டியைப் பார்க்க முடிந்தது.

...னர்கள். யாருமே எதிர்பார்க்காத சமயங்களில் இவர்கள் கோல்களைப் போட்டார்கள். சிங்கப்பூர்க் கோஷ்டியின்வெற்றிக்கு அக்கோஷ்டியில் அங்கம் வகிக்கும் தமிழ் வீரர்களே முதுகெலும்பாக இருந்தார்கள் என்று துணிந்து கூறலாம். சுந்தரமூர்த்தி, ஜெயப்பிரகாஷ், நாகேந்திரன் ஆகிய தமிழ்வீரர்களின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

சிங்கப்பூர்க் கோஷ்டியிலும் தமிழ்வீரர்கள் அங்கம்வகிக்கிறார்களா என, என்பக்கத்தில் இருந்து ஒருவர் மிக ஆச்சரியமாகக் கேட்டார்.

## சிங்கப்பூரின் வெற்றிக்கு காரணமாயிருந்தவர்கள் தமிழ் வீரர்களே!

தொலைக்காட்சியில் போட்டியைக் காண நேர்ந்தபோதிலும் நேரில் பார்ப்பதே போன்றிருந்தது போட்டி.

இரு நாடுகளின் ஆட்டத் தரத்தையும் வீரர்களின் நுணுக்கமான ஆட்டங்களையும் மிக இலகுவாகக் காணக் கூடியதாக இருந்தது.

இலங்கையைவிட சிங்கப்பூர் மிகச் சிறிய நாடு. ஆனல்அதன் உதைபந்தாட்டத் தரம் மிகப் பெரியதாயிருந்தது!

இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடிவடையும்வரை சிங்கப்பூர் கோஷ்டியினர் கோல்கள் போடக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் மிகமிகச் சாதுரியமாகவே பயன்படுத்தி

''அண்மையில் நான் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தேன். அங்கு பல இன மக்கள் ஒற்றுமையாக வாழ்வதைக் கண்டேன். ஒற்றுமையாக வியாபாரம் செய்வதைக் கண்டேன், ஒற்றுமையாக வீதியெங்கும் நடமாடுவதைக் கண்டேன். அங்கு, வேற்றுமை - பாகுபாடு - வீதாசாரம் எதுவுமே கிடையாது. திறமைக்குத்தான் அங்கு முதலிடம். அதனல்தான் அந்நாடு, எல்லாத் துறைகளிலும் மிகவிரைவாக முன்னேறி வருகின்றது'' என என் அருகில் இருந்தவருக்கு நான் கூறினேன்.

இப்போட்டி இடைவேளை

(1_ம் பக்கம் பார்க்க)

★ தேவா

# நமது பிள்ளைகளுக்காக சொற்ப நேரத்தை ஒதுக்குவோம்

நம் பெற்றோர்க்கு நாம் பயந்து வளர்ந்தது போல் நம் பிள்ளைகள் இல்லையே? நாம் ஒன்று சொன்னால் அதற்கு நம் பிள்ளை எதிர்கேள்வி கேட்கிறதே - இப்படிப் பல பெற்றோர்கள் இன்று அங்கலாய்க்கிறார்கள். இன்று பிள்ளைகள் பிரச்சினைக் குரியவர்களாக இருப்பது ஏன்?

இயந்திரவாழ்க்கை — பொருளாதாரப் பிரச்சினை — சனத்தொகைப் பெருக்கம்- ஆம், இவை மூன்றும்தான் அடிப்படைக் காரணிகள். இன்று பொருளாதாரப் பிரச்சினையால் குடும்பத்தில் கணவன், மனைவி இருவரும் தொழில் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனால் கல்வி விஷயத்தில், பராமரிப்பு விஷயத்தில் பிள்ளைகள் பெற்றோர்க்குப் பிரச்சினைக் குரியவர்களாகி விடுகிறார்கள். முன்பு கணவன் உழைக்க, மனைவி வீட்டிலிருந்து பிள்ளைகளையும் குடும்பத்தையும் கவனித்து வந்தாள். அன்றையதாய் தனது குழந்தைகளுக்குப் பண்பாட்டுக் கதைகளையும், சரித்திரக் கதைகளையும் பக்திக் கதைகளையும் எடுத்துக்கூறி, நற்சிந்தனைகளையும் நற்பண்புகளையும் சிறுவயது முதலே பிள்ளைகளிடத்தில் வேரூன்றச் செய்துவிடுவாள். ஆனால் இன்றைய தாய் வெளியில் சென்று வேலை பார்த்து வீடுவரும் போது இதற்கெல்லாம் எங்கே நேரம்? இதனால் நம் இளைய தலைமுறையினர் சிந்தனையில் தறிகெட்டுப் போகிறார்கள்.

சனத்தொகைப் பெருக்கத்தால் பொருளாதாரப்பிரச்சினை உருவாகிறது. இன்று பல குடும்பங்களில் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளே இருக்கிறார்கள். இதனால் சிறுவயது முதல் டியூஷன் வகுப்புகளுக்குச் செல்வதாலும் பொழுதுபோக்கிற்கு தொலைக்காட்சி போன்ற நவீன சாதனங்களுடன் மினக்கெடுதலாலும் பெற்றோர்களின் அன்பும்

பிலோராம்சந்த்

அரவணைப்பும் பிள்ளைகளுக்குக் கிடைப்பது குறைவாகிறது. தொழில் துறைகளுடனும் குடும்பவாழ்க்கைதச் செலுத்தும் மற்றும் பிரச்சினைகளிலும் பெற்றோர் மினக்கெடுவதாலும் பெற்றோர் - பிள்ளைகள் இணைப்பும் பாசமும் குறைந்து விடுகிறது. இதனால் நம் கலாசார நயங்களையும், பண்பாட்டுத்தத்துவங்களையும், உன்னத வாழ்க்கை நெறிகளையும் நம் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பது நம் பெற்றோர்க்கு உள்ளத்தில் அலையாக வீசும்அவா.

துன்பத்தில் தான் இன்பம் உண்டு என்பார்கள். ஒரு சொற்ப நேரத்தை நம் குழந்தைகளுக்காக ஒதுக்கி அவர்களது ஆசை அபிலாசைகளை அறிந்து மகிழ்வித்து நாமும் மகிழ்வது பெற்றோராகிய நமது தலையாய கடமைகளில் ஒன்று.

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

''சீ...சீ... இவங்களையெல்லாம் ஆடாக்கட்டித் தோலா உரிக்கவேணும்......''

அவரால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஆனாலும், தான் கதிரையில் இருந்து காலாட்டிக்கொண்டிருக்கும்போது அவன் உருப்படியான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறான் என்பதையும், மக்கள் அவனைப்போன்றவர்கள் தலைவர்களாக வர வேண்டியதன் அவசியத்தை உணரத் தொடங்கிவிட்டார்கள் என்பதையும் அவர் புரிந்துகொண்டார்.

இந்த நிலையில் நேர்மையுடன் போட்டியிட்டு அவனை வெல்வது முடியக்கூடிய காரியமாக அவருக்குத் தோற்றவில்லை.

தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்குமுன்...

இரண்டு போத்தல் வெளி நாட்டுச் சாராய...... கந்தன் என்ற கராட்டிக்காரன்......

அவ்வளவுதான்.

விடிவதற்குமுன் உள்ள கருக்கல் வேளையில் விதானையாரின் மகனும், கந்தனும், விஜயபாலனும் பனை வடலிப் பக்கம் சென்றதைப் பலர் கண்டிருந்தனர். அவர்கள் எல்லாம் 'கோர்ட்டில்' ஏறிச் சாட்சியும் சொல்லினர்.

வழக்கின் தீர்ப்புச் சொல்லப்பட்ட அன்று, பல மக்கள் கூடியிருந்த மன்றிலே ....விதானையார் மகன் தனது சட்டத்தரணியை நிலம் முட்டும் மாலைகளும் மேளவாத்தியங்களுமாய் அழைத்துச் சென்ற காட்சியும்...... அன்று இரவு அந்தக் கிராமமே செவிடுபடும்படியாக அடுக்கடுக்காய் வெடி கொழுத்திப் போட்ட நிகழ்வும்...... தரிசித்த பின்னர் சுசலாய்ச் சிதறிப்போன இதயத்தை சிவபாலன் எப்படிக் கோத்துப் பிடித்துக் கொண்டான் என்பது அவனுக்கே தெரியவில்லை. தம்பி இறந்த நாள் முதல் அரை விசரனாய்த் திரிந்தவன் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளில் இருந்து முழு விசரனாய்த் திரிகின்றான்.

பழைய நினைவுகளின் கனம் மூளையைக் கசக்கி எடுத்துக் கொண்டிருந்தபோது விஜயபாலனின் இறுதி வேண்டுகோள் மீண்டும் மீண்டும் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

''என்னை வெட்டிப் போட்டாங்கள் அண்ணை. ஆனால் எங்கடை கிராமத்தை.... இந்த அமிர்தபுரத்தை அவங்கள் அழிச்சுப் போடாமல் நீங்கள் தான் பார்த்துக்கொள்ள வேணும்......''

அவன் தன்னையே கசந்தபடி நிமிர்ந்தபோது, காவடி கண்ணுக்கு எட்டாமல் போய்விட்டிருந்தது.

ஒழிக்கப்படவேண்டியவர்கள் நீதியினாலும் சட்டத்தினாலும் ஒழிக்கப்படுவார்கள் என்று காத்திருந்த அவனுக்கு......

அவனுள்ளே திடீரென ஒரு உலுக்கல்......!

தம்பியின் இறுதி வேண்டுகோளை எப்படியும் நிறைவேற்றிவிடவேண்டும் என்ற உந்தல் திடீரெனத் தோன்றிய போது அது மற்றைய உணர்ச்சிகள் யாவற்றையும் மறைத்துவிட்டிருந்தது. அதனால் அவன் சமனப்பட்டிருந்தான்.

கிராமோதயசபைத் தலைவர் பதவிக்கு விதானையார் மகனை எதிர்த்துப் போரிடவரும் பல போராளிகள் வரிசையில் தானே முன்னுக்கு நிற்பது என முடிவு செய்துகொண்டு அவன் மணலை விட்டு எழுந்த போது அவன் மனம் கனம் குறைந்து இலேசாகியிருந்தது.

அடுத்த நாள்...... வழக்கம் போலவே உலகுக்கு விடிந்த ஒரு பகல் அவனுக்கு ஒரு புதிய பகல் போலத்தோன்றியது.

(யாவும் கற்பனை)

# கடல் கடந்த தமிழ்

8ம் பக்கத் தொடர்ச்சி

தமிழகத்தில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய மறுமலர்ச்சிக்கு உதவியவர்களின் வரிசையில் ஆறுமுகநாவலரும் தாமோதரம்பிள்ளையும் முன்வைத்து எண்ணுதற்குரியவர்கள் என்பது மிகையாகாது. இவர்கள் இருவரும் தென்னிந்தியாவில் பெரும் புகழ் ஈட்டியவர்கள். இவர்களுக்குப் பின் யாழ்ப்பாணத்தினின்று தென்னிந்தியாவுக்குச் சென்று அங்குள்ள கற்றோரின் நன்மதிப்பைப் பெற்ற புலவர் பலராவர். திருவாவடுதுறை ஆதீன வித்துவானக விளங்கிய சபாபதி நாவலர் அவர்களில் பிரதானமானவர்

## நாவலர்காலத்துக்குப் பின்னும்...

ஆறுமுகநாவலர் காலத்துக்குப் பிறகும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் புலமை மணம் மறையவில்லை. குமாரசுவாமிபிள்ளையிடத்தும் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையிடமும் தமிழ் கற்ற புன்னாலைக்கட்டுவன் கணேசய்யர், இலக்கண அறிவு நிரம்பியவராய்த் தொல்காப்பிய உரை விளக்கம் எழுதி உதவினர். இவர் இயற்றிய ஈழநாட்டுப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணத்துப் புலவர்களின் நூல்களைப்பற்றியும் அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப்பற்றியும் அறிவதற்கு சாதனமாக இருக்கிறது. இனிய பல செய்யுள் நூல்களை இயற்றிய நவாலியூர் சோமசுந்தரம் பிள்ளை யாழ்ப்பாணத்தில் தோன்றிய சிறந்த கவிஞர்களில் ஒருவராவர்.

## விபுலானந்தரின் முத்தமிழ்ப் புலமை

மட்டக்களப்பிற் பிறந்து யாழ்ப்பாணத்துப் புலவர்களுடன் தொடர்பு கொண்ட விபுலானந்த அடிகள் எழுதிய யாழ் நூல், மதங்கசூளாமணி என்ற நூல்கள் அவரது முத்தமிழ்ப் புலமையைக் காட்டுகின்றன. நாற்பது ஆண்டுகளுக்குமுன் சோழநாட்டினின்று வந்த நவநீதகிருஷ்ண பாரதியார் என்ற புலவர் யாழ்ப்பாணத்தில் வந்து தங்கி உலகியல் விளக்கம் என்ற செய்யுள் நூலை இயற்றினர். இது சங்ககாலச் செய்யுள் நடையைப் பின்பற்றியது. தமிழகத்தினின்று இலங்கைக்கு அண்மைக் காலத்தில் கடல்கடந்து வந்த தமிழுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இதனைக் கொள்ளலாம்.

## சிங்கள மக்களுடன் தமிழ் மொழிக்கு நெருங்கிய தொடர்பு

இலங்கையில் தமிழ்மக்களைக் காட்டிலும் சிங்கள மக்கள் பெரும் தொகையினராவர். அவர்களிடையிலும் அநேக நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழி நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## மகாவமிசம் தரும் சான்று

இலங்கைச் சரித்திரத்தைக் கூறும் மகாவமிசம் என்ற இதிகாசம் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் இலங்கையை ஆண்ட விஜயன் என்ற ஆதி சிங்கள அரசன் அக்காலத்துப் பாண்டிய மன்னனின் குமாரத்தியை மணந்தான் என்றும் அவளுடன் அவனுடைய துணைவருக்கு மனைவியராக எழுநூறு பெண்களும் அநேகப் பணியாளரும் மதுரையினின்று இலங்கைக்கு வந்தார்கள் என்றும் வரலாற்றை உரைக்கின்றது.

இதனின்று இலங்கைச் சரித்திரத்தின் ஆரம்பகாலத்திலேயே தமிழ்மொழி இலங்கையில் நிலை பெற்றிருந்தது என்பது அறியக்கிடக்கின்றது.

கி. மு. 3-ம் நூற்றுண்டு முதற்கொண்டு பாண்டி நாட்டுப்படைகளும் சோழ நாட்டுப்படைகளும் இலங்கைக்கு வர ஆரம்பித்தன என்று மகாவமிசத்தினின்று தெளிவாகிறது. கி. மு. 2ம் நூற்றுண்டில் இலங்கை மீது ஏவேலன் என்ற தமிழரசன் படையெடுத்து வெற்றி கொண்டான்.

## சிங்களமக்களிடையே தமிழ் ஆட்சி மொழி

கி. பி. 7ம் நூற்றுண்டில் பல்லவரும் 11-ம் நூற்றுண்டில் சோழரும் 13-ம் நூற்றுண்டில் பாண்டியரும் இலங்கையில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள். இந்தக் காரணத்தால் சிங்கள மக்களிடையே தமிழ் இடையிடையே ஆட்சியாளர் மொழியாகச் செல்வாக்குப் பெறுவதாயிற்று. அநேக தமிழ்ச் சொற்கள் சிங்கள மொழியில் இடம் பெற்றன. குணசேகர முதலியார் என்ற சிங்கள ஆசிரியர் எழுதிய ஒரு நூலில் முந்நூற்றைம்பது தமிழ் சொற்கள் சிங்களவரின் பேச்சு வழக்கிலிருப்பதை ஓர் அட்டவணையில் காட்டியுள்ளார். சிங்களவரிடையே முதலியார். ஆராய்ச்சி என்ற சொற்கள் சில உத்தியோகங்களுக்குரிய பட்டப்பெயர்களாக வழங்குகின்றன. இலங்கைக்கோன், தென்னூர்கோன், பெருமான் முதலிய பட்டங்கள் சிங்களப் படைத்தலைவர்களுக்கு முன் காலத்தில் கொடுக்கப்பட்டு இக்காலத்திலும் அவர்களின் சந்ததியர்கள் அப்பட்டங்களைத் தங்கள் பெயர்களாகக் கொண்டுள்ளார்கள்.

## பௌத்தபிக்குகள் அரசர்கள் தமிழ் கற்றனர்

பௌத்த பிக்குகள் தங்கள் பாடசலைகளில் தமிழைக்கற்றனர் சில சிங்கள அரசர்களும் தமிழை விரும்பிக்கற்றனர்.

## தமிழில் சாசனங்கள்

சோழர் ஆட்சிக்குப் பின் வந்த சில சிங்கள மன்னர்கள் தங்கள் சாசனங்களைத் தமிழிலேயே பொறித்திருக்கின்றனர். கண்டிக்கு அருகிலுள்ள கடல்றெனியா, இலங்காதிலகா என்ற இடங்களில் அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களின் முன்கற்பாறையில் சாசனங்கள் அரச ஆணையின்படி தமிழிலும் சிங்களத்திலும் பொறிக்கப்பட்டுள்ளதை இன்னும் காணலாம்.

## அரசவையில் தமிழின் ஆதிக்கம்

6ம் பராக்கிரமபாகு ஆட்சி புரிந்த 15-ம் நூற்றுண்டில் அவன் அரசவையில் தமிழ் மொழியின் ஆதிக்கம் மிகுந்திருந்ததாகத் தெரிகிறது. அவனுடைய மகளின் பெயர் உலகுடையதேவி என்று சொல்லப்படுகிறது.

## தமிழ் அரசாங்கமொழி

17-ம் நூற்றுண்டில் கண்டியில் மதுரைநாயக்க வமிசத்தினர் ஆளத்தொடங்கிய பிறகு தமிழ் அரசாங்க மொழியாயிற்று. கடைசியில் ஆண்ட கண்டி மன்னனிடமிருந்து இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றிய காலத்தில் சிங்களத்தலைவர்கள் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் அவர்களில் சிலர் தமிழ்மொழியிலேயே கைச்சாத்திட்டனர். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தமிழும் சிங்களமும் சமமாகக் கருதப்பட்டன. ஆங்கிலேயர் ஆளுகையினின்று இலங்கை சுவாதீனம் பெற்றபின் 1956ம் ஆண்டு வரையில் சிங்களத்துடன் தமிழும் அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. சிங்களத்துடன் தமிழுக்கிருந்த சம உரிமை இப்பொழுது இல்லாதிருப்பினும் இலங்கையில் தமிழ்மொழி சென்ற காலத்திற் பெற்றிருந்த பழுதிலாச் சிறப்பை மீண்டும் எய்தும் என்று எதிர்பார்க்கிறோம்.

(முற்றும்)

# பாலியலும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

லம்' இன்று கூட கென்னடி குடும்பத்தின் மீது கவிந்துள்ளது.

கனேடியப் பிரதமர்த்ருடே ஒரு 'விளையாட்டுப் பிள்ளை' என மக்களால் நேயத்துடன் வர்ணிக்கப்பட்ட பொழுதிலும், அவரது மனைவிக்கும் ஒரு இளம் பாடகருக்குமான கள்ளக்காதல் பகிரங்கப்படுத்தப்பட்டபோது, அது த்ருடேயின் அரசியல் ஸ்திரப்பாட்டினைப் பெருமளவில் பாதிக்கவே செய்தது.

முன்னாள் அமெரிக்க வெளிநாட்டமை-ச்சர் ஹென்றி கீஸிங்கர் கூட 'பெண்-தொடர்பு'களுக்குப் பேர்போனவர். ஆனால் அவரது காதல் நாடகங்கள் பற்றிய பேச்சுக்களின் வீச்சினை அவரது அரசியல் சாணக்கியம் மேவி நின்றதால், அவரை இந்த பேச்சுக்கள் பெரிதும் பாதிக்கவில்லை. ஆனாலும், அவை அவரது குடும்ப வாழ்வில் பல பூசல்களுக்கு வித்திட்டன.

ஒழுக்க சீலத்துக்கு -அதுவும் நாட்டின் உயர் மட்டங்களில் இருப்போரின் ஒழுக்கசீலத்துக்கு- ஒவ்வாதது எனக் கருதப்படும் 'பிடிக்காத' விஷயங்கள் 'பிடிபடாமல்' இருக்கும் வரை எதுவித அபாயத்தையும் ஏற்படுத்துவதில்லை. பார்க்கின்ஸன் பத்தாண்டுகளாகத் தனது கள்ளக்காதலைக் கவனமாகப்பேணி வந்த வரையில், ஒரு பிரதமரையே உருவாக்கவல்ல சக்திமிக்க புருஷராகத்திகழ்ந்தவர் தான்.

ஆனால், தனது சொந்தக் காதலியின் வாயாலேயே 'குட்டு' உடைபட்ட போது... பாவம், எந்தளவு பாதாளத்தில் விழுந்து விட்டார்!

-சிங்காரம்

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றேட், யாழ்ப்பாணம்.

போன்: 23199

தந்தி: 'வைரம்'



# பிறர் துயர் சகியாதவனே சமயவாதி

# அதற்கு இலக்கணம் நாவலர்

தொண்டும் துறவுங் கொண்டபற்றற்ற உள்ளம் படைத்தவர் நாவலர் பெருமான் அவர் தூய உள்ளம் உடையவர்; இரக்கம் மிகுந்தவர். சமூகசேவை புரிவதில் ஆர்வம் மிகுந்தவர். அவர் உள்ளம், துன்பப்படும் மக்களின் துயரந்தீர்ப்பதில் முனைந்து நின்றது- சைவசித்தாந்திகளின் உள்ளம். பரோபகாரம் புரிவதிலேயே நிறைவு காணும் இயல்பினது என்பதனைவிளக்கி நிற்குறது நாவலர் உள்ளம். ஆலயங்களை அமைப்பதும் மடங்களைக்கட்டுவிப்பதும். பாடசாலைகளை நிறுவுவதும் பொதுமக்களின் குறைகளை நீக்கி நிறைவுடைய வாழ்வு வாழச் செய்வதற்கேயாகும். எத்தகைய ஆபத்துக்கள் நேரிட்டபோதிலும் அஞ்சா நெஞ்சத்துடன் அவற்றை

யெல்லாம் எதிரேற்று வெற்றி கண்டவர் நாவலர்! அவர் நிறைவுள்ளம் வாழ்க.

ஒரு முறை நாவலர் பெருமான் கல்வி கற்பித்துக் கொண்டு நிற்கும் பொழுது பாடசாலையின் அருகிலுள்ள ஒரு குடிசையில் தீப்பற்றியதைக் கண்டார்; வகுப்பறையைவிட்டுத் தீடீரெனவிரைந்து ஓடினார்- மாணவர்களும் கூடவே ஓடிச்சென்றனர். அந்த வீடு ஓர் ஏழையின் குடிசை. நாவலர் தீயை அணைப்பதில் முனைந்துநின்றார். மாணவர்களும் அரும்பாடுபட்டனர். ஒருவாறு தீயைஅணைப்பதில் வெற்றிகண்டார் நாவலர். அதேவேளையில் கிராம மக்கள் சிலர் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்பதைக்கண்டு உள்ளம் வருந்தி அவர்களுக்குச் சிலமணித்துளிகள் அறிவுரையும் வழங்கினார். கிராம மக்கள், பெருமானுடைய பேச்சுக்குச்செவி சாய்த்து வெட்கமடைந்து மன்னிப்புங் கோரினர். சமயவாழ்வு பிறருடைய துயரம் களைவதையே குறிக்கோளாகக்கொள்ள வேண்டும். அதுவேசமயத்தின் உண்மை அப்பர்பெருமானும் 'என்கடன்பணி செய்துகிடப்பதே' என்று கூறியதின் உண்மையையும் மக்கள் உணரச் செய்தார் நாவலர்பெருமான்.

## இன்றைய கல்வி உலகிற்கு அவர் வாக்கு

நாவலர் வாழ்ந்த காலத்தில் ஒரு முறை யாழ்ப்பாணத்தில் கொள்ளை நோய் (Cholera) பரவியது. நாவலரும் அவருடைய அன்புக்குரிய தொண்டர்களும் அச்சம்இன்றி நோயாளருக்குப் பணி புரிந்து நின்றனர் என்பது வரலாறு. நாவலர் ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்.'' பொதுமக்களிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர்; தமது மாணவரிடமும் நிரம்பிய கருணையுடையவர். ''மாணவர்கள் ஆசிரியரிடம்

வித்துவான்
சி. ஆறுமுகம்

அன்பும் மதிப்பும் காட்ட வேண்டும்; ஆசிரியர் மாணவரிடம் அருள் உள்ளங்கொண்டு கருணை காட்டவேண்டும்.'' இதுவே இன்றைய கல்வியுலகுக்கு நாவலர் விட்டுச் சென்ற முதுசமெம்? தம் அருமையான மாணவரான இராவகப்பிள்ளை மகனார் சுப்பிரமணியபிள்ளை என்பவர்மீது நாவலர் காட்டிய இரக்கத்துக்கு எல்லையே இல்லை. தம் மாணவர் சுப்பிரமணியபிள்ளை உடல் நலம் அற்று இருக்கும்போது ஒழுங்காகப் பணிவிடை புரிந்து பாதுகாத்து வந்தார் நாவலர் பெருமான். விதிவலியால் அம்மாணவர் உயிர் துறந்த போது நாவலர் அளவுக்கு மிஞ்சித் துயரம் அடைந்தார்.

நாட்டில் ஒரு முறை பெரும் பஞ்சம் ஏற்பட்டபோதும் வெள்ளப்பெருக்கு உண்டான போதும் நாவலர் பெருமான் சும்மா இருந்து சுகம் பெற நினைக்கவில்லை. அன்றைய அரசாங்கமும் மக்களுக்கு உதவி புரிய முன்வரவில்லை. உடனே நாவலர் பொதுமக்களுக்கு உதவி புரியப் புறப்பட்டார். 'கஞ்சித் தொட்டித் தரும நிலையம்' அமைத்தார். எல்லோருக்கும் சமய வேறுபாடு காட்டாது பஞ்சத் துயரம் தீர்க்க கஞ்சி வார்த்தார். இதுவும் வரலாற்றுச் செய்தியே. பின்னர் அரசாங்கத்துக்கும் முறையீடு செய்தார்.

நாவலர் பெருமான் திருமுறைகளில் நிரம்பிய பக்தியுடையவர். வேத ஆகமங்களிலும் பேரறிவு படைத்தவர். அவர் வாழ்ந்த காலம் ஐம்பத்தேழு ஆண்டுகளே. (1822-1879). இளமையிலும் கல்வியிலும் இருபத்து மூன்று ஆண்டுகள் கழிந்தன. ஏறக்குறைய பத்து ஆண்டுகள் தென்னிந்

(14ம் பக்கம் பார்க்க)

இலங்கைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

பாடநெறிகள் 1984/85

G. A. Q., B. A., B. T. I.

★ க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்கள் சித்திஅடைந்தவர்களிடம் இருந்தும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் G. A. Q. வகுப்புக்கு கோரப்படுகின்றன.

★ G. A. Q. பரீட்சையில் சித்தி அடைந்தவர்களிடம் இருந்து B. A. வகுப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

★ B. T. I. 1984, பெப்ரவரி பரீட்சைக்கான வகுப்புக்கள் (சகல பாடங்களும்)

★ GERMAN LANGUAGE வெளிநாடு செல்வதற்கான 3 மாத பயிற்சி வகுப்புக்கள்.

ஆரம்பம் 7-1-1984

JASE INSTITUTE
Trimmer Hall
21/6 Vembadi Road — Jaffna

# இப்படி எழுதலாமா?

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்க இலக்கியவாதிகளா? ஆக்க இலக்கியவாதிகள்தாம் இலக்கிய ஸ்தாபனங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டுமா? இலக்கிய உலகில் பச்சைக் குழந்தையாயிருந்துகொண்டே பிரேம்ஜியின் இலக்கிய-இயக்க ஆளுமையையும், ஆற்றலையும் தெரியாமல் அவரை 'ஞான சூன்யங்கள்' என்பது பச்சை ஆபாசம்.

- அகஸ்தியர்

★

கடந்த 13ந் திகதி 'ஈழநாடு' வாரமலரில் 'ஈ கே ஆர்' என்பவர் இலங்கை முற்போக்கு எழுத்தாளர்சங்கச் செயலாளராக இருந்த பிரேம்ஜி ஞானசுந்தரம் அவர்களைப்பற்றி மிகவும் தரக்குறைவாக எழுதியுள்ளார். பிரேம்ஜி இந்தியாவுக்கு நிச்சயமாகக் குடிபெயர்ந்துவிட்டாரா என்பது சரிவர இன்னமும் தெளிவாகவில்லை. அப்படி அவர் குடிபெயர்ந்தால் கூட அதற்கேற்ற வலுவான தனிப்பட்ட காரணங்கள் அவருக்குண்டு. எனினும் இக்கடிதத்தின் நோக்கம் அவருக்கு வக்காலத்து வாங்குவதல்ல. என் கேள்வி என்னவெனில் இவ்விஷயத்தை இப்படி எழுதுவதில்கிடைக்கிறபயன்என்ன என்பதுதான். இப்படியான 'இலக்கியசேவை'க்கு 'ஈழநாடு' துணைபோக வேண்டாம். இன்று எமது மண்ணும் மக்களும் இருக்கும் இக்கட்டான நிலையில் இப்படியான சில்லுண்டித்தனங்கள் வேண்டாம்.

இலக்கிய உலகில் வெளியான சில விஷயங்கள் சம்பந்தமாகச் சில விஷயங்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(1) பிரேம்ஜியும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் தமிழ்நாட்டிலிருந்துவந்து குவிந்து தரக்குறைவான சஞ்சிகைகளையே எதிர்த்தன எல்லாவற்றையுமல்ல.

(2) எழுதுகிறவனுக்குத்தான் பிரசுரப் பிரச்னை எழும்.

(3) இன்று இலங்கையில் பிரசுரவசதி ஏதுமுண்டா? எழுதுபவனே புத்தகம் போடுவது என்பது இன்று சாத்தியமில்லை. இலங்கையில் ஒரு சராசரிப் புத்தகம் போட எண்ணாயிரம், பத்தாயிரம் தேவைப்படுகிறது.

(4) 'தமிழிலக்கியம்' என்ற பரந்த கண்ணோட்டம் இன்று நிலவுவது. ஈழத்திலக்கியம் ஈழத்திலேதான் பிரசுரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பைத்தியகாரத்தனமானது, சிரிப்புக்கிடமானது. மேலும், ஈழத்திலக்கியம் தமிழகத்தில் பிரசுரமாவது எவ்விதத்திலும் குறைவானகாரியமல்ல. மாறாக ஈழத்துவாழ்வை தமிழ்கூறு நல்லுலகெங்கும் அறிமுகப்படுத்தும் நற்பணியாகவே அது அமையும். அதோடு, எந்த எழுத்தாளனும் தன் எழுத்து பரந்தவாசகர் வட்டத்தைச் சென்றடைவதையே விரும்புவான். இலங்கையில் பிரசுரிக்கப்படும்போது இவ்வாய்ப்புக்கள் இல்லை.

- ந. ஜெயபாலன்

# இவ்வாரம் எப்படி?

(11ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்முகப் பரீட்சைக்கு உகந்த வாரம். மாதுருவழிச் சிறப்பு உங்களை மகிழ்விக்கும். அதிக சிந்தனையைத் தவிர்த்துக் கொள்ளவும். சகோதர வழிச் சலனங்களும் இடம்பெறலாம்.

**மகரம்**

நீண்ட நாள் உறவில் முறிவு ஏற்படலாம். சமயோசிதபுத்தியால் எதையும் சமாளிக்கலாம். வேண்டிய ஒருவரின் உதவியும் கிடைக்கலாம். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றி கிட்டும். நிம்மதி பறக்கும். நினைவுகள் மறக்கும்.

**கும்பம்**

வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் தென்படும். இன்பத்தால் இதயம் புண்படும். பார்த்துப் பேசவும். பகைவர் பகட்டாகப் பூசுவர். பக்குவமாக நடந்துகொள்ளவும். அரசும் உரசும் அவதானம்வேண்டும். புத்திரர் புகழ்ச்சியும் தாய்வழி மகிழ்ச்சியும் இடம் பெறும்.

**மீனம்**

சிந்தையில் குழப்பம் தென்படும். மனைவியின் உடல் நிலை கவலையைத் தரலாம். மனம் இனிக்கும். உறக்கம் புளிக்கும். உணர்ச்சியில் உருகுவீர். மிகையான போக்கினால் பகைவர்கள் வலைவிரிப்பார்கள் விழிப்புடன் நடப்பின் வெற்றிக்கிடமுண்டு.

SHABRA UNICO FINANCE LIMITED
(இலங்கை மத்தியவங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்)

உங்கள் குழந்தையின் எதிர்கால நலனிற்காகவும்,
உங்கள் சகோதரியின் திருமணம் சிறப்பாக நடைபெறவும்
சகோதரன் பல்கலைக்கழக தொழில்நுட்பக் கல்விபெற்று
பட்டதாரியாகத் திகழவும், இன்றே
ஒரு சேமிப்புக் கணக்கை ''SHABRA''ல் ஆரம்பியுங்கள்.
வெளிநாட்டில் வேலை செய்வோர் காசோலை மூலம்
எம்மிடம் எதுவித சிரமமும் இன்றிச் சேமிக்கலாம்.

தேவை எதுவானாலும் நாடுங்கள் SHABRA

நிலையான வைப்பிற்கு
அதிஉயர் வட்டி வழங்கும்
ஒரே நிறுவனம்
'SHABRA'

| மாதாந்தம் | 36 மாத கால முடிவில் |
|---|---|
| 100/- | 4,727/60 |
| 200/- | 9,455/19 |
| 300/- | 14,182/79 |
| 400/- | 18,910/38 |
| 500/- | 23,637/98 |

மாதாந்தம் 500/க்கு மேற்பட்ட சேமிப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

புதிய தொழில் ஆரம்பிப்பவர்கட்கு
ஆலோசனை வேண்டிய
மூலப்பொருட்கள், இயந்திரங்கள்
இறக்குமதி செய்வதற்கு உதவி
மேலும்

☆ ரி. வி.
☆ குளிர்சாதனப்பெட்டி
☆ மோட்டார் சைக்கிள்
☆ துவிச்சக்கர வண்டி

மற்றும்
வீட்டுப் பாவனைப் பொருட்களிற்கும் 60% நிதி உதவி வழங்கப்படும்.

61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு-4. 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல; 589310 தொலைபேசி இல: 22073

புதுடில்லி
உச்சி
மாகாநாடு

# பொதுநல அமைப்பு சோதனையில் தேறுமா?

முன்னெப்போதுமில்லாவாறான ஒரு நெருக்கடிமிக்க சூழலில், இம்முறைபுதுடில்லியில் பொதுநலவமைப்பு நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறுகிறது. ஒரு வகையில், இம் மாநாடுஇந்தஅமைப்புக்கு ஒரு சோதனை என்று கூடக் கூறலாம்.

இம்மாநாடு எமது அண்டை அயல் நாடாகிய இந்தியாவில் நடப்பது இவ்விஷயம் தொடர்பாக ஒரு வழமைக்குமாறான கரிசனையை எமக்கு உண்டுபண்ணியிருக்கக்கூடும். ஆனால், பிரச்னைகளை அணுகுவதில், இத்தகைய அகநிலைவழிப்பட்ட கரிசனைக்கு ஆளாகுவது விவேகமாகாது. மாறாக, ஒரு புறநிலை வழிப்பட்ட நிலையிலிருந்துபிரச்னைகளை அணுகுவதே நேர்மையானது; நியாயமானது.

'பொதுநலவமைப்பு' என்ற பதத்தொடரே மிக அர்த்தஞ் செறிந்தது. நாகரிகமிக்க சமுதாயத்தில் பொதுநலத்தைப் பற்றிச் சிந்திப்பதைவிட முக்கிய காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது.

ஆனால், பொதுநலத்தின் பாற்பட்ட அக்கறையின் பெயரில் உருவாகிய ஒரு அமைப்பு அதாவது பெயரைச் சரியாகக் காப்பாற்றிக் கொண்டுள்ளதா என்பது ஆராயப்பட வேண்டியதொன்றாகும்.

சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் எனவர்ணிக்கப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தகர்ந்து சரிகின்றகால கட்டத்தில் உருவானதே இந்த அமைப்பு. பிரிட்டிஷ்ஷாரின் ஆதிக்கம் தகருகின்ற ஒரு நிலையில் ''பிரிட்டிஷ் பொதுநலவமைப்பு'' என்ற நாமத்தை உதறித்தள்ளிவிட்டு, வெறுமனே 'பொதுநலவமைப்பு' என்ற சுதந்திர சங்கேதத்துடன் உதயமான அமைப்பு இது.

தமதுசுதந்திரத்தையும் சுயாதிபதியத்தையும் வென்றெடுத்தநிலையில், இந்த அமைப்பின் உறுப்பினநாடுகள் தம்மத்தியில் ஒத்துழைப்புக்கும் பரஸ்பரஉதவிக்கும் வகைசெய்யக்கூடிய ஒரு நீதியானசர்வதேச உறவுகள் உருவாகும் என எதிர்பார்த்தன. ஆனால் இந்த எதிர்பார்ப்பு எந்த அளவுக்கு ஈடேறியது என்பதைப், புதுடில்லி மாநாட்டுத்தருணத்தில் அசைபோட்டுப்பார்ப்பது ஒவ்வொரு அரசியல் அவதானியினதும் கடமையாகின்றது.

பல்வேறு முரண்பாடுகளின் பிடியில் சிக்கியுள்ள இன்றைய சர்வதேச உறவுகளின் தாக்கங்கள் தவிர்க்கமுடியாதபடி பொதுநலவமைப்பிலும் வெளிப்பாடு பெறவே செய்யும் எனலாம். ஆனாலும், தனது அங்கத்துவ நாடுகளின் அடிப்படைச் சுதந்திர நலன்களை உத்தரவாதப் படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் பொதுநலவமைப்பு எந்த அளவுக்குப் பொறுப்புடன் நடந்து கொண்டுள்ளது?

அண்மையில், பொதுநலவமைப்பில் அங்கம்வகிக்கும் ஒரு சிறுதீவின் மீது வல்லரசொன்று தொடுத்த ஆக்கிரமிப்பைத்தவிர்ப்பதற்கோ அன்றித்தடுப்பதற்கோ இந்த அமைப்பின் தலைமை நாட்டுக்குத் திராணியில்லாது போனது ஒரு புறமிருக்க இந்த ஆக்கிரமிப்புக்குப் பொதுநலவமைப்பின்சில அங்கத்துவ நாடுகளும் துணைபோன துரதிருஷ்டமும் நிகழ்ந்துள்ளது.

இத்தகைய துரதிருஷ்ட நிகழ்ச்சிகளினால், பொதுநலவமைப்பினது அடியத்திவாரத்தில் ஏற்கனவே விழுந்திருந்த விரிசல்கள் தற்போது விசாலமடைந்துள்ளன.

பொதுநலவமைப்பில் அங்கம் வசிக்கும் ஆஸ்திரேலியா, கனடா, நியூஸிலாந்து போன்ற நாடுகள் 'முதல் தட்டு' நாடுகளாகவும் ஆசிய, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கக்கண்டங்களைச் சார்ந்த இளம் நாடுகள் 'இரண்டாம் பட்ச' தோரணையிலும் நடாத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு பிரிட்டன் மீது மீண்டும் மீண்டும் சுமத்தப்பட்டு வருகிறது. எழுந்தமானமாக நோக்காது இக்குற்றச்சாட்டைச் சற்றுநெருங்கிஆராய்ந்து பார்க்கும் போது, இதற்கு ஆதாரம் இல்லாமலும் இல்லை என்றே கூறுகின்றது.




உதாரணமாக, பொதுநலவமைப்பில் இணைந்துகொண்டதன் ஆரம்பத்தில், இந்த இளம் நாடுகளிற் பல பிரிட்டனுடனான வர்த்தகம் வாயிலாக சில பயன்பாடுகளையும் சலுகைகளையும் பெறவே செய்தன. ஆனால்இன்று பிரிட்டனுடனான வர்த்தகத்திலேயே பெரிதும் தங்கியுள்ள இந்நாடுகள் பிரிட்டனின் ஒரு தலைப்பட்சமான தற்காப்பு வர்த்தக நடவடிக்கைகளால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பொதுநலவமைப்பு நாடுகளில் பெரும்பாலானவை கூட்டுச் சேராக் கொள்கையையும், ஒரு நீதியான அடிப்படையில் சர்வதேச பொருளாதார உறவுகளைப் புனரமைக்கும் இலட்சியத்தையும் பின்பற்றத் தலைப்பட்டுள்ள இவ்வேளையில், மேற்குறிப்பிட்ட சமப்பாடற்ற பொருளாதார, வர்த்தகத் தொடர்புகள் - குறித்த பிரச்னைகள் புதுடில்லி மாநாட்டில் எதிரொலிப்பதில் வியப்பில்லை. சைப்பிரஸ், நமிபியா முதலானவற்றின் பிரச்னைகளும் மகாநாட்டில் பலத்த வாதப்பிரதி

(18ம் பக்கம் பார்க்க)

## பிறர் துயர்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

தியத் தமிழ்நாட்டில் தொண்டுகள் புரிந்தார். எஞ்சிய இருபத்து நான்கு ஆண்டுகளும் ஈழத்தில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தார். தமது உயிரையும் உடலையும் அர்ப்பணித்தேனும் சைவமும் தமிழும் வளர்க்க முனைந்து நின்றவர் நாவலர் பெருமான். அவர் ஒரு யதார்த்தவாதி 'உண்மை பேசு, நன்மைபுரி' என்பதே நாவலர் பெருமானின் குறிக்கோள்.

நாவலர் பரம்பரை இன்றும் நம் நாட்டில் சைவமும் தமிழும் வளர்க்கிறது. அந்த மாணவர் பரம்பரையில் இன்று உயிருடன் விளங்கி எம்மையெல்லாம் வாழ்வாங்கு வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். நாவலர் பரம்பரை பணிபுரிந்து வாழ்க- நாவலர் உள்ளம் நாடெங்கும் மலைக.





ZENITH

பிரகாசமான இயற்கை வர்ணங்களை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணும் உன்னத டெலிவிஷன்களை அளிப்பது பிலிப்ஸ்

நம்பகரமான நீண்ட ஆயுள்கொண்ட பிலிப்ஸ் வர்ண டெலிவிஷனின் சிறப்பம்சங்கள்

- உள்ளடக்கப்பட்ட வோல்டேஜ் சமநிலைமானி
- உஷ்ண மண்டல பிரதேசங்களுக்கு உகந்த உருவ அமைப்பு
- தன்னியக்க ஒலி, ஒளி கட்டுப்படுத்தும் சுழல் முறுக்கிகள்
- தெளிவான விம்பம்
- சக்தியுள்ள ஒலிகுது விசேட டபிள்கோண் முறை ஒலி அமைப்பு
- VCR. விடியோ விளையாட்டுக்கள் விடியோ டிஸ்க் ஆகியவற்றிற்கான இணைப்புகள்

நீங்கள் பிலிப்ஸ் டெலிவிஷனை தேர்ந்தெடுக்கும்போது - நவீன தொழில் நுட்ப மேம்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட சிறந்த டெலிவிஷனை வாங்கிறோம் என்ற பெருமையை அடைவீர்கள்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்

HAYLEYS

**ஹேய்லீஸ் லிமிட்டெட்.**

சேவைப்பிரிவு: 25, பொஸ்ரர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
காட்சியறை: 646, காலி வீதி, கொழும்பு-3. தொலைபேசி: 86958
சுங்கவரி நீக்கப்பட்ட விற்பனை நிலையம், 2, சிற்மாடி, கொழும்பு-3.

PHILIPS

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

**PHILIPS**

**இலகு தவணையில் செலுத்த ஒழுங்கு செய்யப்படும்**

கலர் TV
14'' 287 டாலர் ரூபா 11,400/-
16'' 325 டாலர் ரூபா 12,500/-
20'' 400 டாலர் ரூபா 15,500/-
26'' 700 டாலர் ரூபா 22,000/-
**உத்தரவாத காலங்கள்...**

கறுப்பு/வெள்ளை TV
12'' 90 டாலர் ரூபா 2,975/-
14'' 112 டாலர் ரூபா 3,750/-
17'' 148 டாலர் ரூபா 5,800/-

**ரெலிவிஷன் செற்ஸ் - 1 வருடம்**

**பிலிப்ஸ் VHS வீடியோ கஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'**

**காட்சிக் குழல்-3 வருடங்கள்**

## மேலைநாடுகளில் மதிப்பு வளர வளர

# எதிர்ப்புகளும் வலுத்தது!

**டாக்டர் க. இந்திரகுமார்**

சர்வதேச லேசர் சிகிச்சை சங்கத்தின் நண்பர்
சர்வதேச காந்த சிகிச்சை சங்கத்தின் நண்பர்

சீனப்புரட்சி நடைபெற்ற காலகட்டத்தில் ஆண்டுதோறும் நாற்பது இலட்சம் பேர்தொற்று நோய்களால் பீடிக்கப்பட்டு இறந்தனர் என்று சில மதிப்பீடுகளிலிருந்து தெரியவருகிறது. பட்டினிச் சாவு, குற்றச் செயல்கள், போதைப் பொருள்களுக்கு அடிமையாதல், விபசாரம் என்பன தலைவிரித்தாடின. ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளில், ஒவ்வொருஆயிரம் பேரிலும் இருநூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

### நான்கு குறிக்கோள்கள்

புதியஅரசு உடல்நலச் சேவைகளை நான்கு பிராதான குறிக்கோள்களை அடிப்படையாக வைத்துமறுசீரமைப்புச் செய்தது:-

(1) நோய்த்தடுப்பு வேலைகளுக்கு பின்வரும் வழிகளில் முன்னுரிமை கொடுத்தல்:

(அ) மக்களின் பொதுவான உடல் நலனை முன்னேற்றுதல்-

(ஆ) உபத்திரவம் தருகின்ற எலிகள், மூட்டைப்பூச்சிகள், நுளம்புகள், ஈக்கள் ஆகிய நால்வகை விலங்கினங்களை ஒழித்துக் கட்டுதல்.

(இ) உடல் நலன் பற்றிய அறிவை, அதிலும்குறிப்பாக, நோய்த்தடுப்பு மருத்துவ அறிவை, மக்கள் மத்தியில் பரப்புதல்.

(2) சுற்றுடல் சுகாதாரத்தையும், மக்களது உடல் நலப் பழக்கவழக்கங்களையும் முன்னேற்றுதல்.

(3) தொழிற்சாலைக் கழிவுகளின் விளைவாக சுற்றுடல் மாசுபடாமல் இருப்பதை உறுதிப்படுத்துதல்.

(4) மக்களுக்கு நோய்த் தடைமருந்து ஊசி ஏற்றும் திட்டங்களை செயற்படுத்துதல்.

### நான்கு கோட்பாடுகள்

மேற்சொன்ன குறிக்கோள்களை செயற்படுத்துவதற்கு உதவும் வகையில் பின்வரும் நான்கு கோட்பாடுகளுக்கு அமைய சுகாதாரசேவை சீரமைக்கப்பட்டது:-

(1) கிராமப் புறங்களில் வதியும் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் சுகாதார சேவைகளை வழங்குதல்.

(2) நோய்த்தடுப்பு வேலைகளுக்குமுன்னுரிமைகொடுத்தல்.

(3) மேற்கத்திய மருத்துவம், பாரம்பரிய மருத்துவம் ஆகிய இரு மரபு மருத்துவங்களையும் ஒருங்கிணைத்து, ஒத்துழைத்துச் செயலாற்ற வைத்தல்.

(4) பொதுச்சுகாதார வேலைகளை வெகுஜன இயக்கங்களுடன் ஒருங்கிணைத்தல்.

### வெறுங்கால் வைத்தியர்கள்

கிராமிய சீனத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு, இத்தகைய மறுசீரமைப்புக்களின் விளைவாக உருவானவர்கள் தான் ''வெறுங்கால் வைத்தியர்கள்'' (BARE - FOOT DOCTORS) என்று அழைக்கப்படும் தனித்துவம் மிக்க மருத்துவஊழியர் பிரிவினர் ஆகும். இந்தக் கவர்ச்சிகரமான பெயருடைய ஊழியர்கள் கிராமந்தோறும் திரட்டப்பட்டு, அவரவர் கிராமங்களில் துணை மருத்துவப் பணிகள் புரியுமாறு பணிக்கப்பட்டனர்- கலாசாரப் புரட்சியை அடுத்துவந்த காலகட்டத்தில், பத்து இலட்சத்துக்கும் அதிகமான வெறுங்கால் வைத்தியர்களுக்குபயிற்சி அளிக்கப்பட்டது, இன்றுபெரும்பாலான வெறுங்கால் வைத்தியர்கள். கூட்டுறவு மருத்துவமுறையில் உற்பத்தி அணிகளின் மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றனர்.

பின்தங்கிய கிராமியப் பகுதிகளில், அவ்வப் பகுதிகளில் உள்ள வளங்களையும் வசதிகளையும் பயன்படுத்தி, வெறுங்கால் வைத்தியர்கள் வேலை செய்துவரும் அதேவேளையில் நாட்டின் முக்கியத்துவம்மிக்க மருத்துவ மனைகளிலும் ஆய்வு நிலையங்களிலும் பாரம்பரிய மருத்துவ முறைகள் விஞ்ஞானத் திறனாய்வுக்கு உள்ளாகி வருகின்றன. இதன் நோக்கம் பாரம்பரிய - மேற்கத்திய மருத்துவ மரபுகளிடையே ஒரு உண்மையான இணைப்பை ஏற்படுத்துவதற்கு ஆகும். மக்கள் சீனத்திற்கு விஜயம் செய்கின்ற அயல் நாட்டு மருத்துவர்களை, அந் நாட்டின் 100 கோடி மக்களுக்கு (உலக ஜனத் தொகையில் நாலில் ஒரு பங்கு) அளிக்கப்படுகின்ற மருத்துவ சேவையின் உயரிய தரம் கவர்ந்துள்ளது. கடந்த கால் நூற்றாண்டு காலமாக மக்கள் சீனக் குடியரசின் மருத்துவ சேவைகளில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இதன் விளைவாக, உலக சுகாதார ஸ்தாபனம் உலகின் பல வளர்முக நாடுகளில் பாரம்பரிய மருத்துவ முறைகளுக்கும் ஊக்கமளித்து, சீனத்து மாதிரியை ஒட்டிய மருத்துவ சேவைகளை மேற்கொண்டும் வருகிறது.

சீனத்து அக்குபங்சர் முறை மேற்கு நாடுகளுக்கும் பரவிய போது, அதனைப் பயன்படுத்தியோர் மத்தியில் அதற்கிருந்த மதிப்பு மேன்மேலும் வளர்ந்தது. அதுபோலவே, அக்குபங்சரின் எதிரிகள் மத்தியில் அதைவிடக் கூடிய அளவு அவநம்பிக்கையும் பரவலாயிற்று. அக்குபங்சருக்கு விஞ்ஞான அடிப்படையில் முறையான ஒரு விளக்கம் தர முடியாமலிருந்தது இதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும். அக்குபங்சரை ஆதரித்தவர்கள் அதனை ஊக்குவிப்பதில் எவ்வளவுக்கெவ்வளவு தீவிரம் செலுத்தினார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதனைக் கண்டித்தவர்கள் அக்குபங்சருக்கு முறையான விஞ்ஞான விளக்கம் தரமுடியாதவிடத்து அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வலியுறுத்தி வந்துள்ளனர்.

### மேற்கத்திய முறையிலும் முழு விளக்கம் இல்லை

நித்தியமான ஒரு அற்புதத்திற்கு விளக்கம் தர முடியாதவிடத்து அது எவ்விதத்திலும் அநித்தியம் ஆவதில்லை. அப்படிப் பார்க்கப்போனால், நவீன மருத்துவம் அனுபவத்தைமட்டும் அடிப்படையாகக் கொண்ட எத்தனையோ முறைகளையும் மூலப்பொருள்களையும் பயன்படுத்தவில்லையா? இன்று மிகவும் அதிகமாகப் பாவிக்கப்படும் அஸ்பிரின் மருந்தை ஒரு உதாரணத்திற்கு எடுத்துக் கொள்வோம். அது மிகவும் பயனுள்ள ஒரு மருந்தென அனுபவரீதியாக உணரப்பட்டுள்ளதால், அதற்கு விஞ்ஞானரீதியான விளக்கம் அவசியமும் இல்லை; அதற்கு விஞ்ஞானரீதியான விளக்கமும் கிடையாது. மேற்கத்திய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் இயன் மருத்துவம் PHYSIO-THERAPY, வசியத்துயில் சிகிச்சை (HYPNOTHERAPY), உளச் சிகிச்சை (PSYCHOT-HERAPY) போன்ற பல நடைமுறைகளுக்கும் உறுதியற்ற விஞ்ஞான விளக்கங்களே உள்ளன.

## அக்குபங்சர் அன்றும் இன்றும் 3

[அடுத்த வாரம் முற்றும்]

---

## இடுகுவேலி

(7- பக்கத் தொடர்ச்சி)

தோடு பார்ப்பதாக இவனுக்குப்பட்டது. அவளின் அகன்ற விழிகளின் ஆழத்தில் அனுபவித்த மூன்று மாதங்களின் இனிமை நினைவுகளும் இழந்த வருடங்களின் தனிமை நினைவுகளும் புதைந்திருந்தன.

- இனி உன்னைப் பிரியமாட்டேன், நிர்மலா.. என்றான் அவன் - உன்னைப் பிரிந்த தனிமை ஏக்கம் எனக்கு மட்டுமில்லையா, நிர்மலா. உன் நினைவோடே அங்கு வாழ்ந்தேன், குஞ்சு...

அவன் உள்ளத்தில் அடி ஆழத்திலிருந்து பொங்கிய ஆறுத காதலின் ஏக்கத்தை அவள் உணராமலில்லை. அவள் உதடுகளைப் பிரியாமல் சிரித்தாள்.

- அங்கு நீங்க எப்படி இருந்தியளோ? ஆருடன் வாழ்ந்தியளோ?

அவன் துடித்துப் போய் அவளைப் பார்த்தான். அவள் தொடர்ந்தாள்: - அப்படி நீங்க இருக்கவேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. வாழவேண்டிய இளமையை வீணே அனுபவியாமல் கழிக்க வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. இளமையின் தேவையை நீங்கள் அங்கு...

அவன் விருட்டென்று எழுந்து அவளை அணைத்துக் கொண்டான்.

- அப்படியில்லை, நிர்மலா... அப்படியில்லை...

அவள் வெகு அமைதியாக அவன் பிடியைத் தளர்த்தினாள். தன்னை அணைத்திருந்த கரங்களைப் பிரித்துவிட்டாள்.

- நிர்மலா..

அவன் உடலின் வெம்மையும் வார்த்தைகளின் தகிப்பும் அவளுக்குப் புரிந்தன. அவள் அமைதியாகச் சொன்னாள்:

- நான் உங்களுடன் இந்தக் கட்டிலில் அருகில் படுப்பதாகவிருந்தால், நான் கேட்கின்ற ஒன்றிற்கு நீங்கள் உடன்படவேண்டும்.

அவனை வியப்பும் துயரும் ஆட்கொள்ள அவளைப்பார்த்தான்.

(வளரும்)

---

## செயற்கை மழை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

றத்துறைக்கு ஓர் ஆய்வுத்திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு தேசிய விஞ்ஞானக்கழகத்திற்குப் பணித்தார். இதன்பின் விரிவான ஆய்வுகள் நடைபெற்றன.

பல்லாயிரக்கணக்கான நுண்ணிய நீர்த்திவலைகள் ஒன்று சேர்ந்த ஒரு மழைத்துளி உருவாகின்றது. இது இரண்டு வழிகளில் உருவாகின்றது. ஒன்று, மிகு குளிர்மேகங்களிலுள்ள பனிப்படிகங்களின் இயக்கத்தால் இரண்டு, வளர்ந்த நிலையிலுள்ள பெரிய துளிகள் வேகமாகவிழுவதால். மழைத்துளிகள் உருவாகுவதற்குத் தேவையான பனிப்படிகங்களோ அல்லது பெரிய துகள்களோ இல்லையெனில் அவற்றை நாம் மேகங்களில் விதைத்தால், மழைஉண்டாகும். அல்லது மழையின் அளவு அதிகமாகும். இந்நாள் வரையிலும் மிகு குளிர்மேகங்களில் உலர்ந்த பனிக்கட்டித் துண்டுகளையோ அல்லது வெள்ளி அயோடைட் படிகங்களையோ தூவி செயற்கை மழை உண்டாக்கப்படுகிறது. அப்போது அதன் வெப்பநிலை- 6 செ. ஆகும்.

அமெரிக்காவில் புளோறிடா மாநிலத்தில் செயற்கை மழை பெய்வித்தல் அதிகமாக நிகழ்கிறது. யப்பான், தாய்லாந்து, ஐக்கியராச்சியம் என்பன இம்முயற்சிகளில் கூடுதலாக ஈடுபட்டு வருகின்றன. இரு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் நீர் மின்வலு உற்பத்திக்குரிய நீர்த்தேக்கங்களில் கடும் வறட்சி நிலவியபோது தாய்லாந்து வானிலை அறிஞர்கள் இங்குவந்து செயற்கை மழையைப்பொழிய வைக்க முயற்சிகள் மேற்கொண்டனர். மேகங்களில் வெள்ளி அயோடைட் விசிறி விதைக்கப்பட்டது. மழையும் எதிர்பார்த்தளவு பொழியாதுவிடினும், பெய்தது! அண்மையில் இந்தியாவில் தமிழ்நாட்டில் கடும் வறட்சி நிலவியது. அதனல் செயற்கை மழையைப் பெய்விக்கும் முயற்சியில் அமெரிக்க வானிலையாளர்கள் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர்.

---

## இலங்கையில் உதைபந்தாட்டம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

யின்போது, சிங்கப்பூர் கோஷ்டி 2—0 கோல்களைப் போட்டிருந்தது. இவ்விரு கோல்களையும் இக்கோஷ்டியின் முன்னணிவீரர் ஃக்குவான் போட்டார். இடைவேளையின்பின் இக்கோஷ்டி மேலும் இருகோல்களைப்போட்டது. இந்த இரு கோல்களையும் வீரர் சுந்தரமூர்த்தி போட்டார்.

இலங்கைக் கோஷ்டியினர் இப்போட்டியில் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டுவிட்டனர். இவர்களின் ஆட்டம், மைதானத்தின் நடுவில்தான் சிறப்பாக இருந்தது. இக்கோஷ்டி வீரர்களான டயஸ், நிகால் ஆகியோரின் ஆட்டம் ரசிப்பாக இருந்தது.

இலங்கைக் கோஷ்டியில் தமிழ் வீரர்கள் இல்லாவிட்டாலும் தமிழ் மத்தியஸ்தர்கள் நிறைய இருக்கிறார்கள்.

---

HOTEL CATERING &
MANAGEMENT
[THEORY and PRACTICAL]
BASIC COOKERY IN WESTERN DISHES AND RESTAURANT SERVICE
3 மாத கட்டணம் 825/-
ஆரம்பம் 9-1-1984
திங்கள் - புதன் - வெள்ளி 9மணி முதல் 11 மணி வரை
(இருபாலரும் கற்கலாம்)
16-12-1983 அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்
பதிவுக் கட்டணம்: Rs. 25/-
தொடர்பு: R. T. சின்னத்துரை,
187, 4-ம் குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்.
[O. L. R. தேவாலயத்திற்கு அண்மையில்] 9919

சிறந்த முறையில், நவீன டிசைன்களில்
''ரெறுசோ மாபிள் நிலம்''
அமைக்க நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஸ்தாபனம்
த ரெறுசோ கொன்றுக்ரேஸ் & கொன்சல்ரன்ஸ்
THE TERRAZZO CONTRACTORS AND CONSULTANTS
69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
Specialist in Terrazzo Flooring According to CP 240

# வாசகர் பேனாவிலிருந்து

## வாசனை பரப்பி மலர்க

ஈழத் திருவடபால்
ஏதமறத் திகழும்
'ஈழநாடு' என்னும்
எழிலிதழ்நம்-வேழமுகன்
பேரருளாற் பேரறிவாம்
பேர்வா சனைபரப்பி
வாரமலராய் மலர்க மன்

**வெண்பாமணி முருகசூரியன்**

## புதிய பொலிவு

புதுப் பொலிவுடன் வெளி வந்த 'ஈழநாடு' வாரமலர் கண்டு மகிழ்ந்தேன். பாராட்டும் வாழ்த்தும் உரித்தாகட்டும்.

**டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி**
கௌரி கிளினிக்,
கிளிநொச்சி.

## மனம் இன்பவெள்ளத்தில்

'ஈழநாடு' பத்திரிகை மக்களுக்குப் பல்வேறு விதமான அறிவுரைகளை வழங்கிவருவதனைக் காணும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. தொடர்ந்து வாரமலர் அறிவுக்கு விருந்தாக மணம் பரப்பவேண்டும் என்பது எனது அவா. வேறு எந்தப் பத்திரிகையும் செய்யாத சேவையை 'ஈழநாடு' செய்கின்றது என்று பலரும் கூறும்போது மனம் இன்பத்தில் நனைகின்றது.

அரியாலையூர்
**வி. என். எஸ். உதயசந்திரன்**

## கிடுகு வேலி

செங்கைஆழியானின் 'கிடுகு வேலி' தொடர் நவீனம்: ஆசிரியர் தனது மற்றைய படைப்புக்களில் சுட்டிக்காட்டும் அதே சீதனப் பிரச்சினையின் மாறுபட்ட வடிவுடன் கதையாரம்பமாகியுள்ளது. அதே வேளை ஆசிரியர் தனது ஏனைய கதைகளில் விடும் தவறை அதாவது புவியியல் விவரணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பண்பை இக்கதையில் ஆரம்பத்திலேயே செய்கிறார். அதிகாலை 2-15 பிரச்சினைக்கும் கதையோட்டத்திற்கும் அதிக தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை.

**பற்றிமாகரன்**

## நறுமணம் வீசும் புதுமலர்

வாரமலர், நறுமணம் வீசும் புதுமலராக அமைந்திருந்தது. ஈழத்தின் பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானின் தொடர் நவீனமொன்றை ஆரம்பித்திருப்பது மலருக்கு மேலும் நறுமணம் ஊட்டுகிறது. 'நவரசம்' வெகுசுவை. 'உலக அரங்கு' உட்பட மொத்தத்தில் சகல அம்சங்களும் சுவையுள்ளதும், பயனுள்ளதுமாக இருந்தன. மேலும் பல அம்சங்களுடன் வாரமலர் மலர்ந்து, வாடாமலராகத் திகழவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**அ. கனகசூரியர்,**
ஊரெழு மேற்கு.

வாரமலர் மீண்டும் வெளிவந்தமை கண்டு ஆனந்தமடைகின்றேன். அதனை நன்கு படித்தேன்; குதூகலித்தேன்.

**தம்பு சுப்பிரமணியம்**
**அளவெட்டி**

வாரமலர் உள்ளத்தில் ஒரு புதுத் தெம்பை அளித்துள்ளது. என் இனிய வாழ்த்துக்கள்.

**வண்ணைக்கவிஞன்**

ஈழத்து எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆய்வாளர்களின் ஆவலை வாரமலர் நிறைவு செய்யுமாக.

**எஸ், ராமதாஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்

## ஆனந்தம் என் சொல்லுவேன்

6-11-83 ஒரு பொன்னான நாள். தீயுடன் கரைந்த இதயம் மீண்டும் புத்துயிர் பெற்றுவிட்ட ஆனந்தத்தை என்னவென்பது. சிறுகவிதை, தொடர் நவீனம், தமிழ் பண்பாட்டைக் கோடிட்டுக் காட்டும் கட்டுரைகள், பலன் கூறும் வாரசாஸ்திரம், உலக அரங்கு போன்ற அம்சங்கள் மீண்டும் உயிர் பெற்று நடமாடுவதை எண்ணும்போது நெஞ்சம் குதூகலிக்கின்றது.

**த. கங்கா,**
மூளாய்.

---

கோபத்துடன் இருக்கும் மாமாவிடம் வந்த சிறுவன்: ''எக்ஸ் கியூஸ் மீ'' என்றால் என்ன மாமா?

மாமா; சும்மா இருடா மடையான்னு அர்த்தம்.

சிறுவன்: ''எக்ஸ் கியூஸ் மீ' மாமா.

●

மாப்பிள்ளை வீட்டார்: பிள்ளைக்கு என்ன சீதனம்?

பெண்வீட்டார்: தேங்காயைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் தருகிறோம்.

**- கா. யோ. கிரிதரன்**


# I C M A

எமது ஸ்தாபனம் இதுவரை
3000 மாணவர்களுக்கு மேல்
I C M A பரீட்சைக்குத்
தயார் செய்ததைக் கொண்டாடுமுகமாக
I C M A மாணவர்களுக்கு
அவர்களின் கட்டணத்தில் மிகப்பெரிய
சலுகை அளிக்கப்படவிருக்கிறது.

| COURSE | FEES | DATE OF COMMENCEMENT |
|---|---|---|
| ICMA Section A | Rs. 300/- | 3-12-83 |
| ICMA Section B | Rs. 300/- | 3-12-83 |
| ICMA Part I | Rs. 300/- | 10-12-83 |

விரிவுரையாளர்கள்:
Mrs. S. சுந்தரலிங்கம், M. நல்லந்துவன்
யூஜின் மரியாம்பிள்ளை, P. சிவபாதசுந்தரன்
உட்பட பிரபலமான பலர்

இலங்கையில் கணக்கியல் துறையில் மிக அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் ஸ்தாபனம் OXONIA INSTITUTE அதேபோன்று வட மாகாணத்தில் மிக அதிக மாணவர்களைக் கொண்டதும், 1978-ம் ஆண்டு முதல் ஸ்திரமாக நடைபெற்று 3000க்கும் அதிகமான I C M A மாணவர்களுக்குச் சேவை புரிந்து அவர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமானதும் CANTABIA INSTITUTE.

# CANTABIA INSTITUTE

21, MAIN STREET.
JAFFNA.
Phone: 24201




Personal Classes for
G. C. E. (A/L) தூய, பிரயோக கணிதம்
ஆசிரியர்: RAVIMOHAN
தற்பொழுது வகுப்புகள் நடைபெறும்
புதிய முகவரி
No: 74, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்)
(10023)



ஆரம்ப நிலையிலிருந்து
விசேட ஆங்கில வகுப்புகள்
SPOKEN ENGLISH COURSE
ஆசிரியர்: திரு. T N. பஞ்சாட்சரம்
BASIC ENGLISH Course
ஆசிரியர்: திரு. K சபாநாயகம்
ஆரம்பம் 7-12-83
✯ தொழில் செய்வோர்க்கும் ஏனையோருக்கும் ஏற்ற பயிற்சி
✯ இலவச பயிற்சிக் குறிப்புகள்
விபரங்களுக்கு:
ASTAN INSTITUTE
166/1, HOSPILAL ROAD — JAFFNA.



யாழ் நகர் ஸ்ரான்லி வீதியில்!
ஓர் நம்பகரமான நவீன தளபாடமாளிகை
"ருஜாந்தி பேணிச்சர்ஸ்"
யாழ் நகரில் தரமான தளபாடங்களை நியாய விலையில் பெற்றுக்கொள்ள சிறந்ததோர் ஸ்தாபனம்



ருஜாந்தி பேணிச்சர்ஸ்
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சியஸ்ரா, மெற்றோபோம், ஆர்ப்பிபோம் மெத்தைகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
500/- முதல் 12000/- வரை



நத்தார் பண்டிகையோடு
புதிய வருடத்தில்
உங்கள் பெறுமதிமிக்க முதலீடாக
யப்பானின் முதல்தரமான
நெஷனல் ரெலிவிஷன்களை ஆக்கிக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்
V. K. இராசரத்தினம்
பிரதான விற்பனையாள
(Key Deales) யாழ்ப்பாணம்.
95 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி-K. R விஜயா
கிரஹப் பிரவேசம்
(கலர்)
அடுத்தது
என் கடமை

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-15, 1-15,
4-15, 7-15
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
மூன்றும் பிறை
(வெள்ளிவிழா சித்திரம்)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி—சரிதா
கீழ்வானம் சிவக்கும்
(ஈஸ்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
மாதர் கூட்டம் திரளும்
3-வது வெற்றி வாரம்!
சிவாஜி-கே. ஆர். விஜயா
ஊரும் உறவும்
வண்ணத்திரை ஓவியம்

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
எம்-ஜி-ஆர், சரோஜாதேவி
நடித்த தேவரின்
தாயைக்காத்த
தனயன்
(புதிய பிரதி)
விரைவில்!
ஆனந்த ராகம்

கடைசி சந்தர்ப்பம்
இன்னும் இரண்டு
தினங்கள் மட்டும
Rajah JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
7-00 and 9-30
The Fighters
(Color) (Adults only)
An action Karate Film
Full of Suspence and
Thrills
30-11-83 முதல்
BATTLE GREEK
BRAWL
கராட்டி படம்

மனோகரா
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K R விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
இறம்பட நடித்த
வர்ணப்படம்
சத்திய
சுந்தரம்

Regal Jaffna
Daily 10-30 a. m. 2-30
4.45, 7-00 only
MICHAEL CAINE
The Island
(Scope-Color)
(action-packed-Thrilling)
ஈவிரக்கமின்றி கொலையும் கொள்ளையும் செய்யும் தீவிலுள்ள காட்டுமிராண்டி மனிதர்களிடம் அகப்படும் தந்தையும், மகனும், தப்புவதற்குச் செய்யும் முயற்சிகள். விறுவிறுப்புடன் உங்களையே மெய்சிலிர்க்க வைக்கும்
வெகுவிரைவில்
பயணங்கள்
முடிவதில்லை


# அலுவலகத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் ஆரம்பிக்கப்பட்ட பனம்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கத்தின் தற்காலிக அலுவலகத்தை 28ம் திகதி திங்கட்கிழமை காலை பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் திரு. க நடராசா திறந்துவைக்கவிருக்கிறார். இவ்வைபவத்தில்பனைத் தொழில் நிபுணர் திரு. கே. சம்பந்தம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். மண்டைதீவு மாதர் சங்க பயிற்சி நிலையத்தில் இந்த தற்காலிக அலுவலகம் திறக்கப்படவிருக்கிறது. (வண் - நிரு)


ரி஗ோ (யாழ். நகர்)
தினசரி
27-11-83 வரை
நீர்க்குமிழி
வருகிறது
நீதிபதி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜீ. ஆர்
சரோஜாதேவி
பணத்தோட்டம்
வெகுவிரைவில்
கார்த்திக் நடித்த
காற்றினிலே வரும்
கீதம்


## இன்று

[யாழ்ப்பாணம்]

கைதடி-நாவற்குழிப் பகுதி ஐந்து வீட்டுக் குடியேற்றத்திட்டத்திற்கருகாமையில் புதிதாக அமைக்கப்பட்ட அற்புத அன்னை ஆலயத்தை யாழ். ஆயர் அதி வந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இன்று ஞாயிறு அதிகாலை திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுத்து மக்கள் வழிபாட்டை ஆரம்பித்துவைப்பார்.


FOR SALE
Excellent Teak household furniture comprising of beds, almyrahs, office tables, dining tables, chairs, Divans with mattresses, Ornaments in Cabinets, Glassware, Brassware, Silverware, Kitchenware, Utensils etc.
Personal property of owner,
15, Colombogam Road, Jaffna.
10196

கடற்றொழில் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்
குத்தகைக்கு
3½ தொன் மீன் பிடி வள்ளங்கள்
விண்ணப்ப கால எல்லை 28/11/83-ல் இருந்து 14/12/83-ஆக பின்போடப்பட்டுள்ளது.
நிறைவேற்று முகாமையாளர்,
(10163) இ. க. கூ. யாழ்ப்பாணம்.

காணி தேவை
நாவாந்துறை, யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை,
நவாலி, சங்கரத்தை, சங்கானை
ஆகிய பகுதிகளில் 10 தொடக்கம் 30 பரப்புவரை விஸ்தீரணமுள்ள காணித்துண்டு பிரதான வீதிக்கு அண்மையில் போக்குவரத்து வசதிகளுடன் விலைக்கு தேவை. உடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
விளம்பர இல: 10099,
C/o "ஈழநாடு" யாழ்ப்பாணம். 10099

விற்பனைக்கு
திறமான தேக்குமர வீட்டுத் தளபாடங்கள், கட்டில்கள், அலுமாரிகள், காரியாலய மேசைகள், சாப்பாட்டறை மேசைகள், கதிரைகள், Divans, கண்ணாடி, பித்தளை, சில்வர் பாத்திரங்கள், சமையலறைப் பாத்திரங்கள்
மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகள்:-
15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். 10195

பிற்மன் (லண்டன்)
பரீட்சைகள்
1984 ஜனவரியில் யாழ். நகரில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 3-12-83 வரை நீடிக்கப்பட்டுள்ளது. 1984 ஜூன் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி 30-4-84. English Shorthand and Typewriting, Accounts, Office Practice மற்றும் பல பாட மேற்படி பரீட்சைகளுக்கான பாடத்திட்டம், விண்ணப்பபத்திரம், மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
OFFICE SKILLS
EXAMINATION CENTRE
(O S E C)
C/O STCA, 37 (149), Sivan Pannai Road,
Jaffna. (10151)

வகுப்புகள்
● DIPLOMA IN DRAUGHTSMANSHIP.
● DIPLOMA IN BUILDING CONSTRUCTION
● BUILDING QUANTITIES COURSE.
மேற்படி வகுப்புகள் எதிர்வரும்
1-1-84 ஆரம்பமாகவுள்ளன
15-12-83-க்கு முன் விண்ணப்பிக்கவும்,
விபரத்துக்கு: உயர்கலைக் கல்லூரி,
73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
10087

நாளை ஆரம்பம்: 28/11/83
திங்கள் 9-00 A M.
சுருக்கெழுத்து, தட்டெழுத்து
(தமிழ், ஆங்கிலம்)
பயிற்சி வகுப்புக்கள்
கொழும்பு பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
BITSMAN INSTITUTE
MANIPAY. 10132

நிரு டியூசன் சென்றர்
புகையிரதநிலையவீதி, கோண்டாவில்
G. C. E (A/L) 84 & 85
தூய பிரயோக கணிதம் நடைபெறுகின்றது.
அடுத்த பகுதி:
1. தூயகணிதம்: இருபடிச் சமன்பாடு
2, பிரயோக கணிதம்: சார்பு வேகம்
ஆசிரியர்:
A. பத்மநாதன்
10052

பதவி வெற்றிடம்
திருநெல்வேலியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பாரிய அலுமினிய, எவர்சில்வர் தொழிற்சாலைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கான ஆண், பெண் ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.
1. பொதுமுகாமையாளர்
2. விற்பனை முகாமையாளர்
3. தொழில் முகாமையாளர்
4. கணக்காளர்
5. கணக்கு லிகிதர்
6. தட்டெழுத்தாளர்
7. களஞ்சிய பொறுப்பாளர்
8. POWER PRESS OPERATOR
9. ஸ்பின்னர்கள்
10. பொலிசர்கள்
11 லேத்மன்
12. உதவியாட்கள்
13. இரவு பகல் காவலாளிகள்
14 வேலை பழகுனர்கள்
மேற்குறிப்பிட்டிருக்கும் பதவிகளுக்கான விண்ணப்பிப்பவர்கள் கல்வித்தகமை, அனுபவத்திறன், நற்சான்றுப்பத்திரங்களுடன் 30-11-83இற்கு முன்பாக விண்ணப்பிக்கவும்.
விளம்பர இல. 10038,
C/o ஈழநாடு லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.
(10038)

யூனிபோ — UNIFO
முப்பது வயதுக்குட்பட்ட அனுபவம் வாய்ந்த ஆண்பிள்ளை கோழிப்பண்ணை வேலைக்கு உடன் தேவை.
தக்க சான்றிதழ்களுடன் 30-11-83 காலை 10 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்குமிடையில் கீழ்காணும் விலாசத்திற்கு வரவும்.
பண்ணையில் தங்க விரும்புவோர் மாத்திரம் தெரிவு செய்யப்படுவர்.
ஐக்கிய குடும்பங்கள்
உணவு விவசாய ஸ்தாபனம்
(யூனிபோ)
பலாலி வீதி, உரும்பிராய்.

## நாவலனைப் பரவுவமே

காரேறு கார்த்திகை பேரேறு மாமகம்
சுக்கிரவார சத்தமி
சீரேறு பிரமாதி சிவன்பதஞ் சென்றடை
நாவலர் குருபூ சைநாள்
பேரேறு ருதிரோற் காரி புண்ணிய
பத்துஒன்று ஞாயிறுத் திருநாள்
ஏரேறு தமிழ்குலஞ் சீர்சைவந் திளைத்தேறப்
பேறுறு பெருமானைப் பரவுவமே.

சைவசித்தாந்தப் பண்டிதர்
நா. கனகரத்தினம்

## உலகைச்சுற்றி....

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதங்களுக்குள்ளாகும்.

தானே உருவாக்கி, தானே தலைமையும் தாங்குகின்ற பொதுநலவமைப்பினை - அதன் அங்கத்துவ நாடுகளினைப் பொறுத்த கடப்பாடுகளைக் காட்டிலும், ஒரு இராணுவ அணியைப் பொறுத்த கடமைகளை முக்கியமானவையாகக் கருதுகின்ற போக்கினை பிரிட்டன் கைவிடவேண்டும்.

இவ்வாறான போக்கினாலும், அதில் உருவாகக்கூடிய பிரச்னைகளாலும் இந்த அமைப்பின் பொதுநலம் என்ற அடிப்படையே அடிபட்டுப்போகும் அபாயம் உருவாகியுள்ளது.

மெலியாரை வலியார்வாட்டுகின்ற வழக்கோ அன்றி 'முதல்தட்டு', இரண்டாம் தட்டு' எனப்பொதுலவமைப்பு நாடுகள் மத்தியில் மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டுவதோ பொதுநலக் கோட்பாட்டுக்குப் புறம்பானது; அதற்குக் குழி பறிக்கக்கூடியது.

சமாதானம், அனைத்து மக்களினதும் சமத்துவம், சர்வதேச வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஆக்கிரமிப்பினை நிராகரிப்பது ஆகிய புனித இலட்சியங்களை உயர்த்திப் பிடிப்பதில் பொதுநலவமைப்பிலுள்ள முற்போக்கு நாடுகள் காட்டக்கூடிய உறுதியிலும் சங்கற்பத்திலுமே இந்த அமைப்பின் பயனுள்ள எதிர்காலம் தங்கியுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி. நேசமலர் (நல்லபிள்ளை) Roberts

உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. Roberts சின்னத்தம்புவின் அன்பு மனைவி நேசமலர் (நல்லபிள்ளை) 25 11-83ல் காலமானார்.

இவர் ரட்ணராஜா, Alice, Rose, Spainல் இருக்கும் Grace, Sister Lily Roberts (C.P.M. கொள்ளுப்பிட்டி) சபாரட்ணம் ஆகியோரின் அருமைத் தாயாரும், மனோகரன், அகிலராணி, செல்வமணி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஜெயமலர் நபசிவாயம், மாமலர் அருளையா, முத்துராஜா, Edward ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை (27-11-83) பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக, கொட்டடி சேமக்காலை பென்றிக் கோஸ்ரல் பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், சிநேகிதர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

10199

## மரண அறிவித்தல்

### திரு. எஸ். பி. மயில்வாகனம்

(இலங்கை வானொலி முன்னாள் அறிவிப்பாளர்)

இலங்கை வானொலியின் முன்னாள் அறிவிப்பாளர் எஸ். பி மயில்வாகனம் 25-11-83ல் லண்டனில் காலமானார். காலஞ்சென்ற கு. சி. பொன்னம்பலம் (பவுண், இராசம்மா பொன்னம்பலம் ஆகியோரின் புதல்வரான இவர், இலங்கை வானொலி முன்னாள் அறிவிப்பாளர் திருமதி செந்திமணி மயில்வாகனத்தின் அன்புக்கணவரும், ரமணன் (யப்பான்), யசோதா (நைஜீரியா), சசிதரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் மில்வி (யப்பான்), சரவணபவன் (நைஜீரியா), இந்திராணி (லண்டன்) ஆகியோரின் மாமனும், திருமதிகள் பராசக்தி சுப்பிரமணியம், நல்லநாயகி திருநாவுக்கரசு, கண்மணி பாலசுப்பிரமணியம், திரு. சிவராசா (மேற்கு ஜேர்மனி), செல்லம்மா நாகரத்தினம், பாக்கியம் குழந்தைவேலு, இரத்தினம் சிவகுரு ஆகியோரின் சகோதரரும். திருமதி செந்திச்செல்வம் இரத்தினதிக்கம், செந்திராஜா (மலேஷியா), V சுப்பிரமணியம், K. திருநாவக்கரசு, N. பாலசுப்பிரமணியம், திருமதி குணம் சிவராசா ஆகியோரின் மைத்துனரும், அனுசுயா, நீலன், சோபினா, சுகன்யா, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் தகனக் கிரியை 57, கின்சேல் ரோட், பேக்காம், லண்டன் S. E. 154, H. J., U. K.யில் நடைபெறும்.

95, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: க. கந்தசாமி
க. முருகரட்ணம்

10190

## இன்று

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக 1ம் வருட விவசாயபீட மாணவர்களின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (மா)

## பம்பாய் டெஸ்ட்

## இந்தியா- 463

(பம்பாய்)

இந்திய-மேற்கிந்திய அணிகளுக்கிடையில் பம்பாயில் நடைபெறும் 4வது கிரிக்கெட் டெஸ்டில் இந்தியா 1வது இன்னிங்ஸில் 463 ஓட்டங்களை எடுத்துள்ளது. இமானி 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பினி 65, ரவிசாஸ்தி 77 ஓட்டங்களை எடுத்தனர்.

மேற்கிந்திய அணியினர் ஓட்டமெதுவும் எடுக்கது ஆடிக் கொண்டிருக்கின்றனர். (சூ)

## இலங்கைமீது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிரட்டல்களிலிருந்து விடுபட்டு வாழ ஜனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடிய நம்பிக்கையான அமைதியான அமெரிக்கா போன்ற பாதுகாப்பாளரின் உதவியைத்தான் நாடமுடியும்'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கெ)

## உமாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒலிபரப்பு உமாமகேஸ்வரன் தலைமையிலான தீவிரவாதஇயக்கத்தினால் நடத்தப்படுகிறதென்பதும் இரகசியப் பொலிசாருக்குத் தெரியவந்துள்ளது.

ஒலிபரப்புப் பற்றிய விபரங்கள் வடக்கிலும் கிழக்கிலும் பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஒலிபரப்பில் உமாமகேஸ்வரன் இயக்கத்தின் இரண்டாம் மூன்றாம் நிலை தலைவர்களாலேயே குரல் கொடுக்கப்படுவதாகவும் உமாமகேஸ்வரன் இன்னமும்உரையாற்றவில்லையென்றும் பொலிசார் கருதும் அதேவேளை இதிலிருந்து உமாமகேஸ்வரன் இன்னமும் இலங்கைக்கு வரவில்லையென்பது தெரியவந்துள்ளது என்றும் நம்புகின்றனர்.

## இடையூறுகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அக்டோபர், நவம்பர் மாத சம்பளங்களை உடனே அவரவர் வேலை செய்யும் கல்விக் கந்தோரில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வேலைக்குத் திரும்பும் பெண் ஆசிரியைகளுக்கும் இதே முற்பணம் வழங்கப்படும். அக்டோபர் 13ம் திகதி தொடக்கம் வேலைக்குத் திரும்பும் வரை எடுத்த லீவு காலத்தை அவர்கள் வேலைக்குத்திரும்பியதும் ஆராயப்பட்டு சுமூகமான ஒழுங்கு செய்யப்படும்.

பெண்கள் வேலைக்கு திரும்ப முடியாதவிடத்து அவர்களின் இடமாற்ற விடயம் மிக விரைவில் ஆராயப்பட்டு ஆவன செய்யப்படும். அவர்கள் வேலைக்குத் திரும்பும் வரையுள்ள காலம் எப்படியான லீவாகக் கணிக்கப்படுவது என்பது பற்றியும் முடிவு செய்யப்படும்.

ஒய்வு யெறுவது சம்பந்தமாக 20 வருடம் சேவை செய்த பெண் ஆசிரியைகள் முழுச்சம்பளத்துடன் ஒய்வுபெற அனுமதி வழங்கப்படும்

தொண்டர் ஆசிரியர்களாக தற்போது கடமை ஆற்றுபவர்கள் அவ்வப் பாடசாலையின் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் உடனடியாக இலங்கை ஆசிரிய காங்கிரஸின் பொதுச் செயலாளருக்கு முழுப்பெயர், பிறந்த திகதி, பாடசாலை விலாசம், தற்போதைய வயது என்பவற்றை அறியத் தரவும். (மா)

## புலவர் நாவில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களின் தனிப்பெரும் தலைவராயிருந்த தேசியவீரர், தேசபிதா எனவே புகழ் பெற்றிருந்தார். அவர் இலங்கை வாழ் சமூகத்தவர் எல்லோருக்கும் காய்தல் உவத்தலின்றி நடுநின்ற நன்நெர் சோடு சேவை செய்த அருமைப்பாட்டினை 1969-ம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற பெருவிழாவொன்றில் அமரர்களான கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்களும், அல்ஹாச் ஏ. எம். ஏ. அசீஸ் பெரியாரும் ஆணித்தரமாகப் பேசினார்கள்.

இராமநாதனின் அறிவாற்றலால் உண்டான பேச்சு வன்மையைச் சொந்த நாடன்றி இந்தியா. மலேசியா, இங்கிலாந்து, அமெரிக்கா. ஐரோப்பிய நாடுகள் முதலிய பிறநாடுகளும் கேட்டு மகிழ்ந்தன. தமிழ்நாட்டில் எழுபத்தேழு ஆண்டுகள் சைவம் வளக்கும் சைவசித்தாந்தப் பெருமன்றம் முதலாண்டு விழாவைச் சிதம்பரத்தில் நடத்தியபோது தலைமை தாங்கிய இராமநாதனின் பேச்சை இன்றுந்தான் பேராசிரியர்கள் படித்துப் போற்றுகின்றார்கள்.

இராமநாதன் அமெரிக்காவுக்குச் சென்று சைவசித்தாந்தம் பேசிய பெருமையை அந்நாட்டவர் பெரிதும் கொண்டாடினர். அமெரிக்கப் பெரியாராய மைறன் பெல்ப்ஸ் என்பாரின் அழைப்பை ஏற்று அங்கு சென்று நயம்படச் சைவம் பேசிய பெருமையை தமிழ்நாட்டு முதுபெரும் புலவராய அரசஞ் சண்முகனார் பல பாடல்களிற் பாராட்டியுள்ளார். புகழ் பெற்ற சங்கராசாரியரும் இந்திய நாட்டுக்கப்பால் இந்து சமயத்தைப் பேசவில்லை ஆனால் இராமநாதனே அமெரிக்கா முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்று பேசியுள்ளார் என்பர்.

''புகழ்பெற்ற சங்கரும்
பரதகண்டத்
தார்க் கன்றிப் புகன்ற
தில்லை
அகல்வானத் தாதவனும்
நம்பகலில்
பார்த்தறியாஅமெரிக்காவும்
தகவுடைய பிறநாடு
நீசென்று
ஞானமொழி தழைப்பப்
பெய்தாய்
மிகவுடை நின் கீர்த்தி
யெம்மனோ
ரொரு நாவல் விளம்பற்
பாற்றோ''

அரசஞ்சண்முகனார் இராமநாதனைப் புகழ்ந்து பாராட்டி அந்தாதத் தொடையிற் பாடிய பல பாடல்களில் அவரை இல்லற ஞானியாய சனகன் என்பர். சுகப்பிரமம் என்பர். தென்மொழியில், வடமொழியில், ஆங்கிலத்தில் புலமை நிறை மாண்பு பெற்றவர் என்பர். கல்விக்கடலான இரமநாதனுக்கு முன் தாமெல்லோரும் பெற்ற கல்வி, குளம் படைத்த நீர் என்பர்.

தேவாலயப்பணி, வித்தியாலயப்பணி முதலாய அறங்களோடு முகிலனைய கொடை வளமும் பெற்றுயர்ந்தவர் இராமநாதர் என்பர். இன்னும் கல்வியினால், செல்வத்தால், ஈகையினால், ஓகையினால், கருணை தன்னால், நல்வினையால், யோகத்தால், ஞானத்தால், மோனத்தால், மாட்சியால் தொகுதி பெற்ற இலங்கைத் தேசியவீரர் என்பர்.

தேசியவீரர் கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் 16-4-1851ல் தோன்றி 26-11-1930ல் மறைந்தவர் அவர் எண்பதாண்டுகள் வாழ்ந்து ஐம்பதாண்டுகள் செய்த பெருஞ்சேவையை அவர் மறைந்து ஐம்பத்திமூன்றுண்டுகளாகியும் மக்கள் மறக்கவில்லை. அவர் 1923-ம் ஆண்டு கூடிய சைவ வித்தியாவிருத்திச் சங்கம் 188 பாடசாலைகளைப் பரிபாலித்துச் சைவமும் தமிழும் வளர்த்தது. அவர் அமைத்த கலாசாலைகள் பல்கலைக்கழகமாகப் பரிணமித்துள்ளன.

## பார்த்தசாரதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிகர் சமனாக வாழும் வகையில் தமிழர் பிரச்னைக்குத்தீர்வு காணப்படும்.

பொதுவாக கல்வி, வேலை வாய்ப்பு துறைகளில் கூடிய அதிகாரங்களைக் கொண்ட பிராந்திய அமைப்பு முறை உருவாக்கப்படவுள்ளது.

வடக்கும், கிழக்கும் ஒரே மாநிலமாக அமைவதா? அல்லது இரண்டு மாநிலமாக அமைவதா என்பது குறித்து இரு சாராருக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற போதும், இப்பிரச்னையிலும் விரைவில் சுமுகமான தீர்வு ஏற்படுமென்று அவர் தெரிவித்தார்.

மத்திய மலைநாட்டிலுள்ள தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட பிராந்திய இராணுவ அணியொன்றை உருவாக்கவேண்டுமென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், மற்றும் ஸ்தாபனங்களும் ஜனதிபதியிடம் கேட்டுக் கொள்ளவுள்ளன.

இப்பிராந்திய இராணுவ அணி அமைப்பது தமிழர் பிரச்னைபற்றிய இப்பேச்சு வார்த்தைகள் முடிவுற்ற பின்னர்தான் ஜனதிபதியிடம் வற்புறுத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (சூ)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவசுப்பிரமணியம் மனோன்மணி

திருமதி சிவசுப்பிரமணியம் மனோன்மணி காலமானார் இவர் வீரவாகு சிவசுப்பிரமணியம் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்) அவர்களின் அருமை மனைவியும், டாக்டர் தியாகராசா (கிருஷ்ணு யோகேஸ்வரன் (குமார்), சிவகுமார் (ராஜன்) ஆகியோரின்அன்புத் தாயாரும், திருமதி மங்களா தியாகராஜா, காலஞ்சென்ற டாக்டர் எஸ். தியாகராஜா ஆகியோரின் அன்புப் புதல்வியும், ரம்யா, சாவித்திரி, தமரா ஆகியோரின் அன்புமாமியாரும், பேராசிரியர் ரி, விஸ்வநாதன், ரி. வைரவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜனகன், யோகன், ஷனலி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவர். தகனக் கிரியைகள் 28-11-83 திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும். இறுதி யாத்திரை இல. 4, ஹோட்டன் டெரஸ், கொழும்பு-7 இல்லத்திலிருந்து காலை 7-30 மணிக்கு புறப்படும். 10167

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கௌவிக்கோவில் மேற்கு வீதி, 53-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number 8 100236/81. Eelanadu- P. O. Box, 49, Telephone, 22389 —24126.